நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


**கண்டதுண்டோ எங்கேனும் காசினியில்**

கண்டதுண்டோ எங்கேனும் காசினியில் டிங்கிரி போல்
மண்டை பிழைத்தோரை மருந்துக்கும்- சுண்டுவிரல்
சொத்தியனை கூட்டில் அடைத்துவிட்டால் சொல்லுமாம்
உத்தமர் இவரென் றுலகு.

ஈழமோகம்

இதழ் 47 மே19 - யூன்1, 1994 விலை7/=

## புத்தளம் - முஸ்லீம் மீனவர் சொத்துக்கள் தீக்கிரை

# படையினர் பாதுகாப்புடன் இனவெறியாட்டம்

புத்தளம் மாவட்டத்தில் உள்ள சேரக்குளி கடற்கரையில் வைத்து கரைத்தீவு முஸ்லீம் மக்களின் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்திற்கு இலங்கை அரசபடையினர் பாதுகாப்பு அளித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்பிரஸ்தாப காடைத்தனத்தின் போது 28 கண்ணாடி இழைப்படகுகள், 45 மோட்டார் இயந்திரங்கள், 13 கட்டு மரங்கள் 17 வாடிகள் உட்பட பல உபகரணங்களும் 3 ஐஸ் வாடிகளும் தீக்கிரையாக்கப் பட்டுள்ளன. இச்சம்பவம் நடந்த இடத்தில் இருந்து ஒரு சில யார் தூரத்திற்கப்பால் உள்ள காவலரண் ஒன்றில் இருந்த பொலிஸாரும் அவர்களுடன் சேர்ந்து தீவைத்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புத்தளம் பிரதேசத்தில் உள்ள முஸ்லீம் கிராமங்களைச் சிங்கள மயமாக்கும் திட்டமிட்ட அரச நடவடிக்கைகளின் ஒரு அம்சமாகவே இச்சம்பவம் நடந்துள்ளதாகவும் நேரிற் சென்ற எமது செய்தியாளருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. இச்சம்புவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது;



எரிக்கப்பட்ட இன்ஜின்கள்

## பொலிஸாரும் சேர்ந்து வைத்த தீ

கடந்த 10ம் திகதி நள்ளிரவில் வண்ணாத்திவில்லு பிரதேசத்திலுள்ள சேரக்குளி முஸ்லீம் கிராமத்தின் மீனவர்கள் மீதான இக்காடைத்தனத்திற்கு காரணமான சம்பவம் இரு இளைஞர்களுக்கிடையிலான சிறிய சண்டை ஒன்றிலிருந்து தொடங்கியதாக தெரிய வருகிறது. சில நாட்களுக்கு முன் கரைத்தீவு படமாளிகை ஒன்றில் படம் பார்த்துக் கொண்டிருந்த மனாஸ் எனும் இளைஞன் மீது மல்லியா என்ற சிங்கள இளைஞன் கால் போட்டுள்ளார். இது வாக்குவாதமாக எழுந்து சண்டையாக மாறியதாயினும் அன்று சமாதானப்படுத்தப்பட்டுவிட்டது. ஆயினும் இன்னொரு நாள் வண்ணாத்தி வில்லுப்பகுதியில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியின் போது மல்லியா என்ற மேற்படி நபர் காவலுக்கு நின்ற இராணுவத்தினரை ஏவி மனாஸ் மீது தாக்குதலை நடாத்தியுள்ளார். பதிலாகக் கரைத்தீவில் வைத்து மனாஸினால் மல்லியா தாக்கப்பட்டார்

இச்சம்பவங்களின் பின்னர் சேரக்குளியில் இனக்குரோதங்களைப் பரப்பி வரும் சிங்கள மீனவர்களில் ஒருவரான மார்க்கஸ் என்பவர் அப்பகுதியில் மேற்படி சம்பவத்திற்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்று சிங்கள இளைஞர்களைச் சேர்த்துக் கொண்டு மனாஸைத் தாக்கியதுடன் பொய்க் குற்றங்களைச் சுமத்தி பொலிஸாரிடம் அவரை ஒப்படைத்துள்ளனர். பின்னர் ஜவாகர் என்பவரால் மனாஸ் பிணையில் எடுக்கப்பட்டார்.

இவற்றின் தொடர்ச்சியாக கரைத்தீவுக்கு கடந்த 10ம் திகதி மார்க்கஸ் வந்த போது மனாஸ் குடும்பத்தவர்கள் அவரைத் தாக்கியுள்ளார்கள். இதனால் காயமடைந்த மார்க்கஸ் வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளார். அதன் பின் அன்றைய நள்ளிரவிலேயே சேரக்குளி சிங்கள மீனவர்கள் பலர் அங்கு காவலுக்கு இருந்த மரிக்கார் காலிதீன் என்பவரை மிரட்டி ஒரு குடிலுக்குள் அடைத்துவிட்டு தமது காடைத்தனத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். ஒவ்வொரு எஞ்சினிலும் உள்ள பெற்றோலையும் சில பெற்றோல் குண்டுகளையும் பயன்படுத்தியே இவை தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. தீக்கிரையாக்கப்பட்ட இடத்தில் இருந்து 10-15 அடி தூரத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்ட பங்கர் ஒன்றில் 4 பொலிஸார் காவலுக்கு நிற்பது வழக்கம்.

காவலாளி காலிதீன் இதுபற்றிக் கூறிய போது "சிங்கள மீனவர்களோடு பொலிஸாரும் சேர்ந்தே படகுக்கு தீ வைத்தனர்" என்றார். எரிந்து கொண்டிருந்த தீ காலிதீன் அடைக்கப்பட்டிருந்த குடிசைக்கும் பரவிய போது அவர் மயிரிழையில் தப்பி வெளியே வந்து நெருப்பில் இருந்து தப்புவதற்காகக் கடலில் குதித்துள்ளார்.



எரிக்கப்பட்ட படகுகள்

## எரிந்து முடிந்தபின் வந்த கடற்படையினர்

விடியற்காலையில் கடற்கரையில் மக்கள் குழுமிய போது எரிந்த படகுகள் அருகே கடற்படையினர் காணப்பட்டனர், அவர்கள் "நாங்கள் இரவு கடல் ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருந்த போது இங்கு நெருப்பு எரிவதை தூரத்திலிருந்து கண்டே வந்தோம். கிட்ட வந்த போது பல படகுகள் எரிந்து விட்டன. எஞ்சியதை கடலுக்குள் இழுத்து விட்டோம்" என்றார்கள். எரியும் வரை பார்த்துவிட்டு இப்படிச் சொல்கிறார்கள் என்றார் தனது கட்டுமரத்தைப் பறிகொடுத்த ஒரு மீனவர். மொத்தம் 45 என்ஜின்கள், 28 கண்ணாடி இழைப் படகுகள், 3 கடைகள் 17 வாடிகள், 3 ஐஸ்வாடிகள், 3 கட்டுமரங்கள் என்பன அடங்கிய 2கோடி ரூபாய் பெறுமதியான பொருட்கள் முற்றாக அழிந்தன.

## பெஸ்டஸ் பெரேராவுக்கு கறுப்புக்கொடி

மே 14ம் திகதி அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா இம்மக்களின் பிரச்சினையைக் கேட்டறிவதற்காகவும் சமாதானம் செய்வதாகவும் கூறிக் கொண்டு கரைதீவு வந்து கூட்டமொன்றை ஒழுங்கு செய்திருந்தார். இக்கூட்டத்திற்கு அப்பகுதி முஸ்லீம் மக்கள் கறுப்பு கொடிகள் போட்டு கடைகளை அடைத்து ஹர்த்தால் செய்து கூட்டத்தையும் அவரின் வருகையையும் பகிஷ்கரித்தனர். ஒருவர் கூட அவரை சந்திக்க வராதது கண்டு அமைச்சர் புலம்பிக் கொண்டு போய்விட்டார்.

வண்ணாத்திவில்லு பிரதேச சபையின் உபதலைவர் பி.வி.எம்.நிஸார் இதுபற்றிக் குறிப்பிடும் போது "நான் ஐ.தே.க சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவன். இங்கு வெவ்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் இருந்தாலும் எங்களுக்கென்று ஒரு பிரச்சினை வந்து விட்டால் எல்லோரும் ஒன்றுபட்டு விடுவோம். அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா வந்த போது கூட நாங்கள் கறுப்புக் கொடி



அருகிலுள்ள பொலிஸ் காவலரன்

நன்றி - நூலகத்திட்டம்



# மெல்லத் தமிழினி

## ஆறு கடக்கும் வரை தான் அண்ணனும் தம்பியும்

தமிழ் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு கூறுவது தொடர்பாக எப்போதுமே சிங்கள அரசியல் கட்சிகள் கடைப்பிடித்து வரும் நெறி முறை ஒன்று இருக்கிறது.

'தமிழ் மக்களது பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக எமது கட்சி ஆராய்ந்து வருகிறது. அது தனது தீர்வினை விரைவில் முன்வைக்கும்.'

இந்த 'விரைவில்' என்பது ஒருபோதும் நடைமுறைக்கு வருவதே இல்லை.

இப்போது இவ்வாறு அறிவித்திருப்பவர் சந்திரிகா.

தமிழ்மக்களின் பிரச்சினையை ஏதோ இன்று நேற்று வந்த பிரச்சினை என்பது போலவும், அந்தப்பிரச்சினை நாட்டின் ஆயிரம் பிரச்சினைகளோடு சேர்க்கப்படுகின்ற ஒரு ஆயிரத்தோராவது பிரச்சினை என்பது போலவும் அவர் குறிப்பிட்டுள்ள இந்தக் கருத்து அண்மையில் தமிழ் வார மஞ்சரி ஒன்றில் வெளியாகியிருந்தது.

சந்திரிகா உண்மையில் புத்திசாலி.

அவருக்கு எந்த இடத்தில் எதைக் கதைக்க வேண்டும்: யாரிடம் எதைச் சொல்ல வேண்டும் என்பது தெரிந்திருக்கிறது.

ஒரு தேர்ந்த அரசியல் வாதியின் தந்திரங்களை அவர் கற்றுத் தேர்ந்தவராக இருக்கிறார்.

பல அரசியல்வாதிகட்கு இது தெரிவதில்லை.

குறிப்பாக இன்றைய ஜனாதிபதிக்கு. அவர்தான் நினைப்பதை அப்படியே சொல்லி எல்லோரிடமும் வாங்கிக் கட்டுகிறார்.

சந்திரிகா நினைப்பதை சொல்வதில்லை செய்பவர்- செய்யப்போவதை சொல்வதில்லை.

சொன்னாலும் முன்னாள் ஜனாதிபதி போல ஏதாவது அழகிய வார்த்தைக்குள் மறைத்து அதைச் சொல்லும் கெட்டித்தனம் அவருக்கு இருக்கிறது.

தனியார் மயமாக்கலை மக்கள் மயமாக்கல் என்றார் பிரேமதாச.

'மனிதாபிமானத்துடன் கூடிய திறந்த பொருளாதாரம்' என்கிறார் சந்திரிகா.

தமிழ் மக்கள் பிரச்சினையிலும் அவ்வாறு அவர் அறிவித்திருக்கிறார்.

'ஆறு கடக்கும் வரை தான் அண்ணையும் தம்பியும்' என்ற முன்னாள் தலைவர்களின் கோட்பாடுதான் சந்திரிகாவினதும் என்பது தமிழ் மக்களுக்குப் புரியாது என்ற நம்பிக்கையில் அவர் இப்படிச் சொல்கிறார்.

எங்களுக்கு உண்மையில் இது புரியாதுதானா?

## வானமேறி வைகுந்தம் போன கதை

''கூரையேறிக் கோழிபிடிக்க மாட்டாதவன் வானமேறி வைகுந்தம் போவதாகச் சொன்னானாம்'' என்று ஒரு பழமொழி வழக்கிலிருக்கிறது எல்லோருக்கும் தெரியும்.

உள்நாட்டிலேயே சமாதானத்தை நிலைநாட்ட முடியாதவர்கள் ஐ.நா படையில் சேர்ந்து மொசாம்பிக் போனார்கள் என்பது புது மொழியாகியுள்ளது இப்போது.

கோழி பிடிப்பதுக்கும் வைகுந்தம் போவதுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

அவனுக்கு துணிவு இல்லை என்பதுதான் இரண்டையும் இணைத்தது.

இலங்கைப்படையைப் போலவே ஐ.நா.படையும் உண்மையில் சமாதானத்துக்காக இயங்குவதில்லை என்பது தான் இலங்கைப் பொலிஸார் ஐ.நா.படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதற்கான தகுதிபோலும்.

ஐக்கிய நாடுகளின் படை என்பது ஐக்கிய ராச்சியத்தின் (United states) படையென்றளவுக்கு குறுகிவிட்டதாக உலகம் எங்கும் விமர்சனங்கள் எழுந்து கொண்டிருக்கும் போது, இலங்கை அரசு தனது பொலிஸ் அதிகாரிகளை படையில் கடமைபுரிய அனுப்பி வைக்கிறது.

ஒருவேளை இப்போதுதான் ஐ.நா. சபைக்கு அந்தத் தகுதி வந்திருப்பதாக இலங்கை அரசு கருதுகிறதோ என்னவோ?

வடக்குக் கிழக்கில் நிலவுவது பயங்கரவாதப் பிரச்சினை என்கிற நமது ஜனாதிபதிக்கும், அமெரிக்காவை தவிர்ந்த மற்றெல்லா நாடுகளிலும் (குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க நாடுகளில்) பயங்கரவாதமே கோலோச்சுவதாக கூறும் அமெரிக்காவுக்கும் சிந்தனையில் நல்ல பொருத்தம் இருக்கத்தான் செய்கிறது.

அந்தப் பொலிஸாரை வாழ்த்துவோம்!

## என்ன இப்படிக் கேட்கிறீர்கள்?

கொழும்பிலும் புத்தளத்திலுமுள்ள முஸ்லீம் அகதிமுகாம்கள் சிலவற்றைப் பார்வையிட்ட போது ஒரு நண்பருக்கு கிடைத்த அனுபவத்தை இப்படி விபரித்தார்:

''நம்பவே முடியவில்லை! இத்தனைக்குப் பிறகும் அவர்கள் புலிகள் மனம் மாறுவார்கள்; நாம் ஊருக்குத் திரும்பி போகலாம்; போக வேண்டும் என்ற நம்பிக்கையோடு தான் இருக்கிறார்கள்''

''அங்கே ஏன் போக விரும்புகிறீர்கள்'' என்று கேட்டாராம் நண்பர். ''என்ன இப்பிடிக் கேட்கிறீங்கள்.... அதுதானே எங்கட ஊர். இங்கை நாங்கள் என்ன இருந்தாலும் அகதிகள் தானே? புலிகள் விரட்டியது உண்மைதான். அதற்காக அது எங்கட ஊர் இல்லையென்று ஆகிவிடுமா? நாங்கள் மனிதராக வாழ்ந்த எங்கடை சொந்த மண் அது தானே... இங்கை எங்களாலை ஒட்ட முடியவில்லை... எப்படா இங்கிருந்து போவம் எண்டிருக்குது!''

''தாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண்ணல்லவா அது. அதை எப்படி மறக்க முடியும்? ஆனால் தமிழருக்கு மட்டுமான தமிழீழம் என்றோ, முஸ்லீம்கள் தமிழீழத்துக்கு எதிரானவர்கள் என்றோ கருதும் புலிகளைப் பற்றிப் பேசும் போது இன்னமும் 'பெடியன்கள்' என்று அவர்கள் உரிமையுடன் சொல்லுவதைக் கேட்க எனக்கு நம்பத்தான் முடியவில்லை.... இது எல்லாம் புலிகளுக்கு விளங்குமோ என்னவோ?''

அவர் கேட்ட போது எனக்குப்பட்டதும் அதுதான் . இதைப் புலிகள் எப்போது விளங்கிக் கொள்ளப் போகிறார்கள்?

அஷ்ரப்பின் கடிதத்துக்குப் பதில் சொல்லாவிட்டால் கூடப் பரவாயில்லை; முஸ்லீம் மக்களை திரும்பி வருமாறு எப்போது பிரபாகரன் கூப்பிடப் போகிறார்?

தாமதிக்கிற ஒவ்வொரு கணமும், ஒரு இனத்தை அநியாயமாக வதைக்கின்ற கணங்களாகப்போய்க் கொண்டிருக்கின்றன. புலிகளோ பிரபாகரனோ இதைப்பற்றி சிந்திப்பார்களா?

## சோழியன் குடுமி சும்மா ஆடுமோ?

தனது நாட்டு மக்களையே முட்டாள்கள் என்று நினைக்கிற ஒருவர் ஜனாதிபதியாக இருக்கும் நாடு எது?

நிச்சயமாக அது நாம் வாழும் இந்தப் பொன்நாடுதான்.

டிங்கிரிபண்டா விஜேதுங்க அவர்களில் கடந்த மே முதலாம் திகதியிலிருந்து ஏற்பட்டிருக்கும் மனமாற்றத்தைப் பார்க்கும் ஒருவருக்கு நிச்சயம் இப்படி ஒரு எண்ணம் தோன்றாமல் இருக்கமுடியாது.

திடீர் வரிச்சலுகை, உணவுப் பொருட்கள், உடுதுணி என்பவற்றிற்கான விலைக்குறைப்பு, இறக்குமதித் தீர்வைக்குறைப்பு என்கின்ற மேதின போனஸ் திட்டங்களை அவர் திடீரென அறிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணத்தை மாதாமாதம் அறிவிக்குமாறும் அது மக்களுக்கு இலகுவாக இருக்கும் என்றும் அறிவித்துள்ளார்.

ஏன் இந்தத் திடீர்க் கரிசனை?

இரவோடிரவாக சொல்லாமற் கொள்ளாமல் பொருட்களின் விலையை ஏற்றுவதற்கென்று ஒரு சரித்திரத்தையே உருவாக்கி வைத்தது இந்த யூ.என்.பி அரசு.

கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்கள் உட்பட்ட பல குற்றவாளிகளை பதவி வழங்கிக் கவுரவித்தது இவரது அரசு.

ஆட்களைக் கடத்தி அதிகாரத்தைப் பிடிக்க முயன்றதும் இதே டி.பியார் அரசுதான்.

ஊழல் விசாரணைக் கொமிஷன் தேவையற்றதென அறிவித்ததும், எம்பிலிப்பிட்டிய புதைகுழிகளை மூடிமறைத்ததும் இவர் காலத்தில் தான்.

இப்போது திடீரென தூய்மையான, மக்களுக்கு அவர்களது கஷ்டங்களுக்கு நிவாரணம் தேடுகிற ஆட்சியாக தனது கட்சியை காட்ட முயல்கிறாரே ஏன்?

சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பார்கள்.

விஜயதுங்காவுக்கு குடுமி இல்லை.

ஆனால், இந்நாட்டுமக்களை வெறும் குடுமி வைத்தவர்கள் என்று நினைக்கிறார் என்று மட்டும் புரிகிறது.

ஆனால் இந்தக் குழையடிப்புக்கு செவிசாய்க்க மக்கள் ஒன்றும் முட்டாள்களல்லவே!

டி.பியார் அப்படி நினைத்த போதும்!

# சரிநிகரின் நாட்குறிப்பு

மே-2

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் மூன்று விசேட அதிரடிப்படை முகாம்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

மே -5

தமிழகத்தில் 1629 இலங்கைப் போராளிகள் விசேட தடுப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார்.

மூதூர் கடற்பகுதியில் வள்ளம் ஒன்றில் மீன்பிடிக்கச் சென்றவர்களின் மீது நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் நியாஸ் என்பவர் கொல்லப்பட்டார்.

ஓமந்தை பன்றிக்கு உய்த்த குளம் என்ற இடத்தில் நடாத்தப்பட்ட குண்டு வீச்சில் பெரியதொரு வீடு சேதமடைந்ததாக தெரியவருகிறது.

ஏறாவூரில் புலிகளின் பகுதித் தலைவரான மணி என்பவர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதாக இராணுவ பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். கொக்கட்டிச் சோலையில் அதிரடிப்படையினரின் தாக்குதல் காரணமாக தயான், கடாபி என்ற இருவரும் கொல்லப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அம்பாறை சென்றால் காம்பில் உள்ள 14ம் கொலனியில் கடமையாற்றிய ரிசர்வ் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் திஸநாயக்கா, பொலிஸ் கான்ஸ்டபிள் றஞ்சித் பியசிறி ஆகிய இருவரும் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மே- 7

மன்னார் பள்ளிமுனை பொலிஸ் காவல்நிலையம் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டதுடன் ஐவரைக் காணவில்லை எனத் தெரிய வருகிறது.

மணலாறு கறுத்தார் குளத்தில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே மோதல் நடைபெற்றதாகவும் பலர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தில் நடைபெற்ற மோதலில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஆறு படையினர் படுகாயமடைந்தனர். அத்தோடு 8 புலிகள் பலியானதாக இராணுவவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மே- 8

திருகோணமலை கட்டைபறிச்சான் பகுதி புலிகள் தலைவரும் புலிகளின் நீதிமன்ற நீதிவானுமான தினேசன் என்பவர் தமது குழுவினருடன் சென்று கொண்டிருந்த போது இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார் எனவும் 200 சுற்றுத் தோட்டாக்கள், பொருட்கள் 27000/= பணம் என்பனவும் மீட்கப்பட்டது எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வல்வெட்டித்துறைக் கடலில் காணப்பட்ட 5 படகுகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் ஒரு படகில் இருந்த ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் ஒரு மோட்டாரையும் கைப்பற்றியதாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

மே- 11

மாகாணசபைகளுக்கு உள்ள அதிகாரங்களை குறிப்பாக பொலிஸ் அதிகாரத்தைக் கேட்டு நீதிமன்றம் செல்லவுள்ளதாக தென்மாகாண முதல்வர் அறிவிப்பு யாழ் மாவட்ட எம்.பி. ஸ்ரீகாந்தாவின் மெய்பாதுகாவலர்கள் 2 மணி நேரம் பொலிஸாரால் தடுத்து வைப்பு.

மே- 12

சட்டவிரோத ஆயுதங்கள் வைத்திருப்போரிடமிருந்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்யுமாறு பொலிஸ் அதிபர் பணிப்பு.

மட்டக்களப்பு பாவக்குடிசேனை பிரதேசத்தில் உள்ள புலிகளின் முகாம் ஒன்றைப் படையினர் தாக்கி கைப்பற்றியதுடன் பல லட்சம் ரூபா பெறுமதியான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் வண்ணாத்தி வில்லு பொலிஸ்பகுதியில் உள்ள சேரக்குளிக் கிராமத்தில் முஸ்லீம் மீனவர்களுக்குச் சொந்தமான 45 மோட்டார்கள், 28 கண்ணாடிகிளைப் படகுகள், 17 வாடிகள், 3 கட்டுமரங்கள், 3 கடைகள் மற்றும் உபகரணங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. சிங்கள மீனவர் ஒருவர் தாக்கப்பட்டதன் எதிரொலியே இச்சம்பவம்.

மே- 13

முல்லைத்தீவு இராணுவமுகாம்மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் புலிகள் தரப்பில் 5 பேரும் இராணுவ தரப்பில் 5 பேரும் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

மே-14

1992 மே மாதம் இந்திய மத்திய அரசால் விதிக்கப்பட்ட புலிகள் மீதான தடை காலாவதியாகியதைத் தொடர்ந்து மேலும் 2 வருடங்கள் தடை நீடிக்கப்பட்டுள்ளது.

ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்கு ஐ.சி.ஆர்.சி.மூலம் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்துள்ளது.

கொழும்பு சரஸ்வதி முகாம் மூடப்பட்டு அங்குள்ள அகதிகள் வவுனியா கொண்டு செல்லப்படவுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

மே- 15

செட்டிக்குளம் மன்னார் வீதியில் படையினர் தொடர்ந்து முன்னேறி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்





சரிநிகர
4, ஜெயரட்ன மாவத்தை,
திம்பிரிகஸ்யாய
கொழும்பு - 5
தொலைபேசி 584380

பிரதம ஆசிரியர் : சேரன்

# புலிகளுக்கு ஒரு வார்த்தை

சபாலிங்கம் கொல்லப்பட்டுவிட்டார்.
மே முதல் தேதி, பாரிஸில் அவரது வீட்டில் வைத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்.
நாட்டின் நெருக்கடி நிலைமைகள் காரணமாகப் புலம் பெயர்ந்து உலகெங்கும் வாழும் தமிழர்களின் மத்தியில் நடைபெற்ற முதலாவது அரசியற்படுகொலை இதுவாகும்.
மாற்றுக் கருத்துக்களை, மாறுபட்ட சிந்தனைகளைக் கொண்டவர்களை யெல்லாம் துப்பாக்கி முனையில் எதிர்கொள்வது தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றின் பிரிக்கமுடியாத ஒரு அம்சமாகிப் போய்விட்டது.

புலிகளிலிருந்து பிரிந்து, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தை ஸ்தாபித்தவர்களில் ஒருவரும், புதியபாதை பத்திரிகையை நடாத்தியவர்களில் ஒருவருமான சுந்தரம் அவர்களது படுகொலையுடன் ஆரம்பமான அரசியற்படு கொலைப் போக்கு இதுவரை பலியெடுத்தவர்களின் எண்ணிக்கை சொல்லிமாளாது.

உள்நாட்டில் நிலவிய 'கருத்துச் சுதந்திர மறுப்பு' என்ற உடன்பிறந்த நோய் காரணமாக தாம் உழைத்துவந்த தேசவிடுதலை இயக்கங்களிலிருந்து பிரிந்தும், தப்பியோடியும் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தவர்களின் தொகை இலங்கை அரசின் நெருக்குவாரம் காரணமாக ஒடியவர்களின் தொகைக்குச் சற்றும் குறைவில்லாதது.

இது இத் தேசமக்களின் துரதிர்ஸ்டம்! அவர்களது தேசவிடுதலைப் போராட்டத்தின் சாபக்கேடு.
உள்நாட்டில் கருத்துச் சுதந்திர மறுப்பை எதிர்க்கவோ சுதந்திரமான சிந்தனையை வெளிப்படுத்தவோ வாய்ப்புகள் மறுக்கப்பட்ட போதெல்லாம் இந்த நெருக்கடிக்குள் வாழமுடியாது என்று ஓடியவர்கள் பலரில் ஐரோப்பிய சூழல் வழங்கிய ஒருசில வாய்ப்புக்களின் காரணமாக, புதிய சிந்தனைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன என்று, எமது மக்களின் எதிர்கால விடிவின் மீது நம்பிக்கை வைத்திருக்கும் ஒவ்வொருவரும் சந்தோஷப்படுகின்ற வேளையில் முதன் முதலாக இக்கொலை நடந்திருக்கிறது.

புதிய சிந்தனைகள், சுதந்திரமான கருத்துகட்கு வழங்கப்பட்ட இன்னொரு அச்சுறுத்தல் இதுவாகும். பாரிஸ் ஈழநாடு பத்திரிகை காரியாலயம் எரிக்கப்பட்ட போது, பத்திரிகையாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் தாக்கப்பட்ட போது இலேசாக வெளிப்பட்ட இந்தப் போக்கு இப்போது தெட்டத் தெளிவாக தனது முகத்தைக் காட்டியுள்ளது.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் இத்தனைகால தியாகங்கள், இத்தனைகால இரத்தம் சிந்தல்கள் எல்லாம் இவ்வாறு அவலமாகிப் போவதுதான் விதியா?

மாற்றுக் கருத்துக்களைச் சகிக்காத, அதற்கு கொலையைத் தீர்வாக முன்வைக்கின்றவர்கள் வெறும் தனிநபர் கொலையாளிகள் மட்டுமல்ல; தேசத்தினதும் மக்களினதும் விடிவையும் சேர்த்துக் கொல்கின்ற கொலையாளிகளும் கூட.

மக்களின் விடுதலைக்காக போராடுபவர்கள் தாமே, தாம்மட்டுமே என்று நம்பிக் கொண்டிருப்பவர்களாண் விடுதலைப்புலிகளே இக் கொலைக்கு காரணம் என்று ஐரோப்பியச் சஞ்சிகைகள் கூறுகின்றன.

புலிகள் இதை மறுத்துள்ளபோதும், இத்தகைய அரசியல் படுகொலைகளைச் செய்வதோ அல்லது மறுப்பதோ புலிகளைப் பொறுத்தவரை ஒன்றும் புதிய விடயம் அல்ல!

அமிர்தலிங்கம் யோகேஸ்வரன் மீதான கொலையையும் கூட அவர்கள் முதலில் மறுத்தவர்கள்தான்.
பிறகு தாமே உரிமை கோரிக் கொண்டார்கள்.
சபாலிங்கம் கொலையை புலிகள் செய்யாமல் இருந்திருந்தாற் கூட இதற்கான பொறுப்பை அவர்கள் ஏற்றுத்தான் ஆக வேண்டும்!

மனித நாகரீகத்தை மீறிய இந்தப்படுகொலை உலகெங்கும் வாழ்கின்ற ஜனநாயகவாதிகளாலும் கண்டிக்கப்பட்ட வேண்டியது. இறுதியாக; புலிகளுக்கு ஒரு வார்த்தை:

படுகொலைகளால் கட்டியெழுப்பப்படக்கூடியது சவச்சாலைகளே தேசமல்ல!

# சொத்தி உப்பாலியும் ஐ.தே.கவும்

வெறுவாய்க்கு அவல் கிடைத்த மாதிரி என்பார்கள்.
கொழும்புப் பத்திரிகைகளுக்கு இப்போது கிடைத்திருக்கிற அவல் சொத்தி உப்பாலி என்று அழைக்கப்படும் றஞ்சித் என்ற நபர்.
அரசியல் ரீதியாக சரிந்துவருகின்ற தமது செல்வாக்கை உயர்த்தி நிறுத்திப் பிடிக்க ஐ.தே.கட்சியினர் இப்போது கண்டுபிடித்துள்ள புதிய துரும்புச்சீட்டு இந்த உப்பாலி. இத்தனைகாலம் ஐ.தே.க அமைச்சரவையில் பலத்த செல்வாக்கு மிகுந்த ஒருவராகவும், கட்சியின் செயலாளர் நாயகமாக இருந்தவருமான சிறிசேன கூரே அவர்களுக்கும் இந்த கொலைக்கும்பல் தலைவனுக்குமிடையில் இரகசியமான தொடர்புகள் இருந்து வந்திருக்கின்றன என்றும், நாட்டில் நடந்த பல சங்கிலித்



தொடரான அரசியல் கொலைகளுட்பட்ட கொலைகளுக்கு காரணமான இவன் அமைச்சர் சிறிசேன குரேயின் பக்கபலத்துடன் தான் இயங்கி வந்துள்ளான் என்றும் செய்திகள் கொழும்புப் பத்திரிகைகளில் வந்த வண்ணம் இருக்கின்றன.

முன்னாள் மகாவலி அமைச்சரும் பிரேமதாச அரசாங்கத்தை எதிர்த்து வெளியேறியவர்களில் ஒருவருமான காமினி திசநாயக்காவை திரும்பவும் கட்சிக்குள் கொண்டு வந்து அமைச்சர் பதவி வழங்குவதென்ற கட்சியின் உயர்மட்டத்தின் குறிப்பாக ஜனாதிபதி விஜேதுங்கவின் நோக்கத்தை தீவிரமாக எதிர்த்து வந்தவர் அமைச்சர் சிறிசேன குரே.

ஜனநாயக மக்கள் முன்னணியை காமினியுடன் சேர்ந்து உருவாக்கி அக்கட்சியின் தலைவரான லலித் அத்துலத்முதலி கொல்லப்பட்ட போது அக்கொலைக்கு அமைச்சர் சிறிசேன குரேயின் பின்னணி இருந்துள்ளதாக ஒரு அநாமதேய துண்டுப்பிரசுரம் கடந்த ஆண்டு பரவலாக விநியோகிக்கப்பட்டதில் காமினிக்கு பங்குண்டு என்பதும், கட்சிக்குள் பிரேமதாச அணியினர் மீது தீவிரமான வெறுப்புக் கொண்டவராக, அவர்களுக்கு போட்டியான ஒரு சக்தி மிக்க தலைவராக வரக்கூடிய வாய்ப்புக் கொண்டவர் காமினி என்பதும், அவர் வருகை மேட்டுக்குடியதிகாரத்தை மீளப் பலமாக்கி விடும் என்பதும் சிறிசேன குரே அணியினர் காமினி திரும்பக் கட்சிக்குள் வருவதை எதிர்ப்பதற்கான பிரதான காரணங்கள் என்று பேசப்படுகின்றன.

தவிரவும், பிரேமதாச அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிசேன குரே மட்டுமல்லாமல் இன்று பிரதமர் பதவியை வகிக்கும் றணில் விக்கிரமசிங்கவும், காமினி உள்ளே வரும் பட்சத்தில் தமது நிலை நிச்சயமற்றது என்று உணர்வதாகத் தெரிய வருகிறது. மதின்மேல் பூனையாக இருந்துவரும் பிரதமர் தம்முடைய பிரதமர் பதவி பறிபோகலாம் என அஞ்சுவதாகவும் தெரிகிறது.

கட்சியை ஒரு தூய்மையான ஊழலற்ற கட்சியாகக் காட்டுவது தான் ஐ.தே.கட்சியினரின் இன்றைய யுத்த தந்திரமாகும். எழுந்துவரும் சந்திரிகா அலையை முறியடித்து தமது அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்ள கட்சியைப் புனருத்தாரணம் செய்வதற்கு இந்த யுத்ததந்திரம் அவர்களுக்கு அவசியமாக உள்ளது.

ஐ.தே.கவின் மீது ஏற்பட்டிருக்கும் அவப்பெயருக்கு காரணமானவர் என்று கூறி ஒருவரை வெளியேற்றி விடுவதன் மூலம் கட்சிக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுத்துவிட்டால், வெற்றி பெறும் வாய்ப்பை உருவாக்கி விடலாம் என்பது இவர்களது கணிப்பு.

இதன் விளைவுதான் ஊழலற்ற ஒரு அரசாக தமது அரசைக் காட்ட ஊழல் விசாரணைக் கமிஷன் நியமிக்க முனைவதும், சொத்தியுப்பாலி போன்ற கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்களைத் தேடிப்பிடித்து சட்டத்தின் முன்நிறுத்த எடுக்கப்படுகின்ற முயற்சியும் ஆகும்.

ஆனால், இந்தச் சொத்தி உப்பாலி ஒன்றும் இன்று நேற்று முளைத்த குற்றவாளி அல்ல. இவன் ஐ.தே.கவின் உயர்மட்டக் குழுவான நிறைவேற்றுக் கமிட்டியில் (Executive committee) ஒரு அங்கத்தவன்; முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் எல்லா கமுதாவ திட்டங்களிலும்., ஐ.தே.க தேர்தல்களிலும் இவர்களுக்காக உழைத்த ஒரு கட்சிக் கையாள். இவனை ஐ.தே.கட்சியினர் அனைத்துக் கடினமான வேலைகளில் எல்லாம் தொடர்ந்து பயன்படுத்தி வந்தார்கள் என்பதும், இன்று கட்சியைத் தூய்மைப்படுத்த முன்நிற்கும் அனைத்து - ஜனாதிபதி உட்பட - ஐ.தே.கவினர்க்கும் இது தெரியாத ஒன்றல்ல என்பதும் வெளிப்படை. அமைச்சர் சிறிசேன குரேயே இதைப் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

ஆனால் இப்போது ஐ.தே.கவின் தேவை அதிகாரம் கைநழுவிப் போகாமல் பாதுகாப்பதே. எந்த உப்பாலியைப் பயன்படுத்தி கட்சியை அதிகாரத்துக்கு இவர்கள் கொண்டு வந்தார்களோ, இன்றும் அதே உப்பாலியைப் பயன்படுத்தி அதிகாரத்தைக் காப்பாற்றப் பார்க்கின்றார்கள்!

**போசமறிப்பான்**

சிறிசேனகுரே - உப்பாலி உறவு நிரூபிக்கப்பட்டு, அரசியல் கொலைகளுடன் சம்பந்தமிருந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்பட்டுவிட்டால், கட்சியைத் தூய்மைப்படுத்தும் நடவடிக்கை வெற்றி பெற்றுவிடும்; அதன் பிறகு ஊழலற்ற நல்லவர்களைக் கொண்ட கட்சி என்ற பெயரை கட்சிக்குப் பெற்றுவிடலாம்.

இன்று அரசியலின் சுத்தமான கையுடையவரென கூறப்படும் டொக்டர் விஜேசேகராவை கட்சியின் செயலாளராக்கியதும் கூட இத்தகைய ஒரு பிரமையை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே.

அமைச்சர் சிறிசேன குரேயின் வீடுகூட சோதனையிடப்பட்டிருக்கின்றது என்பது. கட்சியின் புதிய தலைமையின் 'நேர்மையை' வெளிப்படுத்தும் என்று இவர்கள் கணிப்பிட்டுள்ளார்கள்.

ஆனால், பிரேமதாச அணியை முற்றாக வெளியே வைத்துக் கொண்டு காமினியை உள்ளே கொண்டு வருவதில் கட்சித்தலைமைக்கு பெரிய தலையிடியாக இருப்பது தேசியப்பட்டியல் எம்பிக்கள் பதவி விலக மறுப்பதேயாகும். சபாநாயகர் முகமத் இதனை வெளிப்படையாகவே அறிவித்துள்ளார். பிரேமதாசாவின் மனைவிக்கு அமைச்சர் பதவி தரப்படுமானால் விலகத் தயார் என்று அறிவித்துள்ள இவ் எம்.பிக்கள் காமினியை உள்ளே கொண்டு வருவதற்காக விலகத் தயாரில்லை என்று தெரிவித்துள்ளனர்.

காமினி உள்ளே வந்தால், இன்றைய விஜேதுங்க தலைமை அவரையே அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கக் கூடும் என்றும் அப்படி ஆகும்



பட்சத்தில் பிரேமதாச அணியினர் நிலை ஆபத்தானது என்பதும் அவர் பக்கங்களில் வைக்கப்பட்டுள்ள -வெளியே தெரிவிக்கப்படாத நியாயங்கள் ஆகும்!

இந்த நிலைமைகள் காரணமாக காமினி -விஜயதுங்க கூட்டினர் புதிய திட்டமொன்றை தீட்டியுள்ளனர். காமினியின் இன்றைய உடனடி வேலைத் திட்டம் எம்.பியாகி மந்திரிப்பதவியை கைப்பற்றுவது அல்ல; கட்சியை தாம் விரும்பும் விதத்தில் வெளியிலிருந்து கொண்டே மாற்றியமைப்பதாகும். இதற்கு வசதியாக காமினியின் மைத்துனரான கலாநிதி விக்கிரமசிங்க ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். கட்சியில் ஏற்படுத்தப்படும் சீர்திருத்தங்கள் காமினி உள்ளே நுழைவதற்கான இயல்பான நிலைமையை தோற்றுவிக்கும். அதன்பின் கட்சியினர் வலிந்து காமினியை உள் அழைத்துக் கொள்வார்கள். அடுத்த முறை கட்சி தப்பித்தவறி தோற்றாலும் கூட, கட்சியின் தலைமைப்பதவி நிச்சயம் காமினியின் கைக்குள் வந்துவிடும். இது விஜயதுங்க அணியினர் விரும்பும் மேட்டுக்குடி அதிகாரத்தை முற்றுமுழுதாக உறுதிப்படுத்தியதாகிவிடும்.

ஆக ஐ.தே.கவுக்குள் இன்று நடக்கும் கூச்சலும் சச்சரவும் பிரேமதாச அணியி

→ 15

நன்றி - நூலகத்திட்டம்



வழி நெடுக நீண்டிருந்த பனைகள் அவ்வீதிக்கு அணி செய்தன. பற்றைகளும் சில மரங்களும் நெடிதுயர்ந்த பனைகளும் அவ்வீதியை மறைத்திருந்தன.
விடிகிற சமயம் மூன்று மணிக்கு கடையப்பு தஞ்சிட்டிச் சந்திக்கு வந்து கூக்காட்டினார் என்றால் செல்லையா அண்ணரும் பதிலுக்குக் கூக்காட்டி விட்டு, தஞ்சிட்டிச் சந்திக்கு வந்துவிடுவார்.

# எதிலிருந்து தொடங்குவது 9

நாகமணி அப்புவும் வந்து விடுவார். மூவரும் சேர்ந்து நெடுங்கண்ணித் தோட்டத்துக்குச் சென்று இறைக்கத் தொடங்குவார்கள். செல்லையாண்ணை துலாவில் ஏறிமிதிக்க வேண்டியதுதான். கடையப்பு பட்டையால் கிணற்றில் தண்ணியைக் கோல வேண்டியது. நாகமணி அப்பு பாத்திகளில் தண்ணி கட்டுவார்.

இப்போது நான் அவர்களை அப்பு என்கிறேன். அப்போது அவர்கள் இளமையைத் தாண்டாத வயது.
''பேய்க்குப் பயமில்லையா?'' என்று



# காடுகள் சுடுகின்றன

கேட்டால் ''அது பன்னிரண்டு ஒரு மணியோடை அடங்கி விடும்.'' என்பார்கள்.
மூவரின் தோட்டத்துக்கும் மாறி மாறி இறைத்தால் இடையில் ஒருநாள் இடைவெளிவரும். பிறகு மூவர் தோட்டங்களுக்கும் மாறி மாறி இறைப்பு.
இடையில் ஒரு நாள் இடைவெளியில் சந்தைக்குப் போய் வந்தார்கள். முதநாள் மாலையில் அல்லது விடியலில் காய், பிஞ்சுகளை ஆய்ந்து வைத்தால் காலையில் அதனைத் சாக்கில் கட்டிக் கொண்டு, ஒரு கையில் வாழைக்குலையுடன் நடையைக் கட்ட வேண்டியது தான். சந்தைக்குப் போகிற வழியில் இடைக்கிடை முதுகுப் பாரத்தை இறக்கச் சுமை தாங்கிகள் உண்டு.

1958ஆம் ஆண்டு ஒரு வாரம் இவர்கள் நெடுங்கண்ணித் தோட்டத்துக்குச் சென்று இறைக்க முடியாமல் போய் விட்டது. தோட்டத்தில் விளைந்ததைச் சந்தைக்குக் கொண்டு செல்ல முடியாமல் போய் விட்டது.

1958ஆம் ஆண்டு. இலங்கைத் தீவு எங்கணும் இனக்கலவரம் சூழ்ந்த நேரம். அப்போது பலாலி விமான நிலையத்தில் நிலை கொண்ட இராணுவம் காரைநகர் கடற்படை முகாமுக்குச் செல்வதுண்டு. சூரியன் உச்சியைத் தொட்ட பகற்பொழுதில், சோளகம் பெயர்ந்து வீசிக் கொண்டிருந்த வேளையில், நெடுங்கண்ணித் தோட்டத்திற்கு எதிர்ப்புறமாக இப்போது நம் குடில் இருக்கும் பக்கமாக, (அப்போது நாம் அங்கு குடியிருந்திருக்கவில்லை.) மரங்களின் பின்னாலிருந்து ஒருவர் இராணுவ ஜீப் செல்கிற போது டயருக்குக் குறி வைத்துச்சுட்டார். இராணுவ ஜீப் நின்றது. வேறு பக்கத்திலிருந்து குதிக்கிற இராணுவத்துக்குச் சூடு வீழ்ந்தது. இராணுவத்தின் கையில் அப்போது ஆயுதம் இருக்கவில்லை. இரண்டு மூன்று பேர் தொப் தொப்பென விழுந்தார்கள்.

சுட்டவர்கள் பற்றைக்குள்ளால் பறந்து விட்டார்கள்.
பிறகு என்ன நடந்தது என்பது தெரியாது.
ஊருக்குள் கதை பரவியது. இரண்டு கட்டுத்துவக்குகளே இக்காரியத்தைச் செய்து முடித்தன. அக்காரியத்தை இயக்கியவர்கள் குலசேகரமும் அவன் ஆட்களும்.
பிறகு அவ்வீதி வழியால் இராணுவம் செல்வதில்லை. ஆயினும் கடையப்புவும், செல்லையாண்ணையும் நாகமணி அப்புவும் ஒரு கிழமையாக நெடுங்கண்ணித் தோட்டத்திற்குள் காலடி எடுத்து வைக்கவுமில்லை.

இதே காலகட்டத்தில் வன்னிக்காடுகளும் சுடத் தொடங்கின. அப்போது சி.சுந்தரலிங்கம் வவுனியாத் தொகுதியின் எம்.பி. வன்னிக் காட்டுன் வீதியில் செல்கின்ற இராணுவத்துக்குச் சூடு வீழ்ந்தது. அப்போது பிரதமராக இருந்த பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் இச்சம்பவத்தைக் குறிப்பிட்டார். சுந்தரலிங்கம் சொன்னார்; ''காடுகள் **சுடுகின்றன.** எனக்கொன்றும் தெரியாது.''

இப்படியொரு கதை. அக்காலத்தில் உலவியது.
இவை எப்போதோ, எங்கேயோ நடந்த ஒன்றிரண்டு சம்பவங்கள் தான். ஆயினும் அப்போதும் அதன்பின்னரும், தனி ஒரு இராணுவ வீரன் துவக்கையும் தூக்கியபடி கடற்கரையில் காத்து நிற்பான்.
ஒரு கடற்கரைக் கிராமத்தில் நம் சின்ன மாமாவின் வீடு இருந்தது. மாதத்தில் ஒரு முறை தவணை விடுமுறையில் அங்கு சென்று நிற்பதுண்டு. அப்போது போயா என்றும், போயா முன்தினம் என்றும் தான் வாராந்தர விடுமுறை. இப்போது போல் சனி ஞாயிறு அல்ல.

இரவினில் கடற்கரைக்குச் சென்றால் மரத்தில் சாய்ந்தபடி இராணு வீரர் ஒருவர் கடலைப் பார்த்தபடி நிற்பார். கடலில் அலை பொங்கியெழும். ஆளைக் கொல்லுகிற குளிர்காற்று வீசும். ஒன்றுக்கும் அஞ்சார் அந்த இராணுவ வீரர். காக்கிச்சட்டை குளிருக்கு மிக இதமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஒரு பீடியை ஒளித்து ஒளித்து புகைப்பார்.

அவர் நிற்பதற்குக் காரணம் கேட்போம். கடத்தல்காரர் வருவார்கள். அவர்களைப் பிடிப்பதற்காக என்பார். ''என்ன கடத்துவார்கள்?'' ''நிறைய இந்தியாவிலிருந்து உடுப்புகள் வேறும் சாமான்கள்.''

என் மைச்சான்மாரும் மைச்சாளும் அப்போது அங்கு நின்றார்கள். என் மாமா நானுஓயாவில் வேலை. விடுமுறைக்கு வந்தார்கள். ஜெயாத்தாச்சி, தாசத்தான், விஜி இவர்களுடன் கடற்கரையில் பொழுதைப் போக்கினோம்.

அந்த இராணுவ வீரருடன் ஜெயத்தாச்சியும் தாசத்தானும் தான் சிங்களத்தில் கதைத்தார்கள். அவர் பொதுமையாக எங்களுக்குப் புரிய வைத்தார். துவக்கை நம்கையில் தந்தார். அப்போது நமக்கு ஆறு வயது. என்னால் அதனைத் தூக்க முடியாதிருந்தது. துவக்கினுள் செலுத்துகிற குண்டுகளை எடுத்துக் காட்டினார். பித்தளையால் செய்யப்பட்ட உலோகப் பென்சில்கள் அவை. எவ்வாறு அதனைத் துவக்கினுள் செலுத்துவது என்பதனை துவக்கை மடக்கி முறித்துக் காட்டி விளக்கினார்.

நம் உடலில் சாடையாகச் சூடு பரவியது. ஆயினும் அங்கு வீசிய குளிர் தாங்க முடியாதிருந்தது.
''தனிய நிக்கிற போது பயமில்லையா?'' என்று தாசத்தான் கேட்டார்.
''துவக்கு கையில் இருக்கும் வரைக்கும் என்ன பயம்?'' என்றார் இராணுவவீரர்.
ஒடுங்கிய ஆள், கடும்பச்சை நிறத்தில் உடுப்பு, தொப்பி, ஃகயில் பீடி. முகத்தில் கனிவு மலர்வு இருந்தது. சாப்பாட்டுக்கு என்ன செய்வார்? சாமப்பொழுதில் பசிக்குமே? எல்லாவற்றுக்கும் மேலாகக் கடலில் பூதங்கள் வருமே? பூதங்கள் துவக்குக்கு அஞ்சாது.

ஒருநாள் இப்படித்தான் -கடலில் மிதந்து வந்த பேழையை கோபாலன் திறந்த போது அப்பேழையிலிருந்து பூதம் புறப்பட்டது. ஆனால் பிறகு எப்படியோ கோபாலன் தனது புத்திசாலித்தனத்தால் பேழைக்குள் பூதத்தை மூடி வைத்து கடலினுள் எறிந்து விட்டான்.

அன்றிரவு அந்த இராணுவ வீரர் பற்றியே யோசனையாக இருந்தது. இரவு அத்தை பூவரசமிலையில் சோறு குழைத்து வைத்து, கையில் சூடைமீன் பொரியல் தந்து இராச்சாப்பாடு ஊட்டியபோதும் அவர் நினைவே நிரம்பி வழிந்தது. கடற்காற்றுக்குக் கை விளக்கு நூர்ந்து விடும் என்று அத்தை ஏசிய போதும், கை விளக்கைத் தூக்கி அந்த இராணுவவீரர் இருந்த திசையை ஏறிட்டுப் பார்த்தேன்.

சரவணமுத்தண்ணர் வீட்டுக் கூரையில் கண்ட துவக்கு வேறு வகையானது. கைக்கடக்கமானது.
அம்மாள் கோயில் திருவிழா முடிந்து ஓய்ந்திருந்த காலம், சோளகம் ஆக்ரோஷமாக வீசிக் கொண்டிருந்தது. விறக முடியாத படி தோட்டத்தில் வாழை இலைகள் கீற்றுக் கீற்றாகக் கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தன. பெரும் குலை ஈன்ற வாழைமரங்கள், சொல்லாமல் கொள்ளாமல் பாறி விழுந்தன. எவ்வளவுதான் இறைத்தாலும் தோட்டத்தில் மரங்கள் வாடித்தான் காணப்பட்டன. சோளகம் நறுமணத்தையும், வெப்பத்தையும், எங்கேயோ இருந்து பாடலில் சில வரிகளையும் இழுத்து வந்தன. பனையிலிருந்து நுங்குகள் நேரம் காலம் தெரியாமல் தவறி விழுந்தன. பனைகள் பேயாட்டம் போட்டன.

இத்தகைய மாலையில், பொழுது படுகிற நேரம் என் வீட்டுப் படலையடியில் நான் நின்றேன். இருண்டு விட்டது. ஒரு சைக்கிளில் இருவர் முகமூடியுடன் வந்தனர்.

## அ.டேவிட் நந்தகுமார்

# நாலு வார்த்தை எழுதவிடு

அலை ஆசிரியராகவிருந்த அ.யேசுராசா திரும்பவும் இன்னொரு இதழின் ஆசிரியராகி இருக்கிறார். அலை இதழ் ஆரம்பத்தில் ஆறு ஆசிரியர்களைக் கொண்டிருந்தது. ஈற்றில், இறுதி இதழ்கள் வெளியாகிற போது அ.யேசுராசா மாத்திரமே அதன் ஆசிரியராக இருந்தார். எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆரம்பத்தில் பல விடுதலை அமைப்புகள் இருந்து, தற்போது விடுதலைப்புலிகள் மாத்திரம் இருப்பது போலத்தான் இதுவும் என்று வையுங்களேன். காலத்தை அனுசரித்தோ என்னவோ இவ்விதழில் அ.யேசுராசா மாத்திரமே ஆசிரியராக அமர்ந்திருக்கிறார். இவ்விதழின் பெயர் கவிதை. கவிதைக்கென்று மாத்திரம் தொடக்கப்பட்ட இரு திங்கள் ஏடு.

இக்கவிதை இதழைப் பார்க்கிற போது யேசுராசாவின் முன்னைய இலக்கியக் கோட்பாடுகள் ஞாபகத்தில் வருகின்றன. ''கலைஞர் சுதந்திரமாவர். இதனைத்தான் படை என அவரை நிர்ப்பந்திக்க முடியாது. மனிதருக்கு விரோதமில்லாத, எதனையும் கலைஞர் படைக்கலாம். இதில் முற்போக்கு பிற்போக்கு எனப்பார்த்தல் முடியாது'' இவ்வாறு ஒரு கோட்பாடு வைத்திருந்தார்.

சாதி ஒடுக்குமுறை, வர்க்கப் போராட்டம் இவை பற்றிமட்டும் படைக்கிற முற்போக்கு இலக்கியவாதிகளை வரட்டுவாதிகள் என மட்டம் தட்டினார். இவை வெறும் பிரச்சார இலக்கியங்கள். இவர்கள் கதை பண்ணுகிறார்கள். படைக்கவில்லை. என்றெல்லாம் தனது 'அலை'யில் அடிக்கடி குறிப்பிட்டார். கைலாசபதி, சிவத்தம்பி முதலான முற்போக்கு இலக்கிய விமர்சகர்களைத் தாக்குவதற்கு வரட்டுவாதம், அழகியல் தெரியாதவர்கள், கோஷமிடுபவர்கள் பட்டியல் இடத்தெரிந்தவர்கள் போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தினார்.

அப்போது நாமெல்லாம் அதற்கு மௌன சாட்சிகளாக இருந்தோம். முரண்பாடுகள் சில சமயங்களில் எதிர்ப்பட்ட போதும், யேசுராசா நேர்மையானவர்' என்பதனால்- என்று நம்பியதனால் -அதனைச் சகித்தோம்.

இப்போது எல்லாவற்றையும் கேள்வி கேட்கிற நேரம் நெருங்கி விட்டது.
கவிதை இதழில் யேசுராசா என்ன சொல்ல வருகிறார்?
''கால நிர்ப்பந்தத்துக்கியைய தேசிய விடுதலைப் போராட்டம் சார்ந்த ஆக்கங்களுக்கு கவிதை முக்கியத்துவம் கொடுக்கும்'' என்று ஒரு குறிப்பு வருகிறது.

அதுசரி 'கால நிர்ப்பந்தத்துக்கியைய சாதி ஒடுக்குமுறை, வர்க்கப் போராட்டம் முதலானவை பாடுபொருளாக அமைகிற போது யேசுராசாவிற்கு அது ஏன் வரட்டு இலக்கியமாகப் பட்டது? இப்போது தேசிய விடுதலைப் போராட்டம் சார்ந்த படைப்புகள் வளமானதாக எப்படி மாறியது? விடை சுலபமானது. வர்க்கப் போராட்டம் குறித்து எழுதியவர்கள் மார்க்சீயவாதிகள். யேசுராசாவும் சேர்ந்து தொகுத்த **'மரணத்துள் வாழ்வோம்'** கவிதைத் தொகுதியில் சில பிரச்சாரமான படைப்புகளும் வெளியாகின (அது ஒரு நல்ல தொகுப்பு). இதுபற்றி **கலாநிதி சிவசேகரம்** அவர்களும் கேள்வி எழுப்பி இருந்தார். எவ்வாறு யேசுராசா தொகுத்த தொகுப்பில் பிரச்சார இலக்கியங்களும் வெளியாகின? யேசுராசாவின் எதிர்ப்பு பிரச்சார இலக்கியங்கள் மீதானதா? அல்லது அதனைப் படைத்தவர்கள் மீதானதா?

இளங்கவிஞர்கள் படிக்க வேண்டிய நூல்கள் சிலவற்றைப் பட்டயலிட்டிருக்கிறார். புதுமைப் பித்தன், மகாகவி, பிச்சமூர்த்தி, தா.இராமலிங்கம், கு.ப.ரா, சண்முகம் சிவலிங்கம், புதுவை இரத்தினதுரை, சு.வில்வரத்தினம், இ.முருகையன், எம்.ஏ.நுஃமான் போன்றோரின் கவிதைத் தொகுப்புகளையே யேசுராசா கடலோடி எனும் பெயரில் குறிப்பிட்டிருந்தார். சுலபமாக திட்டமிட்டு சேரன், சிவசேகரம், ஜெயபாலன் முதலானோரின் கவிதைத் தொகுப்புகள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன. தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாக நல்ல பல கவிதைகள் சேரன், ஜெயபாலன் ஆகியோரின் தொகுப்பில் காணப்படுகின்றன. பொதுவில் சிவசேகரம் நல்ல கவிதைகள் எழுதி உள்ளார். இவர்களைத் திட்டமிட்டு ஒதுக்கியதன் மர்மத்தை அறிந்து கொள்ளல் சுலபமானது. இவர்கள் புலிகளால் விரும்பப்படுபவர்கள் அல்லர். இவர்களில் சேரனுடன் சேர்ந்து 'மரணத்துள் வாழ்வோம்' கவித் தொகுப்பைத் தொகுத்திருந்தார் யேசுராசா. மாவோயிஸ்ட்டுகளை 'சிறீமாவோயிஸ்ட்டுகள்' என ஜெயபாலன் கிண்டலடித்துத் திரிகிற போது யேசுராசா ஜெயபாலனின் நல்ல நண்பர். ஜெயபாலனின் ஒரு புத்தகத்தையும் வெளியிட்டிருந்தார். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைக் கண்டனம் செய்வதற்கு சிவசேகரத்துடனும் கூட்டுச் சேர்ந்திருந்தார். (நீ சொன்னால் காவியம். முற்போக்கு என்றொரு யானை இருந்ததாம்) இப்போது இவர்கள் தவிர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

இதில் முரண் நகை என்னவெனில், புதுவை இரத்தினதுரை, இ.முருகையன் போன்றோர் யேசுராசாவிற்கு நல்ல கவிஞர்களாகத் தென்பட்டது தான். புதுவை இரத்தினதுரை வர்க்கப் போராட்டம் பற்றிக் கவிதை எழுதிய போது வரட்டுவாதி, கோஷமிடுபவர். புலிகளைப் புகழ்ந்து பாடுகிற போது நல்ல கவிஞர். முருகையனும் முன்னர் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் சேர்ந்து நிற்கிற போது மோசமான கவிஞர். முருகையன் இப்போது நிறத்தை மாற்றிய போது யேசுராசாவும் தன் கருத்தை மாற்றிக் கொண்டார். இதில் யேசுராசாவைப் பிழை சொல்ல என்ன இருக்கிறது? காலம், சூழல் அப்படி. ஒரு இலக்கியக்காரரும், பல நிலைப்பாடுகளும், போலி முகங்களும் என்று யேசுராசா முன்னர் எழுதிய கட்டுரை ஒன்றுதான். இப்போது யேசுராசாவிற்கே பொருத்தமாக வருகிறது.

'கவிதை' இதழைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது? புகலிடக் கவிதைகளும், கிழக்கு மாகாணக் கவிதைகளும் எவ்வளவோ தூரம் முன்னேறி விட்டன. யாழ்ப்பாணம் இப்போது கிணறு. அங்கு கவிஞர்கள் தவளைகளாகி விட்டனர். உதாரணத்திற்கு ஒரு வரி பார்ப்போமா?

''நீண்ட தெருவெல்லாம் நாம் நடப்போம்!
துணிவுடனே.
ஆண்ட பரம்பரை நாம்...''
யேசுராசா எந்தப் பரம்பரை என்பது புரிகிறதா?

நன்றி - நூலகத்திட்டம்



# மட்டக்களப்பு : புறக்கணிக்கப்பட்ட பூமி

## அரசு புறக்கணிக்கிறது அதிகாரிகள் சுருட்டிக்கொள்கிறார்கள்

சத்தியேந்திரா

மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்படும் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் என்பவற்றின் செயற்பாடுகளை உற்று நோக்கும் போது ''சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க மாட்டான்'' என்ற பழமொழியே ஞாபகத்திற்கு வருகின்றது.

1990 யூன் மாதம் இடம்பெற்ற கலவரங்களையடுத்து முற்றாகச் சீர்குலைந்து இருந்த இவ் ஸ்தாபனங்களின் நடவடிக்கைகள் 1994 வரை பெயரளவுக்குத் தான் சீர்படுத்தப்பட்டிருக்கின்றதே தவிர. உண்மையில் பெருமளவில் மோசடிகள் நிறைந்ததாகவே இவை காணப்படுகின்றன. இந்நிறுவனங்களின் சீரற்ற நடவடிக்கைகளுக்கு நாட்டுச் சூழலைக் காரணமாகக் கூறினாலும், இதற்கு எதிர்மாறாக இன்னொன்றையும் கூறலாம். அதாவது சீரற்ற நிலைமையை ஸ்தாபனங்களின் அதிகாரிகள் தங்கள் நலனுக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள். தங்களுடைய சுயலாபங்களை முன் வைத்துத்தான் இவ்வதிகாரிகளின் செயற்பாடுகள் அனைத்தும் அமைந்துள்ளன என்பதை இன்றைய மட்டக்களப்பின் உண்மை நிலை எடுத்துக் காட்டும்.

### மட்டக்களப்பு புதிய செயலகக் கட்டிட ஊழல்:

## கட்டிடத் திணைக்களமும் கச்சேரியும் ஒருவர் மேல் ஒருவர் குற்றம் சாட்டுகின்றன

மட்டக்களப்பின் தலையாய அலுவலகமான கச்சேரியே அனைத்துச் சீரற்ற நடவடிக்கைகளுக்கும் காரணமாக உள்ளது. அத்தோடு கச்சேரியினால் செய்யப்பட்ட வேலைகளிலேயே பல்வேறு வூகையான ஊழல்கள் இடம் பெற்றுள்ளன. உதாரணமாக கச்சேரியினால் கட்டப்பட்ட புதிய செயலகக் கட்டிடம் சம்பந்தமாக பல இலட்ச ரூபாய்கள் மோசடி செய்யப்பட்டுள்ளன. கச்சேரி

அதிகாரிகள் தாங்கள் நினைத்தபடி பணக் கொடுப்பனவுகளைச் செய்திருக்கின்றார்கள். இக்கட்டிட வேலையில் சம்பந்தப்பட்டவர்களான கட்டிடத் திணைக்களமும், கச்சேரியும் ஒருவர் மேல் ஒருவர் பழியைச் சுமத்திக் கொண்டு தப்பித்துக் கொள்கின்றார்கள். இதே போன்று இதற்கு முன்பு இருந்த அரசாங்க அதிபரின் பதவிக் காலத்தில் கட்டப்படாத கட்டிடங்களை கட்டி முடித்து விட்டதாகக் கூறி பணம் எடுத்த சம்பவங்களும் தற்போது விசாரணையில் இருந்து கொண்டிருக்கின்றன.

### விமான நிலைய விஸ்தரிப்பு

## சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு இது வரை நட்டஈடு இல்லை

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப் பட்டதோடு, முக்கிய செயற்பாடாக விமான நிலைய விஸ்தரிப்பு நடைபெற்றது. இதற்கென வீச்சுக் கல்முனை, வலையிறவு ஆகிய கிராமங்களில் இருந்து 100க்கும் அதிகமான குடும்பங்கள் பல்வேறு உறுதி மொழிகளுக்கும் மத்தியில் வெளியேற்றப்பட்டனர். வெளியேற்றப்பட்ட குடும்பங்கள் அனைத்தும் தங்களின் சொந்த உழைப்பையும் விட்டு எவ்வித வசதியுமற்ற பல்வேறு இடங்களில் குடியமர்த்தப் பட்டு பல வருடங்களாகியும் இவர்களுக்குரிய நட்டஈடு இன்னும் அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை. கடந்த வருடம் மட்டக்களப்பில் இடம் பெற்ற ஜனாதிபதி இடம் பெயர் சேவையின் போது இவ்விடயம் பிரதமமந்திரியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டும் எவ்வித கொடுப்பனவும் வழங்கப் படாத நிலையில், வெளியேற்றப்பட்ட மக்கள் மிகுந்த கஷ்டத்துடன் வாழ்க்கை நடாத்தி வருகின்றனர்.

அவ்விடயம் தொடர்பாக பாதிக்கப் பட்டோரிடம் விசாரித்த போது கச்சேரியினரும் பிரதேச செயலகத்தினரும் ஒவ்வொரு காரணத்தைச் சொல்லித் தப்பித்துக் கொள்ள முயல்கின்றார்களே தவிர, பிரச்சினைக்குத் தீர்வு காண எவரும் முன் வருகின்றார்கள் இல்லை என்றும், இதை மேற்கொண்டு யாரிடம் முறையிடுவது என்று தங்களுக்குத் தெரியவில்லை என்றும் மிகுந்த மனவருத்தத்துடன் கூறின ர்.

## கல்லடி ஐஸ்கட்டித் தொழிற்சாலையை திறப்பார் இல்லை

இதே போன்று மட்டக்களப்பு மீனவர் சமூகத்தைப் பாதித்த இன்னொரு விடயம். மட்டக்களப்பு மாவட்டம் மீன்பிடித் தொழிலைப் பிரதான தொழிலாகக் கொண்ட மாவட்டம். இங்கு கடந்த காலக் கலவரங்கள் தலை தூக்கியபின் மீனவர் படும் துயரத்தையும், கஷ்டத்தையும் சொல்லில் அடக்க முடியாது. முதலாவது பிரச்சினை பிடிக்கப்படும் மீனைப் பதப்படுத்தி வைக்க வசதிகளற்ற நிலை. கடந்த ஐந்து வருடங்களாக கல்லடியில் அமைந்துள்ள ஐஸ் கட்டித் தொழிற்சாலை மூடப்பட்டு பாதுகாப்புப் படையினரே குடி கொண்டுள்ளனர். இதனால் மீனைப் பழுதாகாமல் வைப்பதற்குத் தேவையான ஐஸ் கட்டியை வெளியாரிடம் அதிக விலை கொடுத்தே மீனவர்கள் வாங்க வேண்டியுள்ளது. சில சமயத்தில் ஐஸ் கிடைப்பதே கஷ்டமான காரியம். இதனால் பெருந்தொகையான மீனை மீனவர்கள் வீச வேண்டியும் ஏற்பட்டுள்ளது. இதைத் தடுப்பதற்காகவும் ஐஸ் கட்டிகளைக் குறைந்த விலையில் கொடுப்பதற்காகவும் கல்லடியில் உள்ள ஐஸ் கட்டித் தொழிற்சாலையை மீளச் செயற்பட வைக்கவேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்ட போது அதற்குரிய பெருந் தொகைப் பணத்தைக் கொடுக்க அமெரிக்க அரசாங்கம் முன்வந்தது. இத்திட்டம் பாராளுமன்றத்தில் அமைச்சர்கள் குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரமும் பெறப்பட்டது. இத்திட்டத்திற்குரிய நிதி புனர் வாழ்வு அமைச்சிற்கு வந்து இரண்டு வருடங்களாகியும் இன்று வரை இதற்கான வேலைகளை மீன்பிடித்திணைக்களம் மேற்கொள்ளவில்லை. அத்தோடு இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி இன்னும் மூன்று மாதத்தில் அரசாங்கத்தினால் திரும்பிப்பெறப்பட்டு வேறு நடவடிக் கைகளுக்குப் பாவிக்கப்படவுள்ளது.

இதை மட்டக்களப்பு மீன்பிடித்திணைக் களத்திடம் கேட்டால் மீன்படி அமைச்சு இவ்விடயத்தில் கவனமில்லாமல் உள்ளது என்று கூறுகின்றார்கள். இதனால் அரசுக்கு ஒரு நட்டமுமில்லை. இதற்கென ஒதுக்கப்பட்ட பணத்தை ஏதாவது ஒரு சிங்களப் பகுதியில் அரசு செலவழித்து விடும். ஆனால் இதையே . நம்பியிருக்கும் மட்டக்களப்பு மீனவரின் நிலைதான் மிகவும் பரிதாபகரமானது. வேலையைச் செய்வதற்குரிய பணம் இருந்தும், இடம் இருந்தும் வேலை செய்ய ஆட்கள் இருந்தும் வேலையை ஆரம்பிக்காத அரசாங்கத்தை என்னவென்பது. அல்லது இங்குள்ள அதிகாரிகள் மட்டக்களப்பில் ஐஸ் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள முதலாளிகளிடம் பணத்தை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டு திட்டத்தை அமுல்படுத்தாமல் உள்ளார்களோ என்று சந்தேகப்பட வேண்டிய நிலையில் மட்டக்களப்பின் மீனவர்கள் உள்ளனர்.

## வீடுகளைக் கட்டவும் திருத்தவும் நிதி இல்லையென கைவிரிக்கிறது தேசிய வீடமைப்பு அதிகாரசபை

இதே போன்று மட்டக்களப்பில் உள்ள இன்னொரு விடயம் வீடமைப்புத் திட்டம். பொதுவாகக் கடந்த 10 ஆண்டுகளாகவும், விசேடமாக கடந்த 1990ற்குப் பிறகு நடைபெற்ற கலவரங்களினாலும் மிகப் பெரிய அளவில் கட்டிடங்களும், வீடுகளும் சேதமாக்கப் பட்டன. இவ்வாறு மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களாக ஏறாவூர், ஆறுமுகத்தான் குடியிருப்பு. வாழைச்சேனை, வாகரை ஆகிய பிரதேசங்களைக் கொள்ளலாம். கடந்த 10 ஆண்டுகளாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் உடைந்த வீடுகளைத் திருத்துவதாகவும், புதிய வீடுகளைக் கட்டுவதாகவும் கூறிக் கொண்டு செயற்படுகின்றார்களே தவிர பெரிதாக ஒன்றையும் காண முடியவில்லை. இவர்களுடைய வீடமைப்புத்திட்டம் 10 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டபோது ஒரு வீட்டைக் கட்டி முடிக்க ரூபா 15,000 தேவை என் மதிப்பிடப்பட்டு திட்டம் அமுல் படுத்தப்பட்டது. இன்றும் அதே ரூபா 15,000 த்துடன் தான் வீட்டைக் கட்ட இவர்கள் திட்டமிட்டுள்ளார்கள். இதன்படி பார்க்கும் போது வீடு என்ற பெயரில் ஒரு குடிசையைத்தான் இவர்களால் ரூபா 15,000ற்குக் கட்ட முடியும். அத்தோடு எண்ணிக்கைக்காக வீடு கட்டுகின்றார்களே தவிர வீடு வீடாக இருக்க வேண்டும் என்பதில் இவர்கள் அக்கறைப் படுவதாகத் தெரியவில்லை. யாராவது இது தொடர்பாக கேள்வி கேட்டால், வீட்டுச் சொந்தக்காரரை ஒரு பகுதிக் கரசைப் போட்டு வீட்டைப் பெரிதாகக் கட்டும்படி கூறுகின்றார்கள். தங்கள் உடமைகள் அனைத்தையும் இழந்து அகதியான மக்களிடம் வீடு கட்டுவதற்கு தேவையான பணம் எங்கிருந்து வரும் என்ற விடயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இன்றும் புரியாமலேயே உள்ளது.

இதே சமயம் உடைந்த வீடுகளைத் திருத்துவதற்கு அரசு தனது பணத்தைச் செலவிடுவதாக இல்லை. எப்போது கேட்டாலும் அரசாங்கத்திடம் இருந்து பணம் கிடைக்கவில்லை என்று கூறுவதே தேசிய வீடமைப்பு அதிகார சபைகளின் வழக்கமாகி விட்டது. நொராட் நிறுவனம் தான் தற்போது வீடமைப்புக்கான முழுப்பங்களிப்பையும் செய்து வருகின்றது. அரசாங்கமோ அகதிகளாக இடம்பெயர்ந்தோர் அனைவரையும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப் போவதாகக் கூறுகின்றது. அப்படிப் பார்க்கும் போது பல்லாயிரக்கணக்கான வீடுகள் புதிதாகக் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். அண்மையில் மட்டக்களப்பிற்கு வந்த மட்டக்களப்பு மாவட்ட சிவில் இணைப்பதிகாரி ஒஸ்ரின் பெர்ணாண்டோ மட்டக்களப்பிற்குச் செலவழிக்கப் பணம் இல்லை என்று வெளிப்படையாகவே கூறிவிட்டார். ஆனால் மட்டக்களப்பிற்கு அடிக்கடி அமைச்சர்கள், அதிகாரிகள் வருவதும் அதைச் செய்வோம் இதைச் செய்வோம் என்று கூறுவதும் வழமையாகி விட்டது.

## ஐ.தே.க அரசு அபிவிருத்தி செய்யவில்லை கட்சி வளர்க்கவே முயல்கிறது

அண்மையில் மட்டக்களப்பில் இடம் பெற்ற அமைச்சரவை உபகுழுக் கூட்டத்திலும் இவ்விடயம் பிரஸ்தாபிக்கப் பட்ட போது இப்போதைக்குப் பணம் இல்லை என்பதே கிடைத்த பதிலாகும். அப்படியானால் இந்த அமைச்சர்கள் அதிகாரிகள் எல்லாருமாக ஏன் அடிக்கடி மட்டக்களப்பிற்கு வருகிறார்கள் என்பது மக்களுக்குப் புரியாத விடயமாகவே உள்ளது. அண்மையில் மட்டக்களப்பில் 16 அமைச்சர்கள் கூடி மட்டக்களப்பை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஆராய்வார்கள் என அரசினால் பரவலாக விளம்பரம் செய்யப் பட்டது. ஆனால் கலந்து கொண்டதோ இரு அமைச்சர்கள் தான். ஆனால் இதே அமைச்சரவை உபகுழுக்கூட்டம் திருமலையிலும், வவுனியாவிலும் இடம் பெற்ற போது அனைத்து அமைச்சர்களும் கலந்து கொண்டார்கள். இதைப் பார்க்கும் போது சிங்கள மக்கள் அதிகமாக உள்ள இடங்களை மட்டும் தான் இந்த அரசாங்கம் அபிவிருத்தி செய்யும் போல் தெரிகின்றது. அத்தோடு மட்டக்களப்பை அபிவிருத்தி செய்யக் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் அழைக்கவில்லை. இதிலிருந்து ஒரு விடயம் உண்மையாகி உள்ளது. அதாவது அரசாங்கம் மட்டக்களப்பில் நடாத்தியது அபிவிருத்தி சம்பந்தப் பட்ட கூட்டம் அல்ல. ஐ.தே.கவின் செல்வாக்கை எப்படிப் பேணலாம் என்பதை ஆராய்வதற்கான கூட்டமே. ஏனென்றால் இக்கூட்டத்தில் எடுக்கப் பட்ட இன்னொரு முடிவு வலைவாடி, மாங்கேணி ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது அப் பகுதிக்கு வந்துள்ள சிங்களக் குடும்பங்களுக்கு உடன்டியாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்பதே. உண்மையில் இவர்களை விட மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட எத்தனையோ தமிழ், முஸ்லீம் குடும்பங்கள் இன்று நடுத்தெருவில் நிற்கின்றன. இது இந்த அரசாங்கத்தின் கண்களுக்குத் தெரியாமல் போனது ஆச்சரியமில்லை. இவ்விடயம் இங்குள்ள அரசாங்க அதிபருக்கும், ஏனைய அதிகாரிகளுக்கும் தெரியாமல் போனது ஆச்சரியம் தான் என்று சொல்லவும் முடியவில்லை.

அவர்கள் தான் ஐ.தே.க அரசாங்கம் 'வெட்டி வா' என்றால் கட்டிக் கொடுபவர்களாயிற்றே.

(இன்னும் வரும்)

நன்றி - நூலகத்திட்டம்



# அழிந்த ஊர்களின் அழியா நினைவுகள்



திருமலை மாவட்டத்தில் - திருமலை நகரிலிருந்து தென்கீழ்த்திசையில் திருமலை மட்டுநகர் வீதியில் பத்து மைல் பஸ்ஸில் சென்றால் கிண்ணியா நீரோட்டுமுனைத்துறையைச் சந்திக்கலாம். துறையைக் கடந்தால் பழைய ஊற்றடிப் பிள்ளையார் கோயில் வாயிலைப் பார்த்து வணங்கிக் கொண்டே பழைய தமிழ் ஊராயிருந்த சின்னக் கிண்ணியா ஊடாக கடற்கரை ஓரமாக பாதாளமலை வெளிச்சவீடு, சம்பூர்க் கெவுளியா முனை வெளிச்சவீடு, மூதூர் மூன்றாங்கட்டை மலை, கரிமலையூற்று, எருக்கலை முந்தல் மலைகள் என்பவை தொலைவில் தெரிகின்ற கொட்டியாபுரக்குடாவைப் பார்த்துக் கொண்டே பனைமரவரிசை நிழலால் (இப்போதில்லை) அலையடி அரவங்களைக் கேட்டுக் கொண்டே மிதி வண்டியில் அல்லது பொடி நடையில் சென்றால் மட்டுநகரிலிருந்து பகிரங்க வேலைப்பகுதியினரால் நடப்பட்டுள்ள 72 ஆம் தொலைக் கல்லடியிலுள்ள ஆலங்கேணிச் சந்தியைச் சந்திக்கலாம். (அதில் இருந்த மடமும், பிள்ளையார் கோயிலும் இப்போதில்லை) பெரிய கிண்ணியாப்பாலம் கடந்து புகாரியப்பள்ளிவாசல் சந்தியால் மடங்கிக் குட்டிக்கரைச்சை - இடிமண் வீதியாலும் ஆலங்கேணி செல்லலாம்.

42ஆம் 44 ஆம் ஆண்டுக் காலங்களில் 'சிறிய இங்கிலாந்தாகக்' காட்சி தந்த - 600 ஏக்கர் பரப்பின் தென்னந்தோப்புக்களையும், மூங்கிலடி வயல்களையும், வம்மிக்குளத்தையும் கொண்ட (தற்போது அழிந்த நிலையில் பறிபோயுள்ள) தாமரைவில் பழைய தமிழ் ஊரைத்தாண்டி கட்டையாற்றுப் பாலம் (இறால் பிடிப்போர் ஒருபுறமும், நீர்க்காகமும், கொக்கும் மறுபுறமுமுள்ள) கடந்து நடந்தால் ஆலங்கேணி (றோ.க.த.க.பா.யிருந்த) விநாயகர் மகாவித்தியாலத்தைக் காணலாம். தொடர்ந்து பாரதிவீதியால் நடந்தால் கடந்த 60-70-களில் சரித்திரம் படைத்து நின்ற பனிச்சையடிப் பாரதிபடிப்பகத்தைக் காணமுடியும். அருகிலுள்ள நாற்சதுக்கத்தின் முன்னால் கேணியருகே அற்புதம் பல புரிந்த -விழாக்கள் பல கண்ட ஆலையடிப் பிள்ளையார் கோயிலைக் கண்டு வணங்கலாம். அப்பால் நேரிய வீதியில் ஈச்சந்தீவு நோக்கிப் போனால் மேற்புறத்தம்பலகாமக் கோயில் திருவிழா வெடியோசை கச்சான் காற்றில் மிதந்து வரும் கரைச்சை வெளியைப் பார்த்துக் கொண்டே அடுத்த நாற்சதுக்கத்தில் இடுகாட்டின் முன்னாலுள்ள ஆலங்கேணி உள்ளூராட்சி மன்ற அலுவலகங்கத்தையும் அதனருகிலேயே சுற்றி வரப் பனைவேலி கொண்ட ஈச்சந்தீவு விபுலானந்த வித்தியாலயத்தையும் பார்க்க முடியும். நேரே மேலும் சென்றால் அடுத்த (அம்மாள் கோயில் கடந்த) நாற்சதுக்கத்தில் ஈச்சந்தீவு வேப்பையடிப்பிள்ளையார் கோயிலை (படிப்பகத்துடன்) காணலாம். மேற்குப் பக்க ஓடையைத் தாண்டிப் பூவரசந்தீவுக்கும், கொய்யாம் புளித்துறையைத் தாண்டிக் கண்டற் காட்டு வயல் வெளிக்கும் செல்வோர் செல்ல; கிழக்குப் பக்கக் கட்டையாற்றைக் கடந்து கண்டலடியூற்று உப்பாற்றின் வழியாக இறால்குழி, மூதூர்க்கு மட்டுமல்ல மயிலப்பன்சேனை, காரைவெட்டுவான் என்றும் போவோர் போய்க் கொண்டிருக்கலாம். கடற்கரையிலிருந்து கண்டலடியூற்றோரப் பாதையாலும் தாமரைவில் -முழங்கை முடக்குத் தோட்டம் கட்டையாறு கடந்தும் ஈச்சந்தீவுக்கு வந்தும் ஆலங்கேணிக்கு வரலாம்.

இது, கிண்ணியா வட்டத்தின் நடுவணமைந்துள்ள ஆலங்கேணி ஈச்சந்தீவுக்கு கிராமங்களின் நடை வழிப்படப்பிடிப்பின் சிறுபகுதி

மூதூர்ப்பழம் எழுத்தாளன் வ.அ.அண்மையில் வெளியிட்ட 'ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது' நாவலிலும் இவ்வூர்களின் படப்பிடிப்புகளையும், பாத்திரங்களையும் மேலும் படித்து மகிழலாம். இத்தகைய ஊர்களிரண்டும் கடந்த 90 ஆனி வன்செயலால் யாவும் இழந்து மக்கள் அகதியாக வெளியேறியபின் காட்டூராகிக் கண்டறிய முடியாத நிலையில் காட்சி தருவது கண்டு கலங்காதாரில்லை. திரும்பி மக்கள் குடியேறி இவ்வூர்கள் மீண்டும் பழைய நிலையை எய்துவது எளிதில் முடியக்கூடிய காரியமா? கூழும், கந்தலுமாயினும் அமைதியும், நிம்மதியுமல்லவா முக்கியம்? 93 இறுதியில் குடியேற்றம் நடந்துள்ளது. திருக்கோணமலை மாவட்ட முன்னேற்றச் சங்கம் உதவிக் கொண்டுள்ளது. புனர் வாழ்வையும் மறுமலர்ச்சியையும் பொறுத்திருந்து பார்ப்போம்?

## கலையில் பொற்காலங்கள்:

கடந்த 60-70கள் ஈச்சந்தீவு ஆலங்கேணி ஊர்களின் எழுச்சிமிக்க பொற்காலங்கள் எனலாம். 1965ஆம் ஆண்டு சித்திரைப்புத்தாண்டில் ஆலங்கேணிப்பாரதி படிப்பகத்தி நடந்த எழுச்சிமிக்க தமிழ். விழா சரித்திரப் பெருமைமிக்க ஒன்று என்றால் மிகையாகாது. மகாதேவன் ஆசிரியரின் மயான காண்டத்தை மறப்பவரார்? இவ்விழாக்களின் பின்னணியில் இருந்தவரும் ஆலங்கேணி -ஈச்சந்தீவு ஊர்களின் எழுச்சியின் -முன்னேற்றத்தின் ஊன்று கோலாய் விளங்கியவரும் வழிகாட்டியுமாயிருந்தவர் தற்போது வவுனியாவில் கல்வி அதிகாரியாயிருந்து கொண்டு இலக்கியப் பணிபுரிந்துவரும் 'இன்பக் கனிகள் -பாட்டுப் பாடுவோம்' நூல்களின் ஆசிரியர் திரு.ச.அருளானந்தம் ஆகிய 'கேணிப் பித்தன்' ஆவார். (திருமலை மாறி வந்துள்ளார்) அவர் ஆலங்கேணி விபுலானந்த மகா வித்தியாலய அதிபராயிருந்த காலத்தும், பிறகும் பல இலக்கிய முயற்சிகளை எடுத்தார். பல விழாக்களை நடாத்தினார்.பல ஆர்வலர்களைத் தூண்டி விட்டார். வள்ளுவர் விழா என்றும், பாரதி விழா என்றும், பாரதிதாசன் விழா என்றும், அண்ணா விழா என்றும், சிவநிசி விழா என்றும், வாணி விழா என்றும், பொங்கல் விழா என்றும், பாவை விழா என்றும் கோயிலிலும் பள்ளியிலும் படிப்பகத்திலும் எப்போதும் விழா மயமாகவே இருந்தது. பிறபகுதிகளில் நிகழும் விழாக்களுக்கு கவிதை அரங்குகளென்று பலரையும் இழுத்துச் செல்வார். இத்தூண்டுதல்களால் பலர் துலக்கினார்கள். அதில் யானும் ஒருவனானேன். எங்கு கலை விழாவோ தமிழ் விழாவோ? எங்கு கவியரங்கோ -பாமேடையோ அங்கு நாமிருப்போம், துரை இருப்பார். அக்காலத்தை இன்றும் நினைத்துப் பார்க்கிறோம். அந்நாள் மீண்டும் திரும்புமா? வருங்காலந்தான் விடை தரவேண்டும்.

இக்காலகட்டத்தில் ஆலங்கேணியில் உருவாகிய 'கேணிச்சுடர்' முத்திங்கள் கையெழுத்து இலக்கிய ஏடு பெரும் பணி புரிந்துள்ளது என்று தான் சொல்ல வேண்டும். புரட்சிக் கவிதைகள், புதுமைக்கவிதைகள், தொடர் நாவல்கள், சித்திரத் தொடர் கதைகள், நாடகங்கள், துண்டு துணுக்குகள், கட்டுரைகள், ஓவியங்கள் போன்ற பலவும் அதில் வெளிவந்தன. தொடாதவர்களும் பேனாவைத் தூக்கினார்கள், கிறுக்கினார்கள். தரமான பல ஆக்கங்கள் வெளியாகின. மு.வே.யோ.வின் 'பயணம், சங்கே முழங்கு' நூல்கள் வெளிவந்தன. அவரின் 'என்ர மகன் டாக்குத்தர்' நாடகம் மறக்க முடியாத ஒன்று. கூடி நடித்த கேணிப்பித்தன், ஆலையூரன், லிங்கன், கோமலை, முத்து, தவம், துரை, யோகம், சச்சி, நாகன் மற்றும் பலரையும் இன்றும் நினைத்துப்பார்க்கிறோம். மகாலிங்கத்தின் சச்சிதானந்தனின் ஓவியங்கள் கேணிச்சுடரில் கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும். துரை நாயகத்தின் கைவண்ணத்தில் விஜய குமாரின் பொறுப்பில் பல ஆண்டுகளாக வெளிவந்த கேணிச்சுடரில் ஒரு பிரதி கூட இன்று பார்க்கக்கிடைக்காமை வருத்தத்திற்குரியதாகும்.

**- ஞானம் -**

கடந்த 70 களில் ஈச்சந்தீவில் உருவான 'ஈச்சம் பழம்' முத்திங்கள் கையெழுத்து இலக்கிய ஏடும் குறிப்பிடத்தக்க பணிபுரிந்துள்ள தெனலாம். ஈச்சந்தீவு இ.இ மன்றத்தினரால் நடாத்தப்பட்ட பிள்ளையார் படிப்பகத் திறப்பு விழாவன்று திரு சாம்பசிவம், சிவயோகச் செல்வனால் வெளியிட்டுவைக்கப்பட்ட ''ஈச்சம்பழம்'' சில காலம் வெளிவந்து பின்னர் பல காரணங்களால் தடைப்பட்டு நின்று மீண்டும் தட்டச்சில் திரு. சு. திருஞானத்தின் விடாமுயற்சியால் வெளிவந்ததைப் பலரும் பார்த்திருப்பர். படித்திருப்பர். இன்றும் அதன் பழைய பிரதிகள் பார்வைக்கு உண்டென்பது சிறு மகிழவைத்தரும் சம்பவந்தான். திருமலை மாவட்ட இலக்கிய வரலாற்று வளர்ச்சிக்கு இவ்விரு ஏடுகளும் தினைத்துணை நன்றியாவது செய்திருக்கும் என்பதும், பயன் தெரிவார் அதைப் பனைத்துணையாய்க் கொண்டிருப்பர் என்பதும் உண்மையே.

மற்றும் ஆலங்கேணியில் உதித்த 'அண்ணா இசைக்கழகம்' பல விழாக்களில் தன் முத்திரைகளைப் பதித்துள்ளது எனலாம். திரு. குணரெத்தினம் மைனாவதி, கணபதி இராகினி, நரேந்திரன் மற்றும் பலர் மறக்கப்பட முடியாத கலையார்வலர்களாவர். 'ஆலையூர்ப் பதிகம்' தந்த கவிஞர் தாடிப் பெரியார் பிட்டிச அம்பலவாணரின் மகன் கௌரிதாசன் இன்றும் கவியாத்து ஆலங்கேணியின் புகழ் பரப்பிக் கொண்டிருக்கிறார். ஈச்சந்தீவில உதித்த 'விபுலானந்த இசைக்கழகம்' இசை, நாடகக்கலைகட்கு இயன்ற பங்காற்றத் தவறியதில்லை எனலாம்.. பள்ளி நிதிக்காக (கோயில்) நாடகம் போட்டதும், கங்கைக்கரைக்கோயில் கிண்ணியாக்கோயில் மற்றும் இடங்கட்கு வில்லுப்பாட்டொடு சென்று வந்ததும், மற்றும் பல விழாக்களில் முன்னின்றுழைத்ததும் நெஞ்சை விட்டகலாதவைகளே கா.நடராசா, கு.முத்துலிங்கம், சு.நாகரத்தினம், சு.யோகராசா, ச.தருமசேகரம், செ.துரைநாயகம், ச.தவராசா, ச.சச்சிதானந்தம் மற்றும் பலரின் கலைப்பணிகள் நினைத்துப்பார்க்க வேண்டியவையே. இத்தகையோரைப் பின்பற்றிய பல இளைஞர் இன்றும் கலை வளர்ப்பதில் ஆர்வமுடையோராயிருந்தும், சூழ்நிலை வாய்க்காததால் நீறு பூத்த நெருப்பாயுள்ளனர். வாய்ப்புவரின் துலங்குவர் என நாம் எதிர்பார்க்கலாம்.

## பால் மணக்கும் பூமி

ஈச்சந்தீவு -ஆலங்கேணி வாழ் மக்களின் (125+350 குடும்பங்கள்) தொழில் துறைதான் சற்றுக்கடினமானதும், குறிப்பிட வேண்டியதுமாகும். ஆலங்கேணிப் பாற்காரர் வைகறை 4 மணிக்கு முன் காத்தடி பாற்குடங்களுடன் கண்டற்காடு, இறவடி, மணலாறு தொடக்கம், 8-10மைல் தொலைவிலுள்ள மடம் பொன்னாங்காணி வரை நடைபோடத் தொடங்கிவிடுவர். பட்டிக்காரர் மாடு பார்த்து -அடைத்து- கறந்து தரும் பாலுடன் திரும்பி வரப் பத்துமணியுமாகலாம்? தயிர்க்காரிகள் காய்ச்சிஉறைத்துத்தரும்பேணி-சட்டி-புட்டித் தயிரைத் தயிர் காவுவோர் விடியுமுன் கொண்டு சென்று கிண்ணியா, தொடக்கம், பஸ்ஸில் திருமலை வரை சென்று விற்று வருவர். ஒருவருக்கொருவர் உதவி புரிவர். ஒருவரிலொருவர் தங்கியிருப்பர். வண்டி -மாடு உள்ளோர் கொய்யாம்புளித்துறைமூலம் (ஆற்றில் மாட்டுடன் வண்டியைப் பாய்ச்சி) கண்டற்காடு சென்று மாரியில் வேளாண்மை (பயிர்) செய்வர். சில காலத்தில் மழை அதிகரித்து அருவி வெட்டைக் கெடுக்கும். சிலபோதில் மழை பெய்யாது பயிரைச் சாகடிக்கும். சிலவேளை அருமையாக விளைவதும் உண்டு. கந்தளாய் (மாவலி) மூலம் நீர்ப்பாய்ச்சல் வசதி செய்யப்பட்டிருக்குமாயின் முப்போகமும் வயற்செய்கை நடைபெற வாய்ப்புண்டு. இவ்வேளாண்மைச் செய்கையில் தமிழ் முஸ்லீம் மக்கள் சகோதரர் போல் கடந்த காலங்களில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்க சரித்திர சம்பவமாகும். ஒரு சில தோணிகள் வைத்திருப்போர் சுருக்க வழியால் ஆற்றின் மூலம் (1 1/2 மைல்) கண்டற் காடு சென்று வருவதுமுண்டு. இன்னும் சிலர் கிழக்கு முகமாயுள்ள உப்பாற்றுத் துறைமூலம் சென்று மீள்வதுமுண்டு. அருவி வெட்டுக்காலங்களில் பெண்களும் சென்று வயல் மால்களில் தங்கியிருந்து சமையல் -கதிர்பொறுக்கல் -பசுர்புடைக்கல் போன்ற பல வேலைகளிலும் பங்கேற்று உதவி புரிவதும் உண்டு. பல துயரங்களின் மத்தியிலும் ஒரு மகிழ்ச்சியான- சுதந்திரமான தொழிலாயிருந்தது இந்த வேளாண்மை பயிர்ச்செய்கைத் தொழிலே.

கோடையில் ஒரு சிலர் செங்கல்லரிதல், (கல்லடி வெட்டுவான்) கூலி வேலைகளுக்கு (தம்பலகாமம், அருவி வெட்டு) செல்ல, மீதியானோர் கண்டல்காடு தாண்டி மகாவலி கங்கைக்கரைக்கு (மடம்- பொன்னாங்கேணி அகத்தியர் தாபனம்) மிளகாய்த் தோட்டப் பயிர்ச் செய்கைக்காகச் செல்வர். உ... அதிபர் மூலமான நீர் இறைக்கும் இயந்திர உதவியுடனும் சிலர் துலா ஏத்தினால் (கையால் வாளியால்) இறைத்தும் மிளகாய்ச் செய்கையில் ஈடுபடுவர் (புகையிலை, மரவள்ளி, நெல், பயற்றையுங்கூட) 72-77 ஆண்டுக்கால சுதந்திரக்கட்சி ஆட்சியின் போதில் பலர் 'சோயா'ச் செய்கையில் ஈடுபட்டுச் சிறந்த விளைச்சல் பெற்றதுமுண்டு. மிள்காயைப் பச்சையாய் ஆயாமல் பழுக்க விடுவார்கள்.

பழுத்ததும் ஆய்ந்து காயவைத்துச் செத்தலாக்குவர். நல்ல விலைக்கு விற்பர். மீதியை இருப்பில் வைத்திருப்பர். இத்தகைய தொழில் யாவும் 90 வன்செயலுடன் நாசமாகியது மட்டுமல்ல, அகதி முகாம்களில் நிவாரணம் தின்று மக்கள் (ஆண்கள்) சோம்பேறிகளாகவும் ஆகியது குறிப்பிட வேண்டியதே. இன்னுமோர் சோம்பேறித் தொழிலும் எம் ஊர்ப்பகுதிகளிலுண்டு அதாவது வடித்தலும்- குடித்தலும்- ஆளையால் கடித்தலுமாகும். இத்தொழில்கள் மறைந்து ஏனைய பயிர்த் தொழில்கள் மீண்டும் பழமை போல் செய்து மக்கள் சுதந்திரமாய் வாழும் சூழ்நிலை உருவாகுமா? இதற்கு உதவக்கூடிய அரசோ,அரச சார்பற்ற நிறுவனங்களோ உண்டா? அல்லது இதே தலை விதிதானா? என்பதைக் காலம் தான் மதிப்பீடு செய்ய வேண்டும். புனர்வாழ்வு தற்காலிகமாயிராது நிரந்தரமாகும் நன்னாள் எந்நாளோ?

மேற்கே தம்பலகாமம், கிழக்கே மூதூர், சம்பூர் சேனையூரும், தெற்கே கிளிவெட்டி -மல்லிகைத் தீவும், வடக்கே சாம்பல் தீவு -நிலாவெளியும் வளர்த்த கலைகளின் மத்தியில் திருமலை மாவட்டத்தில் எமது ஆலங்கேணி - ஈச்சந்தீவு ஊர்களும் கலை இலக்கிய முயற்சிகளில் குறிப்பிடத்தக்க பணிபுரிந்து வரலாற்றில் பங்கேற்றிருக்கின்றன என்றால் அதில் தவறில்லை என்றே கருதுகின்றேன். இதில் பல சம்பவங்கள் விடுபட்டிருக்கலாம். சில பெயர்கள் சேர்க்கப்படாதிருக்கலாம்? தெரிந்ததை முடிந்த மட்டில் சுருக்கமாய்ச் சொல்லியுள்ளேன். நினைப்புள்ளோர் சேர்ப்பன சேர்த்து மேலும் நிறைவாக்கலாம்! குறைபாடுகள் இருப்பின் பொருட்படுத்தாமல் குணம் நாடிக்குற்றமும்நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொள்ளுமாறு கேட்டு முடிக்கின்றேன்.

நன்றி - நூலகத்திட்டம்



# இந்தியாவும் ஈழத் தேசியப் பிரச்சினையும் - 4

## தமிழ் பேசும் மக்களுக்கு வங்கம் தரும் புதிய பாடம்!

டி.சிவராம்

தென் ஆசியப் பிராந்தியத்தில் தன்னைச் சுற்றியுள்ள நாடுகளில் அரசியல், இராணுவ நெருக்கடிகளை உருவாக்க இந்தியா பயன்படுத்திய பிரதான ஆயுதம், அந்நாடுகளில் காணப்பட்ட இனமுரண்பாடுகளேயாகும். இதனாலேயே இலங்கைத் தமிழ் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான இந்தியாவின் அணுகுமுறையையும், தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் நடைபெற்று வருகையில் அது காலத்துக்குக் காலம் எடுத்து வந்த நிலைப்பாடுகளையும் புரிந்து கொள்வதற்கு ஒரு முன்னுரையாக இப்பிரதான ஆயுதம் பிராந்தியத்தின் ஏனைய நாடுகளில் எவ்வாறு பிரயோகிக்கப்பட்டது என்பதைச் சுருக்கமாகவேனும் விவரிக்க வேண்டியுள்ளது. இதிலும் நாம் கருத்திற் கவனமாகக் கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டு உண்டு. முதலாவது இலங்கையின் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையில் தலையிடத் தொடங்குவதற்கு வெகு காலத்திற்கு முன்பிருந்தே அண்டைய நாடுகளில் நெருக்கடி ஏற்படுத்த சிறுபான்மை இனங்களை கையாள்வது தொடர்பாக இந்தியா கடைப்பிடித்து வந்த பொதுச் செயல்முறை. இப்பொதுச் செயல்முறையைப் பின்வருமாறு நாம் வகுக்கலாம்.

கட்டம் ஒன்று; தன்நாட்டு அரசுடன் முரண்பட்டு நிற்கும் ஒரு சிறுபான்மை இனத்தின் அல்லது அரச எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல்.

கட்டம் இரண்டு; பணம், ஆயுதம், பயிற்சி மற்றும் அரசியல் நடவடிக்கைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் என்பவற்றை வழங்கல்.

கட்டம் மூன்று; முழுமையாகச் சாதகமாகச் செயற்படக்கூடியோர் யார், தீவிரப் புரட்சிகர இடது சாரிகள் யார், சொந்தப்பலம் கொண்ட கடுந்தேசிய வாதிகள் யார், இந்திய நலனுக்குப் பாதகமான வெளியுலகத் தொடர்பு உள்ளவர்கள் யார் என இனங்கண்டு தனக்கு முழு அடிவருடிகளாக இயங்கக் கூடியவர்களையும் பணத்திற்காக வேலை செய்பவர்களையும், சொந்த அரசியற் பலமற்றவர்களையும் வளர்த்தெடுத்து பிரதானப்படுத்தல். ஏனைய தலைவர்களை ஓரங்கட்டல், அல்லது கட்டாயம் ஏற்பட்டால் இல்லாதொழித்தல். இதிலும் குறிப்பாக பலமான இடதுசாரிப் பின்னணி கொண்டிருந்தோரைப் பற்றி இந்தியா மிகக் கவனமாகவே இருந்தது.

கட்டம் நான்கு; கலகங்கள், ஆயுதப் போராட்டங்கள், சட்ட மறுப்பு நடவடிக்கைகள், பயங்கரவாத நடவடிக்கைகள் ஊடாக சம்பந்தப்பட்ட நாட்டில் இராணுவ அல்லது அரசியல் நெருக்கடியை உண்டாக்கல்.

கட்டம் ஐந்து; இந்நெருக்கடிகளினால் ஏற்படக்கூடிய நேரடி அல்லது மறைமுக விளைவுகளைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட நாட்டின் மீது இராஜதந்திர ரீதியான அழுத்தத்தை உண்டாக்கல்.

அநேகமாக மேற்கூறிய முறையில் இந்தியா உருவாக்கும் நெருக்கடிகளின் நேரடி விளைவு அகதிப் பிரச்சினை தான். சூழ்நிலைகளைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைகள் மோதலாகத் தூண்டி விடப்படும் போது பல்லாயிரக் கணக்கான மக்கள் தம்நாட்டு எல்லைகளுக்கு அப்பால் இடம்பெயர்தல் இயல்பே. இவ்வாறு தன் மண்ணிற்கு இடம்பெயர்ந்து வரும் அகதிகளைக் காரணம் காட்டி சம்பந்தப்பட்ட அண்டை நாட்டின் அரசியலில் இந்தியா தலையிட நியாயம் தேடிக் கொள்ளல். மறைமுக விளைவு எனும் போது- தூண்டி விடப்பட்ட நெருக்கடி உக்கிரமடைவதோ, அல்லது தணிந்து போவதோ தனது கையிலேயே தங்கியுள்ளது என்பதை சம்பந்தப்பட்ட அண்டை நாட்டுக்கு இந்தியா புரிய வைத்தல்.

இனி இரண்டாவது; அண்டைய நாடுகளில் இன, அரசியல் முரண்பாடுகளைத் தூண்டி தன் நலன்களை முன்னெடுக்க இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகளை மேற்கூறிய பொதுச் செயல்முறையின் அடிப்படையில் விளக்கக் கூடியதாய் இருப்பதற்குப் பிரதான காரணம் வெளியுறவு அமைச்சிலும் றோவிலும் இருந்த, மற்றும் தற்போது உள்ள, ஒரு குறிப்பிட்ட சில மேலதிகாரிகளும், காங்கிரஸ் கட்சி அரசியல்வாதிகளும் தமக்குள்ளேயே மாறி மாறி பொறுப்புக்களையும் கொள்கை வகுத்தலையும் வைத்துக் கொண்டமையே எனலாம்.

உதாரணமாக கிழக்குப் பாகிஸ்தான் 'இன்றைய பங்களாதேஷ்) நேபாளம், இலங்கை ஆகியவற்றில் நெருக்கடிகளைத் தோற்றுவித்த இந்திய அரசு அந்த இடங்களில் தன் குறிக்கோள்களை அடைவதற்கு மேற்கொண்ட முயற்சிகளில் சந்திரசேகரன் என்ற ஒரு றோ உயரதிகாரியே சம்பந்தப்பட்டிருந்தார். 80களில் நேபாளத்திலும், இலங்கையிலும் (தமிழர் பிரச்சினையைக் கையாள்வதில்) இந்தியா கண்ட 'வெற்றிகளுக்கு' அத்திவாரம் அமைத்துக் கொடுத்த றோவின் நடவடிக்கைகளுக்கு இவரே பொறுப்பதிகாரியாகச் செயல்பட்டார். (இந்தத் 'தமிழ் பேசும் பாலக்காட்டுப் பிராமணரே அனைத்து ஈழ விடுதலை இயக்கத் தலைவர்களுடனும் 'சந்திரன்' என்ற பெயரில் நெருங்கிப் பழகிய தலைமை றோ அதிகாரியாவார்.)

இதே போல் அண்மையில் இந்தியாவின் வெளியுறவுக் காரியதரிசியாக இருந்து ஓய்வு பெற்ற டிக்ஷிற்றும் பாகிஸ்தான், பங்களாதேஷ் இலங்கை ஆகிய நாடுகளில் இந்தியா இனப்பிரச்சினைகளைக் கையாண்டு தன் நலன்களை முன்னெடுக்க முயன்ற காலகட்டங்களில் இந்தியாவின் தலைமை இராஜதந்திரியாக அந்நாடுகளில் செயல்பட்டவராவர்.

இன்னொருவர் ஜா. இவர் இலங்கைக்கு வருமுன்னர் நேபாளத்தில் இந்தியத் தூதுவராய் இருந்தவர். அங்கு சீனாவுடன் நெருங்க முற்பட்ட மன்னர் பிரேந்திராவின் அதிகாரத்தை நசுக்க டெல்லி வகுத்த வியூகங்களை நடைமுறைப்படுத்துவதில் சந்திரசேகரத்துடன் இணைந்து செயலாற்றியவர்.

கொள்கையளவில் இது போன்ற அதிகாரிகள் அனைவரும் நேரு, இந்திரா காந்தி ஆகியோரின் குழந்தைகளே, அவர்களும் பிராமணர், இவர்களும் பிராமணர் என்பதும் இன்னொரு காரணி. (இது பற்றிப் பின்னர் விரிவாக ஆராய்வோம்)


இப்பின்னணியைக் கருத்திற் கொண்டே நாம் இனி தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் இந்தியா பயன்படுத்திய ஏனைய இன அரசியல் முரண்பாடுகளைப் பற்றி ஆராய்வோம். இதன் மூலம் ''இலங்கைத் தமிழரின் துயர் துடைக்க டெல்லி ஆட்சியாளர் மனம் உருகி ஓடோடி வந்தனர்'' என்ற மாயையின் இருள் ஓரளவேனும் விலகுமாயின் பிரயோசனமுண்டாம்.

1972இல் கிழக்குப் பாகிஸ்தான் பங்களாதேஷ் என்ற தனிநாடானதும், அத் தனி நாட்டுப் போராட்டத்தினை ஷேய்க் முஜிபூர் றகுமானின் தலைமையில் இயங்கிய முக்திபாகினி எனும் இயக்கம் இந்தியாவின் உதவியுடன் நடாத்தியதும் யாவரும் அறிந்த விடயம். 72 இல் இருந்து தனிநாடுதான் இலங்கைத் தமிழருக்கு ஒரே வழி எனப் பிரச்சாரம் செய்யத் தொடங்கியிருந்த சில தமிழ்த் தலைவர்கள் தமிழ் ஈழ விடுதலைப் போருக்கும் இந்தியா தார்மீக ஆதரவு வழங்கி பங்களாதேஷைப் போன்று தனி நாடாக்க உதவும் என நம்பினர். இந்தியாவின் உதவியுடன் பங்களாதேஷ் விடுதலை பெற்றதை தமிழ் ஈழப் போர்ராட்டத்துடன் இணைத்து அமிர்தலிங்கம் அவர்கள் ஆற்றிய நீண்ட உரையொன்று அவரது ஊரான பண்ணாகத்தைச் சேர்ந்த இளைஞர் அமைப்பொன்றினால் 'வங்கம் தந்த பாடம்' என்ற பெயரில் வெளியிடப்பட்டது. ஆனால் வங்கம் உண்மையில் தந்த பாடம் என்ன என்பது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. தமிழீழம் வங்கம் போல் தனிநாடாகிட இந்தியாவின் தார்மீக ஆதரவு கிடைக்கும் என்பதே 84 வரை தமிழருக்கு 'வங்கம் தந்த பாடமாக' இருந்தது. இந்த ஆண்டில் PLOT இயக்கத்தினருக்கு இந்திய இடதுசாரி ஆயுதப் புரட்சியாளரான 'நக்சல்பாரி' இயக்கத்தின் ஒரு பிரிவான வினோத் மிஸ்ரா குழுவினருடாக, விடுதலையடைந்த பங்களாதேஷில் மரணதண்டனை விதிக்கப்பட்ட இட துசாரி வங்க விடுதலை வீரர் ஒருவர் தூக்கிலிடப்படுமுன்னர் ஆற்றிய உரையின் கையெழுத்துப் பிரதி ஒன்று கிடைத்தது. அதில் மிக மோசமான இந்தியாவின் உண்மை உருவம் அம்பலப்படுத்தப்பட்டிருந்தது. வங்க விடுதலையின் முதுகெலும்பாக இருந்த இடதுசாரிகளை இந்தியா எவ்வாறுவிடுதலையின் பின் நசுக்கிற்று என்பதும், முஜிபூர் றகுமான் எங்ஙனம் ஒரு இந்திய கைக்கூலியாக செயல்பட்டு தன் தேச மக்களின் உரிமையை இந்தியாவிற்கு தாரை வார்த்தார் என்பதும், இது எதிர்ப்புரட்சிக்கு எப்படி வழிவகுத்தது என்பதுமாக இப்படிப் பல விடயங்கள் அவ்விடுதலை வீரரின் உரையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

62இல் சீனா இந்தியாவை அதன் வடகிழக்கு எல்லைப்புறத்தில் போரிட்டு வெற்றி கண்ட காலத்திலிருந்தே டெல்லி ஆட்சியாளர் கிழக்குப் பாகிஸ்தானைப் பற்றிக் கவலை கொண்டிருந்தனர். பாரதத்தின் வட கிழக்கு எல்லைப் புற அஸ்ஸாம், மணிப்பூர் மலைப்பிதேசத்தில் நாகர்கள், மீசோக்கள், குக்கிகள், மீற்றிகள் ஆகிய இனங்கள் டெல்லிக்கு எதிராகத் தனிநாடு கோரிப் போராடி வந்தனர். அஸ்ஸாம், மணிப்பூர் மலைப்பிரதேசம் ஒருபுறம், கிழக்குப் பாகிஸ்தானின் சிட்டகாங் மலைப்பிராந்தியத்தின் தொடர்ச்சியாகவும் மறுபுறம் சீனா, மியன்மார் (பர்மா) ஆகியவற்றுடன் பொது எல்லை கொண்டதாகவும் அமைந்துள்ளது. சீனாவும், பாகிஸ்தானும் சிட்டகாங் பகுதியினூடாக அஸ்ஸாம், மணிப்பூர் பகுதிகளில் போராடி வந்த பல்வேறு இனத்தவருக்கும், பயிற்சியும் ஆயுதமும் வழங்கி வந்தன. அந்நிலை தொடர்ந்தால் சீனாவுடன் இன்னுமொரு யுத்தம ஏற்படும் சந்தர்ப்பத்தில் தன் வட கிழக்குப் பிராந்தியத்தையே இழந்து விடலாம் என டெல்லி அஞ்சிற்று.

கிழக்குப் பாகிஸ்தானில் பெரும்பான்மை இஸ்லாமிய வங்காளிகளும் சிறுபான்மை இந்து வங்காளிகளும் சிட்டகாங் மலைப்பகுதியில் சக்மா (chakma) இனத்தவரும் இருந்தனர். ஆன்மீக அமைப்புகள் என்ற போர்வையில் இயங்கிய சில நிறுவனங்களூடாகவும் ஏனைய வழிகளிலும் இந்து வங்காளிகள் மத்தியில் இந்திய உளவுத்துறை வேலை செய்யத் தொடங்கிற்று. இதே வேளை தமக்குக் கூடிய மாநில அதிகாரப்பகிர்வு வேண்டுமென இஸ்லாமிய வங்காளியர் பலர் குரலெழுப்பி வந்தனர். அவர்கள் மத்தியிலும் ஷேய்க் முஜிபூர் போன்றவர்களை இந்தியா இனங்கண்டு வளர்க்கத் தொடங்கியது. பின்னர் றோவினூடாக ஆயுதப் பயிற்சி வழங்கி யுத்த நிலையை உருவாக்கிற்று. இதனால் பல்லாயிரக்கணக்கான வங்காளிகள் அகதிகளாக இந்தியாவினுள் வந்தனர். அகதிப் பிரச்சினையைக் காரணம் காட்டி கிழக்குப் பாகிஸ்தானுள் படையெடுத்த இந்தியா அதை பங்களாதேஷ் எனும் தனிநாடாக்கிற்று. தமக்குக் கைக்கூலிகளாக மறுத்த விடுதலைப் போராளிகளை நசுக்கி அல்லது அழித்து, செயல்பட்ட டெல்லி ஆட்சியாளர்கள், முஜிபூர் றகுமானை தமக்குச் சாதகமான சில நடவடிக்கைகளை எடுக்கும்படி அவரை நிர்ப்பந்தித்தனர். இந்த நடவடிக்கைகளினால் அரசியல் ரீதியாகப் பலவீனமடைந்திருந்த முஜிபூரின் ஆட்சியை எதிர்ப்புரட்சியாளர்கள் தூக்கியெறிந்தனர். அத்துடன் அவரையும் கொன்றனர். இதன் பின் இந்தியாவின் பிடியிலிருந்து பங்களாதேஷ் விலகிற்று. குறிப்பாக சியா- உர்- றகுமானின் இராணுவ ஆட்சியின் கீழ் அந்நாடு இந்திய நலன்களுக்கு எதிராகவும் இயங்கத் தொடங்கிற்று.

இந்த நிலையில் பங்களாதேஷ் மீது அழுத்தம் கொடுக்க டெல்லி ஆட்சியாளர் பல வழிகளைக் கையாளத் தொடங்கினர். அதில் ஒன்று சக்மா இனத்தவரின் பிரச்சினை. இந்த இனத்தவர் பங்களாதேஷின் சிட்டகாங் (Chittakong) மலைப்பிரதேசத்தில் வாழ்ந்து வரும் பழங்குடியினராவர். பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்கள். இவர்களுடைய பாரம்பரியப் பிரதேசங்களில் பங்களாதேஷ் அரசானது நிலங்களைத் திருத்தி ஆயிரக்கணக்கான வங்காளிகளை குடியேற்றி வந்தது. இஸ்லாமியரான வங்காளி இனத்தவரின் திட்டமிடப்பட்ட குடியேற்றங்களினால் பொருளாதார ரீதியாகவும் கலாசாரரீதியாகவும் அச்சுறுத்தப்பட்ட சக்மா இனத்தவர் பங்களாதேஷ் அரசை எதிர்க்கத் தலைப்பட்டனர். இவ்வெதிர்ப்பு காலப் போக்கில் சாந்தி பாகினி எனும் ஆயுதமேந்திய இயக்கமாக உருவெடுத்தது. அதற்கு றோ உதவி வழங்கிற்று. சக்மாக்களின் ஆயுதப் போராட்டத்திற்கெதிராக பங்களாதேஷ் இராணுவம் எடுத்த நடவடிக்கைகளின் கொடூரம் காரணமாக அவ்வினத்தவரில் ஆயிரக் கணக்கானோர் இந்தியாவின் இமாசலம், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களுக்கு அகதிகளாக இடம் பெயர வேண்டியதாயிற்று. ஆரம்பத்தில் இதை இந்தியாவும் ஊக்குவித்து வரவேற்றது. பின்னர் சக்மா அகதிகள் தன் மண்ணில் தங்கியுள்ளதால், அவர்களுடைய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் தனக்கும் அக்கறை உண்டு எனக் கூறிக்கொண்டு பங்களாதேஷ் மீது இந்தியா இராஜதந்திர அழுத்தங்களை ஏற்படுத்தியது. சிட்டகாங் பிரதேசம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதாலும் சக்மாக்களுக்கு றோ ஆயுதம் வழங்குவதை நிறுத்தும் வரை தனக்குத் தலையிடி என்பதாலும், பங்களாதேஷ் அரசும், சில விடயங்களில் இந்தியாவின் நெருக்குதல்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. எனினும் சக்மா அகதிகளைத் தொடர்ந்து இந்திய மண்ணில் தங்க வைத்துக் கொள்வதிலும் அவர்களில் சிலரைத் தேவைக்கேற்றபடி காலத்துக்குக் காலம் பயிற்சியும், ஆயுதமும் வழங்கி பங்களாதேஷிற்குள் தாக்குதல்களை மேற்கொள்ள அனுப்புவதிலுமே டெல்லி அக்கறை காட்டுகிறது. ஏனெனில் சக்மா அகதிகளை கைவசம் வைத்திருப்பது எப்போதும் பங்களாதேஷ் அரசின் மீது இராஜதந்திர ரீதியாக நெருக்குதல் கொடுக்க உதவும் என இந்தியா நினைக்கிறது. இடையில் இமாசல மாநிலத்தில் தங்கியுள்ள சக்மா அகதிகள் பெரும் அல்லற்படுகின்றனர். இமாசல மாநில அரசும், அங்குள்ள பலரும் அவர்களை வெளியேற்ற வேண்டும் எனக் கோரிப் பிரச்சினை கிளப்பி வருகின்றனர். ஒருபுறம் திட்டமிடப்பட்ட குடியேற்றங்கள், பொருளாதார கலாசார நெருக்குதல்கள் ஆகியவற்றால் நசுங்கிவரும் பாரம்பரியத் தாயகம். மறுபுறம் விடுதலை தேடிப் புறப்பட்டு இன்று முழுமையாக இந்தியாவின் கைக்கூலியாகிவிட்ட சாந்தி பாகினி இயக்கம், இடைநடுவே அகதிகளாகவும், இரண்டாந்தரப் பிரசைகளாகவும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள சக்மா மக்களின் எதிர்காலம் இருள் மண்டிக் கிடக்கிறது. இதுவே தமிழ் பேசும் மக்களுக்கு வங்கம் தரும் புதிய பாடம்.



நன்றி - நூலகத்திட்டம்



# ஆனவாசல் அகதி முகா

# இன்னொரு புட்டபர்

# தீவைப்பின் பி

எல

புட்டபர்த்தியில் சாயிபாபாவின் ஆசிரமத்தில், அவர்மீதான கொலை முயற்சி ஒன்று நடந்தது முடிந்த கதை.

சென்ற ஆண்டு, இந்திய மாநிலங்கள் அனைத்தையும் உலுக்கிய இந்தச் சம்ப வத்தின் பின்னணிகளை ஆராய்ந்தவர் களுக்கு கிடைத்தமுடிவுகள் என்ன என் பது யாருக்கும் தெரியாது.

எல்லா விசாரணைகளும், பின்னணிக ளும் மூடிமறைக்கப்பட்டுவிட்டன. கொலை முயற்சியாளர்கள் பற்றிய தக வல்கள் கூட. புட்டபர்த்தியில் தான் இது மர்மமாகப் போனதென்றால், அதைவிடப் பெரிய மர்மமாக இருக்கி றது அண்மையில் ஆனவாசல் அகதிமு காமில் குடிசைகள் தீக்கிரையான சம்ப வம்.


ஆனால் புட்டபர்த்தியினர்க்கும் அரசி யல்வாதிகட்கும், அதிகாரத்தில் உள்ள வர்கட்கும் இடையிலுள்ள உறவு பிர சித்தமானது.

'மூடிமறைப்பதெல்லாம் அவர்களுக்கு சாதாரணமான விடயம். ஆனால் இங்கு?


மர்மத்தை துலங்கவைப்பதில் யாருக் கும் அக்கறை இல்லை. அந்த அப்பாவி அகதிகளுக்கு உதவியளிக்கும் சமூக சேவை நிறுவனத்துக்குக்கூட. அகதி கள் தமது தலைவிதியை நொந்து கொள்வதுதான் ஒரே வழி என்று இருக்க வேண்டிய பரிதாப நிலை!

* * *

''நெருப்பு! நெருப்பு காப்பாற்றுங்கள்'' ஐயோ எரிகிறது வாருங்கள்! ஓடி வாருங்கள்! அணையுங்கள்!'' பக்கீர் நானா தீயை அணைக்கத் தண்ணீர் தேடினார். குடிசையில் ஒரு சொட்டு தண்ணீர் தானும் இல்லை. இடதுபக்க முனையிலிருந்து எரிய ஆரம்பித்த குடிசை இப்போது குடிசை முழுவதும் பரவியிருந்தது. அவரது கூச்சல் கேட்டு ஓடிவந்தோர் தீயை அணைக்க எடுத்த முயற்சிகள் எதுவும் வெற்றியளிக்க வில்லை. அது வேகமாகப் பரவிவிட்டி ருந்தது. பக்கீர் நானாவை மட்டுமே அவர்களால் காப்பாற்ற முடிந்தது. அகதி வாழ்க்கையின் கஷ்டங்களுக்கு மத்தியிலும் அவர் பாடுபட்டுச் சேர்த்த பொருட்களையோ அவரது சிறிய கடையையோ அவரால் காப்பாற்ற முடியவில்லை.




----- தலைமன்னாரிலிருந்து தப்பி வந்த கடல்மார்க்கம்



அகதிமுகாம்களில் ஒன்று

பக்கீர் நானாவின் குடிசையுடன் தீ நிற்க வில்லை. அது இன்னும் பரவியது. பக் கத்து குடிசைக்கு தாவியது. அப்படியே அடுத்த குடிசைக்கும் தாவியது. ''நெ ருப்பு... நெருப்பு'' கத்திக் கொண்டு எல் லோரும் வெளியே ஓடிவந்தனர். தீ விடவில்லை. முற்றாக அம்முகாமி லுள்ள குடிசைகளை தரைமட்டமாக் கிய பின்னரே அது ஓய்வுக்கு வந்தது.

இது நடந்தது ஏப்பிரல் 28ம் திகதி. புத்த ளம் கல்பிட்டி பிரதேசத்தில் அமைந் துள்ள ஆனவாசல் அகதிமுகாமி லேயே இவ்வாறு குடிசைகள் தீக்கிரை யாகிப் போகின.

ஆனவாசல் முகாம் குடிசைகள் அனைத்தும் திடீரென்று தானாகவே எரிந்தன என்றும் அது ஒரு விபத்தே என்றும் செய்திகள் வந்து கொண்டி ருந்த போதும் இச்சம்பவத்தின் பின் னால் வேறு பின்னணிக் காரணங்கள் இருக்கக்கூடுமோ என்ற சந்தேகம் எழுந்தது.

உண்மைகளை அறிந்து கொள்ள விரும்பி சரிநிகரிலிருந்து ஆனவாசல் முகாமை நோக்கிப் புறப்பட்டோம்.

கொழும்பிலிருந்து 165 கிலோமீற்றர் தொலைவில் புத்தளத்திலிருந்து கட லுக்குள் நீளும் முழை போன்ற பகுதி யான மேற்படி கல்பிட்டி பிரதேசத்தில் மொத்தம் 73 அகதி முகாம்கள் உள் ளன. இவற்றில் மொத்தம் நாலாயிரத் துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். 95% க்கும் அதி கமானவர்களாக முஸ்லீம்கள் குடியி ருப்பதனால் முஸ்லீம் அகதிமுகாம் என்றே இவை அழைக்கப்படுகின்றன. இம் முஸ்லீம் அகதிகள் யாவரும் 1990ல் வடக்கிலிருந்து புலிகளால் பலாத்காரமாக விரட்டப்பட்டவர்கள்.

நாம் போய் இறங்கிய போதுதெரிந்தது ஆனவாசல் அகதி முகாம் அல்ல. எரிந்து போன சாம்பரும் கரித்துண்டுக ளும், செய்வதறியாது திகைத்து நிற்கும் அகதிகளும் தான். எங்களை அறிமுகப் படுத்தி விட்டு அவர்கள் சிலருடன் உரையாடினோம்.

''தம்பி! நாங்கள் பாடுபட்டுச் சேர்த்த பொருட்கள் எங்கள் கண்முன்னே அழி வதை பார்த்துக் கொண்டிருக்க மட் டுமே முடிந்தது. இன்று சமைக்க ஒரு சட்டி கூட இல்லை, உடுக்க துணியும் இல்லை, படுக்கப் பாயும் இல்லை, எனக்கு மட்டுமல்ல இவ்வளவும் தொண்ணூற்றைந்து குடும்பங்களைச் சேர்ந்த நூனூற்று ஐம்பது பேருக்கும் நடந்தது'' என கூறினார் ஒரு தாய். அவர் உடுத்தியிருந்த சேலை மட்டுமே அவருக்கு எஞ்சிப் போன ஒரே உடை.

இன்னொரு பெரியவர் கூறும் போது ''எங்கள் முகாமில் மொத்தம் 119 குடி சைகள் இருந்தன. ஒன்றைத்தவிர ஏனைய 118 குடிசைகளும் எரிந்து போய்விட்டன. நாங்கள் அன்றாடம் கூலித் தொழில் செய்து உழைத்துச் சேர்த்த பொருட்கள் ஒன்றும் இல்லை. அன்று மன்னாரில் பரம்பரையாக சேர்த்த சொத்துக்களை ஒரு கணத்தில் இழந்து விட்டு இங்கு வந்தோம். இங்கு மூன்றுவருடகாலமாக அகதிகளாக இருந்து கொண்டே வயிற்றைக்கட்டி வாயைக்கட்டி சேர்த்த பொருட்கள் அனைத்தையும் ஒரு சில மணி நேரங்க ளில் இழந்தோம். இந்த தீயினால் என் நண்பர்கள் அமனுல்லாஹ், ஹபீப் மொகம்மட் ஆகியவர்கள் படுகாயத் துக்குள்ளானார்கள். இப்போது நாங் கள் கல்பிட்டி அல் அக்சா மகா வித்தி யாலயத்தில் தங்கியிருக்கிறோம். இதில் நாங்கள் நெருக்கமாக அடைந்து கிடக்கிறோம், வசதிகள் எதுவுமே யில்லை. இச்சம்பவத்திற்குப் பிறகு இன்னமும் பிள்ளைகளைக்கூட பாட சாலைக்கு அனுப்ப முடியவில்லை. அவர்களுக்கு சரியான உடையில்லை. சரியான சாப்பாடு இல்லை. அவர்கள் மகிழ்ச்சியாகவே இல்லை'' எனக் கூறி னார். அவரது முகத்தின் சுருக்கங்களை யும் மீறி துயரம் வெளிப்படையாக தெரிந்தது; கண்கள் பனித்துப் போயி ருந்தன.

நாங்கள் எரிந்து கிடந்த இடத்தைப் பார்த்தோம். எரிந்த சாம்பல் குவியல்க ளாகக் கிடந்த அந்த மைதானத்தைப் பார்த்ததும் எமது கண்களில் முதலில் உறுத்தியது அங்கு எழுந்து நின்ற கரப் பந்தாட்ட மைதானக்கம்பங்களே. அக திமுகாம் குடிசைகள் எரிந்த இரண்டாம் நாளே அங்கு எரிந்து விழுந்திருந்த தென்னை மரங்களை நிறுத்தி இம்மை தானம் உருவாக்கப்பட்டு விட்டதாக கூறினார்கள் அங்கு நின்றவர்கள். ஏற்க னவே ஒரு விளையாட்டு மைதானமாக இருந்த அந்த் இடத்தில் தான் இக்குடி சைகள் அகதிகளுக்காகக் கட்டப்பட்டி ருந்தன. அப்பகுதி இளைஞர்களால் அவர்களது விளையாட்டுகளுக்குப் பயன்படுத்தி வந்த இந்த மைதானம் இவ்வகதிமுகாமின் வருகையுடன் அவர்களது பாவனைக்கில்லாது போய் விட்டது. இத்தீபரவலும் இவ்விளை ஞர்களுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ என்ற எமது இயல்பான சந்தேகத்தை மறுத்தனர் எங்களுடன் பேசிக் கொண்டிருந்த அகதிமுகாமைச் சேர்ந்த ஒருவர். ஆயினும் உடமைகள் அனைத்தையும் இழந்து இந்த மக்கள் நிர்க்கதியாக இருக்கும் போது, அவர் கள் குடிசைகள் இருந்த இடத்தில் மைதானத்தை உருவாக்கிய நிகழ்ச் சியை ஜீரணிப்பது கஷ்டமாகத்தான் இருந்தது.

குடிசைகள் தீக்கிரையானதற்கு கார ணம் என்ன என்பதை அறிவதற்காக எமது முயற்சிக்கு பொதுவாக தெரிவிக் கப்படும் காரணம் மின் ஒழுக்கு என் பதே. மின்சார ஒழுக்கின் (Leak) கார ணமாக குடிசைகள் தீப்பற்றியிருக்க லாம் என்ற கதை நம்பக்கூடிய ஒன்றாக இருந்த போதும் இதைத் தீவிரமாக மறுக்கிறார் ஒரு அகதிமுகாம் இளை ஞர். அவர் சொன்னார் அகதி முகாம் கள் அனைத்திற்கும் மாலை 6 மணியி லிருந்து காலை 6 மணிவரை மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அப்படியிருக்க குடிசைகள் எரிந்த நேரம் பின்னேரம் 3 மணியாகும். மின் சாரம் விநியோகிக்கப்படாத வேளை எவ்வாறு மின்சாரம் ஒழுகும்? அடுத் தது சம்பவம் நடந்த குறிப்பிட்ட 3 மணிக்கு சகல மின்சார விநியோகத்தை யும் தடை செய்து விட்டு மின்சார சபை ஊழியர்கள் அன்று மின்சார பழுதுக ளையும் சரிசெய்து கொண்டிருந்துள்ள னர்.''

''அது மட்டுமல்லாது முதன் முதலில் தீ ஆரம்பமான குடிசையில் மின்சார கம் பிகள் கிழக்கு பக்கத்திலிருந்து தொடங் குகின்றன. ஆனால் தீ ஆரம்பித்த இடமோ வயர் தொடுக்கப்பட்டிராத மேற்கு மூலை உச்சியில். எனவே தீ மின்சாரத்தினால் ஏற்பட்டதற்கான சந் தர்ப்பமே இல்லை'' என கூறினார்.

அகதி முகாம்கள் எரிந்தனவா, எரிக்கப் பட்டனவா என்பது சம்பந்தமாக உண் மைகளை அறிந்து கொள்ள வேண்டும்






பௌமி


கல்பிட்டியில் உள்ள அகதிகளில் பெரும்பான்மையானோர் மன்னார் மாவட்டத்திலிருந்து வந்தவர்கள். ஏனையோர் முல்லைத்தீவு, யாழ்ப்பாணத்தி லிருந்து அகதிகளாக குடியேறியவர்கள். அனேகமாக வடபகுதியில் கரையோ ரப் பிரதேசங்களில் வாழ்ந்தவர்களாதலால் மீன்பிடித் தொழில் அவர்களது பிரதானமான தொழில். இப்போது குடிபெயர்ந்துள்ள கல்பிட்டிப்பகுதியில் இவர்களில் பலர் மீன்பிடித் தொழிலையே செய்து வருகின்றனர். மீன்பிடித் தொழில் செய்துவரும் அகதி இளைஞர் 'பௌமி' என்பவர் இவ்வாறு கூறி னார்.

''நாங்கள் இங்கு தப்பி வந்த போது அரசாங்கம் எங்களை கருத்தில் கொள் ளவே இல்லை. எங்களுக்குத் தங்குவசதிகளைக் கூடச் செய்து தரவில்லை. இப்பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லீம்கள் தான் தங்களது நிலங்களில் குடியிருக்க அனுமதித்தார்கள். ஏனையோர் பொது இடங்களில் முகாம் அமைத்துக் கொண்டனர். கடந்த மூன்று வருடகாலமாக தீர்வு இன்று வரும் நாளைவரும்; எங்கள் இடங்களுக்குப் போய் வாழலாம் என தினந்தோறும் எதிர்பார்த்து வருகிறோம். ஆனால் எங்கள் நம்பிக்கை இழக்கப்பட்டு வருகிறது. அகதிக ளாக இருக்கும் நிலையில் தொழில் வசதிகள் ஏதாவது கூட அரசு செய்து தர முன்வரவில்லை. மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே கடற்தொழில் செய்து வருகிறோம். அகதிகள் தொழில் புரியக் கூடாது என்றும், அப்படி செய்தால் நிவாரணமும் நின்று விடும் எனவும் இங்கு சிலர் வதந்திகளை பரப்புகின்றனர். இதுவரை மாதாந்தம் கொடுக்கப்பட்டுவரும் உலர் உணவுப் பொருட்களைக் கூட உலக சுகாதார நிறுவனத்தின் மூலமே பெற்று வருகிறோம். அது ஒரு, குடும்பத்துக்கும் போதுமானதல்ல. செஞ்சிலுவைச்சங்கத்தினர் மருத்துவும் பார்ப்பதற்காக மாதத்திற்கொருமுறை வந்து போவார்கள். திடீரென்று ஏற்ப டும் நோய்களுக்கு அருகில் உள்ள பொது வைத்திய சாலைக்கு செல்கிறோம். அங்கு அகதிகள் என்றால் பாரபட்சம் காட்டுகின்றனர். மருந்து தருவதில்லை. மருந்துச்சீட்டு எழுதி மருந்துக்கடையில் வாங்கிக் கொள்ளுமாறு கூறுகின்ற னர். இங்குள்ள சில அகதிமுகாம்களுக்கு மின்சாரம் வழங்கினார்கள். ஆனால் அதைக் கூட 6 மாதத்திற்குள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி தடைசெய்து விட்டார்கள். அரசாங்கம் இன்றுவரை இப்படியொரு அகதிகள் கூட்டம் இருப் பதாக உணர்ந்ததாகத் தெரியவில்லை''



நன்றி - நூலகத்திட்டம்





# ...த்தி மர்மம் ?

# ...ன்னணி என்ன ?

.எஸ். குமரன்

என்பதற்கான எமது முயற்சிக்கு நேரடி யான பதிலைப் பெற்றுக் கொள்வது கடி னமாகவே இருந்தது. எரியூட்டப்பட்டி ருக்கலாம் என்பதையே பொதுவாக எல்லோரும் கூறினாலும் கூட எரியூட் டியவர் யாராக இருக்கலாம் என்பதை கூற முடியாதவர்களாகவே உள்ளனர்.

எரியூட்டப்பட்டிருக்கலாம் என்று கரு தும் வயோதிபர் ஒருவர் சொன்ன தக வல் இது. ''ஏப்பிரல் 28ம் திகதி இச்சம் பவம் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் இதே ஆனவாசல் முகாமி லுள்ள நான்கு குடிசைகளுக்கு தீ வைக் கப்பட்டுள்ளது. உடனேயே அவை அணைக்கப்பட்டன. ஆயினும் தொடர்ச்சியாக இம்மாதிரி சம்பவங் கள் நடக்காதிருப்பதற்காகவும் விஷமி கள் கண்டுபிடிப்பதற்காகவும் 10 பேரைக் கொண்ட கண்காணிப்பு குழு வொன்றை முகாமைச் சேர்ந்தவர்கள் நியமித்து கண்காணித்து வந்துள்ளனர்.

இக்குழுவினர் இரவு கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த வேளை குடி போதையில் தெருவில் வந்து கொண்டி ருந்த நால்வர் மீது சந்தேகப்பட்டு அவர்களைத் தாக்கியுள்ளனர். பின்னர் பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ள னர். இவர்கள் தான் பழிவாங்குவதற் காக இதனை செய்திருக்கக்கூடும் என சந்தேகிக்க இடமிருக்கிறது.'' இவரது இக்கருத்தை பலரும் ஆமோதிக்கின்ற னர். ஆயினும் இரவு குடிபோதையில் வந்த நால்வரும் அப்பகுதியில் அப்பா விகள் என பேசப்படுபவர்கள் என்றும் இவர்கள் குடிபோதையில் வந்ததைத் தவிர தீ வைப்பதற்கான அல்லது வேறு சந்தேகம் கொள்ளும் அளவிற்கு எவ் வித ஆதாரங்களும் இல்லை என பொலிஸாராலும் அம்மக்களாலும் விடுவிக்கப்பட்டவர்கள். அப்படியி ருக்க இவர்கள் அக்காரியத்தை செய்தி ருக்கமாட்டார்கள் என்று மறுக்கின்றார் கள் இன்னும் சிலர். அடுத்தது அங்கு ஏற்கனவே குடியிருக்கும் நிரந்தர குடி யிருப்பாளர்கள் சிலரினால் இச்சம்ப வம் நடந்திருக்கலாம் என கூறப்படுகி றது. அப்பிரதேசத்தில் உள்ள சிலரது நிலங்கள் மற்றும் பொது மைதானங்கள் என்பவையே இன்று அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசங்களா கும். ஆரம்பத்தில் இந்நிலங்களில் அக திகளை குடியிருத்த பிரதேச மக்கள் முன்வந்த போதும் இன்று அவர்களில் சிலர் தொடர்ச்சியாக அகதிகள் அங்கு இருந்து வருவதில் வெறுப்புற்றிருக்கி றார்கள் எனத் தெரியவருகிறது. சம்ப வம் நடந்த ஆனவாசல் அகதி முகாம் அமைந்துள்ள மைதானத்தில், எரிந்தது எரியமுதல் கரப்பந்தாட்ட மைதா னத்தை அங்குள்ள இளைஞர்கள் உரு வாக்கியிருப்பது, எவ்வளவு தூரம் இந்த அகதிகளை அவர்கள் வெறுக்கி றார்கள் என்பதற்கு நல்ல சான்று.

உண்மையில் யார் காரணம் என்பது அவர்களைப் பொறுத்தளவில் இன்ன மும் ஒரு கேள்வியாகவே உள்ளது.

இங்குள்ள முகாம்களுக்கு பொறுப்பாக (RRRA -Refugees Relief Rehabilitation Association) எனும் அரசு சார் பற்ற நிறுவனம் இயங்கி வருகிறது. (கல்பிட்டியில் இதுவொன்றே அகதிக ளுக்காக இயங்கிவரும் பெரிய நிறுவ னமாகும். அகதிகளது பிரச்சினைகள் எதுவென்றாலும் பொலிஸ் அகதிக ளில் தலையிடுவதற்கு முன்னர் இந்நிறு வத்தினூடாகவே அணுகுகிறது. அதே போல் அகதிகள் பொலிஸாரை அணு குவதற்கு முன்னர் இந்நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்கிற அளவிற்கு அகதிகளுக்கும் இந்நிறுவ னத்திற்கும் நெருங்கிய தொடர்புள் ளது.)

இந்நிறுவனத்துடன் இச்சம்பவம் பற்றி வினவிய போது எதுவும் கூற மறுத்து விட்டனர். ''யார் காரணம் என்பது தெரியாது என்றனர். ஆனால் பேசிக் கொண்டிருக்கும் போது ''உண்மை களை கூறினால் பின்விளைவுகள் ஏற்ப டலாம்'' என்றும் கூறினர். கதையோடு கலந்த ஒரு வார்த்தையாக இருந்தாலும் அதனை இலகுவாக புறக்கணித்து விட முடியாதிருந்தது. அகதிகளைப் பற்றிய சகல விபரங்களும் அவர்களின் அன் றாட பிரச்சினைகளோடும் நெருங்கிய தொடர்புடைய இவர்களுக்கு இச்சம்ப வம் பற்றிய பின்னணி புரியாமலிருக்க நியாயமில்லை. இறுதிவரை அவர்க ளும் காரணம் கூற மறுக்கின்றனர்.

RRRA நிறுவனம் கூட ''பின்விளைவு களை சந்திக்க வேண்டிவரும்'' எனக்கூ றியமை இந்நிகழ்ச்சிகளுக்கு பலரும் கூற அஞ்சும் பின்னணி இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறது. ஏன் இவர்கள் தயக்கம் காட்ட வேண்டும்? பயப்படுமளவிற்கு என்ன பின்னணி உள்ளது. பின்னணியில் அரசியல் கார ணிகள் உண்டா? இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யார்? அவர்க ளின் தேவைதான் என்ன? போன்ற கேள்விகள் மட்டுமே இன்று எஞ்சியுள் ளன.

ஆனால், அகதிகளுடன்- ஏதுமற்றவர் களாக வந்திருக்கும் இந்த அப்பாவிக ளுடன் -விளையாடுகின்ற,கற்பிட்டிப் பிரதேசத்தில் யாரும் எதுவும் சொல்ல முடியாது என்கின்ற அளவுக்கு அவர் களை மிரட்டி வைத்திருக்கின்ற அந்தச் சக்தியை வெளிப்படுத்தும் அவசி யத்தை இந்த அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமோ (RRRA) அவ்வூர்ப் பொலிசோ உணர்ந்துள்ளதாக தெரிய வில்லை. அகதிகள் தானே! கேட்க நாதி யில்லாத அவர்களுக்காக ஏன் நாங்கள் அலட்டிக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள் போலும்.

அகதிமுகாம்களிலேயே வருடக்கணக் காக வாழ்க்கை நடாத்துகின்ற இந்த மக் களுக்காக கண்ணீர் விடக்கூட யாரு மில்லை.

அதற்கும் அவர்களுக்கு அவர்கள் மட் டும்தான்

இது விபத்து அல்ல: திட்டமிட்ட தீ வைப்பு என்பதை மட்டும் இப்போ தைக்கு எம்மால் சொல்ல முடிகிறது.

வீடுகளுக்கு தீ வைத்து; குடியிருப்புக ளிலிருந்து விரட்டும் போது குடிமக்கள் அகதிகளாகின்றனர்.

அகதிகளின் குடிசைகளுக்கு தீவைத் தால்?

அவர்கள் என்ன ஆவார்கள்?

ஒரு வயோதிபர் இறுதியாக நாம் விடை பெறும் போது இப்படிக் கூறி னார்: ''நெருப்பு வைக்கிறவங்கள்.... யார் எதுக்காக வைக்கிறான் என்று தெரிஞ்சு கொண்டு என்ன பயன்? உயிர் போனாலும் பரவாயில்லை என்று ஊருக்கு திரும்பிவிடலாம் போலிருக்கிறது''

''ஊருக்கா?''

''ஆமா... நித்தம் பயந்து பயந்து ஒவ் வொரு நாளும் பறிகொடுக்கிறதை விட ஊருக்குப் போனால் ஒரு நாளை யிலேயே செத்துப் போயிடலாமே '' அவரது குரலில் தெரிந்த வேதனைக் குப் பதில் சொல்ல எமக்கு முடிய வில்லை.




கல்பிட்டி அகதிமுகாம்களின் விபரம்

| கிராம சேவையாளர் பிரிவு | முகாம்கள் | குடும்பங்கள் | உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| நுரைச்சோலை | 03 | 232 | 1010 |
| வன்னிமுதல் | 01 | 39 | 190 |
| டட்சுகுடா | 01 | 04 | 23 |
| முதலைப்பிழி | 07 | 357 | 1701 |
| குறிஞ்சிப்பிட்டி | 06 | 315 | 1402 |
| ஆந்தகன்னி | 01 | 31 | 145 |
| புதுக்குடியிருப்பு | 06 | 222 | 954 |
| திஹலிய | 07 | 276 | 1333 |
| எத்தலை | 08 | 168 | 791 |
| ஆனவாசல் | 01 | 110 | 461 |
| கந்தகுளி | 06 | 479 | 2148 |
| கரம்பே | 02 | 74 | 371 |
| பனையடி | 01 | 42 | 200 |
| ஆலங்குடா | 04 | 658 | 2976 |
| முகல்பிட்டிய | 06 | 119 | 501 |
| பள்ளிவாசல் துறை | 04 | 115 | 530 |
| மந்தலக்குடா | 06 | 279 | 1301 |
| தலவில தெற்கு | 02 | 129 | 585 |
| குறிஞ்சிபிட்டி யதற்கு | 04 | 245 | 1046 |
| பெரிய குடியிருப்பு | 01 | 47 | 220 |
| சின்னகுடியிருப்பு | 01 | 76 | 356 |
| மொத்தம் | 73 | 4001 | 18244 |

'1993 மத்தியில் குருநாகல், அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து அகதிகளாக வந்த முஸ்லீம்களின் தொகை உள்ளடக்கப்படவில்லை.



முற்றிலும் எரிந்துபோன அகதிமுகாம்



எரிந்த சாம்பலின் மீது இருநாட்களில் எடுக்கப்பட்ட கரப்பந்தாட்ட வலை




## ...சோர்ந்து போனோம்



அப்துல் காதர்

அப்துல் காதர் என்பவர் தாங்கள் தப்பி வந்த கதையைக் கூறினார். ''1990 ஒக்டோபரில் வடக்கிலிருந்து 24 மணி நேரத்தில் முஸ்லீம்கள் வெளி யேற வேண்டும்'' என புலிகள் ஆணையிட்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம்கள் உடனடியாக வெளியேறியபோதும் ஏனைய இடங்களிலிருந்து முஸ்லீம்கள் உடனேயே வெளியேறவில்லை. எங்கள் பிரதேசமான மன்னா ரில் இராணுவமும் புலிகளும் அடிக்கடி மோதிக் கொண்டிருந்தனர். இந்நிலை யில் இவ்விரு தரப்பினரில் எவராவது எங்களைத்தாக்கிவிட்டு மற்றவர் மேல் பழி போட நிறைய சந்தர்ப்பம் இருந்தது. புலிகளின் ஆணையும் அதற்கு சாதகமாகும் என்ற காரணத்தினால் நாங்கள் எல்லோரும் எங்கள் சொத்துக்கள் அனைத்தையும் போட்டுவிட்டு கிளம்பினோம். தரைமார்க்கமாக போனால் சண்டை நடக்கும் இடங்களை தாண்டி போக வேண்டிய நிலையேற்படும் என்பதால், மூட்டை முடிச்சுகளுடன் படகுகளில் ஏறி மன்னாரில் இருந்து புறப்பட்டோம். கரை தெரியாது, சரியான இடத்தை அறியாது பல இடங்களில் மோதி கடற்பயணத்தின் போது சின்ன பிள்ளைகளுடன் பல இன்னல்களின் பின்னர் இரண்டு நாட்களின் பின் -கல்பிட்டியை அடைந்தோம்.

கல்பிட்டியில் 1990 இலிருந்து இன்றுவரை அகதிகளாகச் சொத்துக்கள் எதுவு மற்ற அன்றாடங் காய்ச்சிகளாக வாழ்கிறோம் அன்று தொடக்கம் இன்றுவரை நிம்மதியான வாழ்க்கைக்காக ஏங்குகிறோம். எங்கள் ஒருவருக்கும் நிரந்தர மாக இங்குவாழும் எண்ணமே இல்லை. எங்கள் பிரதேசங்களுக்கு போகவே விரும்புகிறோம். இந்தப் பிரச்சினைக்கு ஏதாவது தீர்வு சுமூகமாக இருந்தால் மாத்திரமே நாங்கள் போவோம். அல்லது புலிகள் எங்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதமளித்தால் மட்டுமே போவோம். அரசுக்கும் புலிகளுக்கும் இடை யில் சுமூக உறவு ஏற்படும் தீர்வு வந்தவிடும்! என ஒவ்வொரு கணமும் எதிர்பார்க்கிறோம். ஓரளவு பிரச்சினை அடங்கும் போதெல்லாம் நாங்கள் இனி நல்ல காலம் பிறக்கிறது என மகிழ்வோம. ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரு போதும் நீடிப்பதில்லை. இது தொடர் கதையாகிப் போனது. இனி நாங்கள் சோர்ந்து போனோம் எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக்கையை இழந்து விட் டோம்'' என்றார்.



நன்றி - நூலகத்திட்டம்






*சினிமாவைப் பற்றிய விமர்சனம் என்பது எழுத்தில் க (ா)ட்டப்படும் சினிமா என்கிறார் கட்டுரையாளர். எனவே விமர்சனம் மட்டுமின்றி விமர்சனத்துக்கு விமர்சனமும் தேவையாகிவிடுகிறது.*

நன்றி : ஊடகம்

# விமர்சகன் க(ா)ட்டும் சினிமா

**- அழகரசன் -**

*ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தினரின் அதிகாரம் என்பது அவர்கள் வெகுமக்களிடம் இடைவிடாமல் பரப்பி வைத்துள்ள பொய்களில்தான் தங்கியுள்ளது. அதிகாரத்தைச் சரியானது என ஏற்றுக்கொள்ளச் சொல்லும் அந்தப் பொய்களை அனுமதித்தால் அதிகாரத்தை எதிர்த்துப் போராடமுடியாது. எந்தவிதமான அநீதியையும் ஒடுக்குமுறைகளையும் எதிர்ப்பதற்கு முன்பு எந்தப் பொய்களின் மீது அவை கட்டியெழுப்பப் பட்டிருக்கிறதோ அந்தப் பொய்களின் முகத்திரையைக் கிழித்துச் சரியானபடி அடையாளம் காண வேண்டும்.*

*டாக்டர் அம்பேத்கார்*

எந்தவொரு பிரதிபற்றிய எந்தவொரு வாசிப்பும் அந்தப்பிரதியை வாசிப்பவரின் நோக்கில் மறுநிர்மாணம் செய்யப்படுவதால் வாசிப்பை மறுவாசிப்பு செய்வதும் ஒரு அவசியமான அரசியல் வினையாக இருக்கிறது. தமிழகச் சூழலை கூர்மையாக அவதானிப்பதாக கருதப்படும் பி.பி.சி. தமிழோசை (1) மூன்று வாரங்களுக்குத் தொடர்ந்து வாஸந்தியின் பேட்டியை ஒலி பரப்பி தமிழ்ச் சூழல் குறித்து கட்டமைத்த வாசிப்பு-'அடுத்து இசை விழா மட்டும்தான் தமிழ்நாட்டில் நடக்கிறது. வேறு எதுவுமில்லை என்பது போன்று ஒலிபரப்பப்பட்ட பிரஸ்தாபங்களுக்கு முன் தயாரிப்பாக அமைந்து விட்டதை நினைவில் கொள்வோம். இதைப் போலவே தமிழக சினிமா நிலை பற்றிக் கட்டுரை எழுதுகிற விமர்சகர் அம்ஷன் குமார்(2) -ஆதிக்கவர்க்கத்தினரின் கைப்பந்தாக இருந்து, பிரதியில் கட்டப்படும் மையத்தை வலுப்படுத்தும் கருவியாக உருவெடுக்கிறார். இங்கு அந்தப் பிரதிகளின் (வானமே எல்லை, குணா) மையத்தை அடையாளப்படுத்துவதோடு, இந்த விமர்சகரின் வாசிப்பையும் அவரது பிரதியின் அடையாளத்தையும் காண வேண்டிய தேவை ஏற்படுகிறது.

'வானமே எல்லை' பிரதியின் கதையாடல் தளத்தில் நமக்குக் காட்டப்படுவதாவது: ஐந்து இளம் வயதினர் (3 வாலிபர்கள், 2 இளம் பெண்கள்) எவ்வாறு வெவ்வேறான துக்கங்கள், ஏமாற்றங்கள், இழப்புகள் மூலம் ஒன்று சேர்ந்து, ஒரு மனதாகத் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்து, பின் அம்முயற்சியைக் கைவிட்டு வாழத் திரும்புகிறார்கள் என்பதை விவரிக்கிறது. தற்கொலைக்கான காரணங்கள்:

1. ஆனந்தபாபு: அரசாங்க உத்தியோகத்தில் நல்ல பதவியில் இருக்கும் தனது அப்பா, தான் புகட்டும் ஒழுக்க நியதிகளுக்கு மாறாக லஞ்சம் வாங்கும் அயோக்கியன் என்று அறிந்த அதிர்ச்சி.

2. பப்லு: தான் காதலித்த பெண்ணின் விதவைத் தாயைத் தன் தந்தையே மணந்த உறவுமுறை மாற்றத்தின் அதிர்ச்சி.

3. மதுபாலா: பணப்பிரச்சினையால் ஓர் வயோதிபனுக்கு வாழ்க்கைப் பட வேண்டிய கதியும், அதன் அதிர்ச்சியும்

4. ரம்யா கிருஷ்ணன்: ரயிலில் அடையாளம் தெரியாத சிலரால் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டதனாலும் அதனைத் தொடர்ந்து பொலீஸாரின் கேவலமான அணுகல்களாலும் ஏற்பட்ட அதிர்ச்சி.

5. ராஜேஷின் மகன் :-(சுந்தர்?) 'முதலியார்' என்ற உயர்சாதிப் பையனாகப் பிறந்த காரணத்தால், இட ஒதுக்கீடு பிரச்சினையால் வேலை கிடைக்காமலும், தந்தையின் வசையைத் தாங்காமலும் ஏற்படும் அவலம்.

இவ்வாறு பல்வேறு சமுதாய நிலைகளில், பலவித காரணங்களினால் வாழ்வை வெறுத்து, சந்தர்ப்ப வசத்தால் ஒன்றிணைந்து இருப்பதையே விமர்சகர் சமதளப்பார்வையாகக் கருதி, பக்தின்(3)கூறுகின்ற பல்குரல் தன்மை (poly pony) 'வானமே எல்லை' பிரதியில் வெளிப்படுவதாக நிறுவுகிறார். இங்கு பக்தின் கூறுகின்ற பல்குரல் தன்மை பற்றி தெரிந்து கொள்வது, அந்த விமரிசகரின் எந்திர ரீதியிலான கோட்பாட்டுப் பிரயோகத்தையும், 'வானமே எல்லை' பிரதியின் பின்புறத்தில் இயங்கிக் கொண்டு இருக்கும் ஏகபோக 'ஒருமித்த குரலை'யும் அதன் ஆதிக்கத்தையும் அடையாளம் காண உதவும்.

பல்குரல் தன்மை என்ற சொல்லைப் பக்தின், பல்வேறு இசைகளை ஒருங்கிணைக்கும் 'சிம்பொனிக்கு' எதிரானதொரு சிதறடிக்கப்பட்ட குரல்களின் மொத்தக் கலவையாகவே கையாள்கிறார். இத்தகையதோர் முறையானது, ஓர் இலக்கிய வகைமையாக, ரூபமாக, தாஸ்தியோவ்ஸ்கியின் புதினங்களில், பல்வேறு குரல்களை அவற்றின் கருத்துருவாக்கங்களுடன் கூடிய சுதந்திர மோதலாக முடிவில்லா புரட்சியாக வடிவமைக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார். இத்தகையதோர் கதையாடலில், பங்கேற்போரின் அனைத்துக் குரல்களும், முழுமையான சுதந்திரத்துடன் தத்தமது சமூகவரலாற்று பின்னணிகளுடன் செயல்படுவதோடு, வாசகனின் பங்கேற்புக்கும் இடமளிப்பதாகவே இருக்குமென்றும் விளக்குகின்றார். இங்குதான், இக்கோட்பாடு எதிர்நோக்கும் 'பல்குரல் தன்மை' சொல்லாடல் தளத்தில், பேசுவோர் -கேட்போரின் கால -இட உந்துதல்களை சுட்டி, பிரதிகளின் அரசியல் நிலைப்பாட்டைக் குறிப்பதாகவும் உள்ளது. இதனடிப்படையில் 'வானமே எல்லை' பிரதியின், பின்புலத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஒருமித்த ஆதிக்கசக்தி (சாதி) யின் குரல், ஓர் சமதளப் பார்வையைப் புறக்கணித்துக் கொண்டிருப்பது தெளிவாகிறது. இக்குரலே கதாபாத்திரம் ஐந்தின் -முதலியார் பையன் -உடன் இணைந்து செயல்படுவதாகவும் அமைந்துள்ளது. அதாவது;

1. முதலியாராக மேல்சாதி வர்க்கத்தினரை பிரதிநிதித்துவம் பண்ணுவதாகவும்;

2. இடஒதுக்கீட்டில் பாதிக்கப்பட்டுப் பாரதி சிலைமுன் வந்து, மேல்சாதி அடையாளத்தை நிலைநாட்டுவதாகவும்;

3. மற்ற நால்வரைப் போல் உணர்ச்சி வசப்படாமல், தெளிவான மனதுடனும்;

4. மற்ற நால்வரை நல்வழிப்படுத்த முயல்வதில் அவனைத் தொடர்ந்து, அவனது தந்தையும் (ராஜேஷ்) சிருஷ்டிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இப்பாத்திரத்தின் தனித்தன்மை, மற்ற நால்வரைவிடவும் ஒரு மேல்மட்டத்தில் தன்னை நிறுத்துகின்ற முயற்சியாகவே கட்டப்பெற்றுள்ளது. ஒழுக்கம், பண்பாடு, அறிவு ஆகிய படிநிலைகளில் இதன் நீட்சி வாசகன் மேலும் கீழ்கண்ட காட்சிகளின் மூலஞ் கட்டப்படுகின்றது. (காட்சிப்பிரதி, எழுத்துப்பிரதி இரண்டையும் பற்றி ஒரே சமயத்தில் பேசுவதால் பொதுவாக வாசகன் என்ற சொல் உபயோகிக்கப்படுகிறது)

1) அவனது தற்கொலை முடிவுக்குக் காரணம் -அறிவுத்துறையில் வாய்ப்புக் கிடைக்காமை.

2) ஒரு மாத காலம் தற்கொலை முடிவை தனது புத்திக் கூர்மையால் ஒத்திப் போடச் செய்தல்.

3) வைரமுத்து கவிதைத் தொகுப்பை அனைவருக்கும் அனுப்பி, வாழ்வின் உன்னதத்தை உணர்த்துதல்,

4) தன் சாவின் மூலம், தனது மன்த்துணிவை நிறுவுதல்.

5) வீடியோ பதிவின் மூலம் அற(றி)வுரையும் வேண்டுதலும்.

6) முடிவில் அவனது தந்தை மூலம், அவனது அறிவுத்திறன் உணர்த்தப்படுதலும், மற்ற நால்வரின் உணர்ச்சி பூர்வ முடிவின் முட்டாள்தனத்தைச் சுட்டுவதும்;

7) இறுதியாக, உடல் ஊனத்தை மீறிய பொதுநலச் சேவையைச் சுட்டி, அவர்களுக்கு தன்வயப்பட்ட மனநிலையை உணர வைப்பதும் நடக்கிறது.

இவ்வாறு தொடர்ந்து, அறிவு பூர்வ, உணர்ச்சிபூர்வ உணர்வுகளுக்கான ஓர் எதிர்வை நிறுவி ஆதிக்கசக்தி (சாதியின் குரல் வலுப்பெற்று, ஏனைய பாத்திரங்களின் உணர்ச்சிபூர்வ செயல்களை,) அவர்களின் (மற்றும் வாசகனின்) குற்ற உணர்வாக மாற்றிக் கட்டமைக்கப்படுகிறது. இங்கு இப்பிரதியில் 'சமதளப் பார்வை' உள்ளதாகக் கருதுவதன் மூலம், அவர் எவ்வாறு ஆதிக்க கருத்தியலுடன் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டுள்ளார் என்று தெரிகிறது.

இதைப் போலவே, மனோதத்துவ ரீதியில் உருவாக்கப்பட்ட படைப்பாகக் 'குணா' பிரதியைக்கூறி, அப்பிரதி எதிர்நோக்கிய மனோதத்துவ வாசிப்பை வழங்கி விமர்சகரும் ஒரு ஆதிக்க மையத்தை நிறுவுகிறார். குணா பிரதியில் நாயகனின் ஏகபோகத் தன் தேடல், ஒரு வேத (புராண)த் தலைவனின் தன்தேடலாக உருப்பெற்று, பிரதியில் பங்கேற்கும் வாசகனின் மீது திணிக்கப்படுகிறது. அவன் பைத்தியம் அல்ல- நம்மில் ஒருவன்- நம்மைவிடவும் தூய்மையானவனும் கூட -என்று திரும்பத் திரும்ப நிறுவப்படுகின்றது. இந்த நாயகனுக்குத் தேவையானதெல்லாம் 'தூய்மையான அன்பு'. 'மாசுபடாத அன்பு'. அன்னையைப் போல் அரவணைக்கும் அன்பு. 'தன் அன்னை மீது படிந்துள்ள மாசு இல்லாத அன்பு' -இப்படித் தொடர்ந்து கட்டமைக்கப்பட்டு மதத்தில் நுழைந்து, ஓர் ஆன்மீக புணர்ச்சிக்கான தேடலாக - 'அபிராமி' என்ற அம்பாள் பெயருடனும் லிங்கத்தின் உருவகத்தின் மூலமும் கட்டமைக்கப்படுகிறது. இவையாவும் ஆதாரபூர்வமாக அவனது உட்கிடங்குகளை டாக்டரிடம் கூறுவது மூலமும், டாக்டர், சி.பி.ஐ. அதிகாரி இன்ஸ்பெக்டர் இவர்களிடம் 'குணா'வின் உண்மை நிலை தனக்கு மட்டுமே தெரியுமென்று கூறுவதன் மூலமும் நிறுவப்படுகிறது. இப்பிரதியைப்பற்றி, விமரிசகர் கூறும் போது நாயகன் (குணா)கோவிலில் பார்க்கின்ற ஒரு பெண்ணை தனது லட்சிய பிம்பமான (Ideal Image) அபிராமியாகக் கருதுவதால், அவளிடமிருந்து தானமாக லட்டுக்களைப் பெறும் தருணத்தில் (அவளது சேலை விலகியிருப்பதைச் சுட்டி) லட்டுக்கள் மூலம் அவன் அவளது முலைகளைப் பெற்ற திருப்தியை அடைந்ததாக விமர்சிக்கிறார். இங்கு பிரதியின் பின்னணியில் இயங்கும் ஏகபோகக்குரல் எதிர்நோக்கும் மனோதத்துவ ரீதியிலான வாசிப்பை செலுத்த முயல்கிறார். இதன் மூலம் பிரதியில் நாயகியின் (நாயகியாக/நடிகையாக) மீது செலுத்தப்படும் அதிகாரத்துக்குத் துணைபோகிறார் என்பது புலப்படுகிறது.

அதாவது 'அபிராமி' என்று நாயகனால் பெயர் சூட்டப்பட்டு அவளது 'ரோகினி' என்கிற அடையாளம் தெய்வமாக மாற்றப்படுகின்றது. அவனிடமிருந்து தப்பப் பலதடவை முயன்று, பின் நாயகன் வலியுறுத்தும் (ஆணாதிக்க) விதியை ஏற்றுக் கொண்டு, தன்னுடைய பல்வேறு சுய, சமுதாய அடையாளங்களை இழந்து, 'அவனுக்காகவே அவள்' என்கிற மில்டன் கால ஆதாம் -ஏவாள் சூத்திரத்திற்குள் கட்டுப்படுகிறாள்.(4) இதன் நீட்சியாக, அவன் குரலில் அவள் அவளுக்கே கடிதம் எழுதுமளவுக்கு 'தன்னை' இழந்து, எஞ்சியிருப்பது தனது உடல் ரீதியிலான பெண் அடையாளம் மட்டுமே என்ற நிலையில், தன்னுடைய உடலைத்தர முன் வருகிறாள். அப்போது குணா, 'அதெல்லாம் தப்பு' என்று கூறி தனது அறியாமையை நிலைநாட்டுவதோடு (அவளை முழு தெய்வமாக்கி) அவளது அடையாளத்தைச் சாதாரண இருப்பு நிலைக்குத் தள்ளுகிறான். பொலீஸ் குணாவைத் தேடும் தருணத்தில், தனது இருப்பே (existence) கேள்விக்குள்ளாகி (தனது இருப்பை மட்டுமாவது காக்க) குணாவிடம் சரணடைய யோசனை கூறி, வெளியில் உடைந்த காலுடன் வரும்போது உயிரைப் பறிகொடுத்துத் தன் இருப்பையும் இழக்க வேண்டியவளாகிறாள்.

இப்...யானதொரு நீண்ட ஆணாதிக்க, காவிய, வேதத்தலைவனின் பயணம் தேடல் -வாசகனின் தேடலாகவும், மதம் சார்ந்த ஆதிக்கத்தோடு அடையாளப் படுத்தப்படுகிறது. இந்தக் கட்டமைப்பின் உச்சமாகக் குணா நாயகியின் உடலை தூக்கிக் கொண்டு தனது தாயிடம். 'இதோ என் அபிராமி' என்றவுடன், அவனது தாய், 'நீ தாண்டா சொல்லிக்கிட்டே இருக்கே, எனக்கு ஒன்னுமே புரியலையடா' என்கிறாள். அதற்கு பதில் தமக்கு மட்டுமே தெரியும் என்று கூறி நாயகியின் உடலோடு பள்ளத்தாக்கில் விழுந்து, தன்னையும் மாய்த்துக் கொள்வதன் மூலம், யதார்த்த வாழ்வில் அடைய முடியாத தாயை (மூலத்தை) நாயகன் அடைவதாகக் காட்டப்படுகிறது.

அம்ஷன் குமார் விமர்சிக்கும் காட்சி நாயகனின் உள்ளார்ந்த காம வேட்கையை மட்டும் சுட்டாமல், சினிமாத்துறையில் மார்பகத்தை மையப்படுத்துகின்ற செயல்பாட்டின் வரலாற்றோடும்(5) தொடர்பு கொண்டதாக உள்ளது. இதனால் இக்காட்சியை அதன் நிகழ்வுத்தளத்திற்கு (6) நமது பார்வையை நகர்த்த வேண்டியது அவசியமாகிறது. இங்கு நமக்குக் காட்டப்படும் காட்சிக்குப் பின்னால், வேறு ஒரு அதிகாரத் (ஆதிக்கத்) தின் குரலைக் கேட்க முடிகிறது. அதாவது இக்காட்சிகளுக்குப் பின்னால் இயங்கும் இயக்குநர், காமிரா மேன், மற்றும் சினிமாத் தயாரிப்பு உலகத்தின் ஆண் அதிகார குரல் தான் இவ்வாறு ஒலிக்கிறது. உட்கார்! குனி!சிரி! விலக்கு -இன்னும் கொஞ்சம்! இன்னபிற உத்தரவுகள்'(8) இத்தகையகுரல் பார்வையாளனை (8) வாசகனைத் தன்னோடு அடையாளப்படுத்திக் கொள்ளவும் எதிர்பார்த்த வண்ணமே உள்ளது. இதனாலேயே விமரிசகர் இக்குரலுடன் இணைந்து, தனது மனோதத்துவ வாசிப்பைச் செலுத்தி, ஆதிக்கவர்க்கத்தினரோடு உடன்படுகிறார்- துணை போகிறார். இவ்வாறு ஆதிக்க வரலாற்றில் ஏற்படுத்தியிருக்கும் சமச்சீரற்ற நிலையை எதிர்க்க மாற்றுப் பிரதிகளை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இங்கு பெண்ணியப் பார்வை பொதுவாக நம்மில் காணக்கிடக்கும், ஆணாதிக்கத்தை அடையாளப் படுத்துவது

→ 15

நன்றி - நூலகத்திட்டம்



# குமாரபுரம் ஸ்டேஷன்

கு. அழகிரிசாமி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சிறிது நேரத்தில் சிறுவர்கள் தங்கள் கையிலிருந்த காகிதங்களை விரித்துப் படிக்கத் தொடங்கினார்கள்.

'என்னடா அது?' என்று கேட்டார் ஹோட்டல்காரர்.

'எங்கள் ஹெட்மாஸ்ரர் எழுதிப் போட்டது?'

'என்ன எழுதிப் போட்டிருக்கிறார்?'

ஒரு பையன் சொன்னான்: 'பசுவைப்பற்றி இங்கிலீஷில் ஒரு வியாசம். 'நரியும் திராஷையும்' கதை. 'ஓநாயும் ஆட்டுக்குட்டிகளும்' கதை. நண்பனுக்கு ஒரு கடிதம்.'

'எல்லாம் இங்கிலீஷ்தான். பெரிய வாத்தியார் ரொம்பட் படிச்சவரு. நல்ல மனுஷன். பெத்த தகப்பன் மாதிரி இவுகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்து எழுதிப் போட்டிருக்காரு' என்றார் பெரியவர்.

'நன்னாப் படிங்கடா. இப்படித்தான் ஏதாவது எழுதச் சொல்லிப் பரீட்சை வைப்பாங்க' என்றார் ஹோட்டல்காரர்.

புத்தகத்தை படிப்பதுபோல் பாவனை செய்துகொண்டு, பேச்சுக்களைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார் சுப்பராமையர்.

ஹோட்டல்காரர் காப்பியைச் சாப்பிட்டுவிட்டு, 'பையன்கள் நன்னாப் படிக்கக்கூடிய பையன்கள்'னு தோணுது' என்று பெரியவரிடம் சொன்னார்.

'பட்டிக்காட்டுப் புள்ளகளானாலும் படிப்பு நல்ல படிப்புத்தான். வாத்தியாரு அப்படி. அந்த மாதிரி ஒரு தகப்பன் கூடப் புள்ளைக மேலே பிரியமா இருக்கமாட்டான்னு சொல்றேனே! என்றார் பெரியவர்.

'அது சரிதான். வாத்தியாரும் ஒரு தகப்பன் தானே?' என்றார் ஹோட்டல்காரர்

இதைக் கேட்டதும் சுப்பராமையர் உடம்பு சிலிர்த்தது. பெரியவர், 'அதில் சந்தேகம் வேறயா? இந்தப் பையன்கள் படிப்பிலே மட்டுமில்லே, வேலையிலும் சூட்டிகைதான்' என்றார்.

'வேலையா?'

'ஆமாம்; வேலை செய்யாம எப்படி? பள்ளிக்கூடம் போக முன்னாலே, பத்திக்கிட்டுப் போய் மேய்ப்பாக. பருத்திக் கொட்டை ஆட்டுவாக. இப்படி வீட்டு வேலைகளைச் செஞ்சிட்டுத்தான் பள்ளிக்கூடம் போறது.

'பேஷ்! அப்படித்தான் இருக்கணும். பிழைக்கிறவனுக்கு அதுதான் லட்சணம்! அழுக்குப் படாத படிப்பு படிப்பிலே சேர்த்தியா? அவனாலே ஊருக்குப் பிரயோசனம் உண்டோ? அவனுக்குத்தான் என்ன பிரயோசனமிருக்கு? என்னை எடுத்துக்கோங்க....நான் இரண்டாம் கிளாஷுக்கு மேலே படிச்சதில்லே. பி.ஏ., எம்.ஏ., படிச்சிருந்தா உத்தியோகம் பார்த்திருப்பேன். பார்த்திருந்தா, இத்தனை வருஷமாப் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பண்ணிவந்த உபகாரத்தைப் பண்ணியிருக்க முடியமா? நாலு பேருக்கு உபகாரமா இருந்தாத்தான் படிப்பிலே சேர்த்தி. ஊர்க்காரனை மெரட்டுற படிப்பு வேண்டவே வேண்டாம். நான் சொல்றது எப்படி.

அதிலே சந்தேகம் வேறயா?' என்றார் பெரியவர்.

இப்படியே பேசிக்கொண்டிருந்தார்கள். வண்டி கோவில்பட்டிக்கு வந்துவிட்டது. வாசிப்பதுபோல் விரித்துவைத்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி பழைய படியும் கோட்டுப்பைக்குள் வைத்தார் சுப்பராமையர். எல்லோரும் இறங்குவதற்கு ஆயத்தமானார்கள்.

'தைரியமாய்ப் பரீஷை எழுதுங்கடா! நான் வயசானவன். ஆசீர்வாதம் பண்ணறேன்; எல்லோரும் பாஸ், போய்ட்டு வாங்க. திருநெல்வேலியிலே படிக்க வரப்போ! பங்கஜ விலாஸை மறந்திட வேண்டாம். தெரிஞ்சுதா?' என்று சொல்லி வழியனுப்பினார் ஹோட்டல் முதலாளி.

வண்டியை விட்டு சுப்பராமையரும், அந்தப் பையன்களும், பெரியவரும் இறங்கினார்கள். போகும்போது ஐயர், ஹோட்டல் முதலாளியைப் பார்த்து புன்னகை ததும்பும் முகத்தோடு வணங்கி விடைபெற்றுக் கொண்டார். அவரைப் பின்தொடர்ந்து நடந்தார்கள் பையன்கள். முன்னே நடக்க ஒருவிதத் தயக்கம். அவ்வளவு தூரத்திற்கு அவரிடம் மரியாதை பிறந்துவிட்டது.

ஸ்டேஷனைவிட்டு வெளியே வந்ததும், குதிரை வண்டியை எதிர்பார்த்துக்கொண்டு நின்றார் சுப்பராமையர். கோவில்பட்டி ஸ்டேஷனில் போர்ட்டர் வேலை செய்யும் ஒருவன், அன்று தனக்கு இரவு வேலையானதால், வெளியே ஓரிடத்தில் நின்றுகொண்டிருந்தான். பெரியவரையும், சிறுவர்களையும் பார்த்து, 'வாங்க வாங்க' என்று சொல்லிக் கொண்டே வந்தான். அவர்கள் வந்த காரியத்தையும் விசாரித்துத் தெரிந்துகொண்டான். அவனும் இடைசெவல் கிராமத்தைச் சேர்ந்தவன்தான் என்பதைப் பேச்சிலிருந்து சுப்பராமையர் ஊகித்து விட்டார்.

பையன்களையும், பெரியவரையும், தன் வீட்டுக்கு அந்தப் போர்ட்டர் பலகாரம் சாப்பிட அழைத்ததோடு, அன்றிரவு தங்கிவிட்டு மறுநாள் ஊருக்குப் போகலாம் என்றும் சொன்னான்.

சுப்பராமையருக்கு குதிரை வண்டி கிடைத்துவிட்டது. அதில் ஏறிக்கொண்டு, வண்டி மூலை திரும்பும் வரையில் சிறுவர்களையே பார்த்துக்கொண்டு சென்றார். குமாரபுரம் ஸ்டேஷன், ஸ்டேஷன் மாஸ்ரரின் தர்க்கங்கள், வேப்பம்பூ மணத்தோடு வீசிய காற்று, கரிசல் மண் மணமும் உயிரும் கொடுப்பது, ஹோட்டல்காரரின் தர்மகுணம், படிப்புக்கு அவரும் ஸ்டேஷன்மாஸ்ரரும் கொடுத்த விளக்கம், கிராமத்தலைமை ஆசிரியர் தந்தையைப் போல் சிறுவர்களை நடத்தியது, டால்ஸ்டாயை 'டோல்ஸ்டோய்' என்று வாசித்த 'அறிவு', ஏழைப் போர்ட்டரின் விருந்துபசார அழைப்பு - இப்படி, எல்லாமே அவருக்கு ஞாபகத்துக்கு வந்துகொண்டிருந்தன. இருபது நிமிஷ ரயில் பிரயாணத்தில், இருபது வருஷங்கள் படித்தாலும் தெரிந்துகொள்ள முடியாத எத்தனையோ அரிய விஷயங்களைத் தெரிந்துகொண்டது போன்ற ஆனந்தப் பரவசம்.... கிராமத்து ஹெட்மாஸ்டரையும், ஹோட்டல் முதலாளியையும், போர்டரையும் விடப் பெரிய வாத்தியார்கள் இந்த உலகத்தில் இருக்க முடியுமா என்றுகூட அவருக்கு ஒரு நிமிஷம் தோன்றியது. அவர்களிடம் படிக்காத படிப்பையா இந்தச் சிறுவர்கள் இனிமேல் படிக்கப் போகிறார்கள் என்று தமக்குள் சொல்லிக்கொண்டார். குமாரபுரம் ஸ்டேஷனுக்குப் பிரயாணிகள் வராததை விடப் பெரிய கேலிக்கூத்து, மேல்படிப்புக்காக இவர்கள் இந்தப் பள்ளிக்கூடத்துக்கு வருவது! அந்த ஸ்டேஷனுக்காவது தண்ணீர்ப் பந்தல் என்ற மதிப்பு உண்டு ஆனால்...'

சுப்பராமையர் குதிரை வண்டியில் வீடுபோய்ச் சேர்ந்தார்.

பெரியவரையும், பையன்களையும் அந்தப் போர்ட்டர் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். ஊரிலேயே காலை ஆகாரம் பண்ணிக்கொண்டு வந்தவர்களானதால் அங்கே அவர்கள் ஒன்றும் சாப்பிடவில்லை. போர்ட்டருடைய கட்டாயத்துக்காக காபியை மட்டும் வாங்கிக் குடித்தார்கள்; மத்தியானம் சாப்பிட வருவதற்கும் சம்மதித்தார்கள். அப்புறம் எல்லோருமாக போர்ட்டர் உட்பட பள்ளிக்கூடத்திற்கு போனார்கள். பள்ளிக்கூட வராண்டாவில் மற்றவர்களை நிறுத்திவிட்டுப் போர்ட்டர் மட்டும் நேரே தலைமையாசிரியனின் அறையை விசாரித்துத் தெரிந்து கொண்டு அங்கே போனான். இடைசெவல் கிராமத்திலிருந்து ஆறாவது வகுப்புத் தேறிய நான்கு பையன்கள் ஏழாம் வகுப்பில் சேர வந்திருக்கும் செய்தியை அவரிடம் தெரிவித்தான். அவர் உடனே ஓர் ஆசிரியரை வரவழைத்து, அவரிடம் இரண்டு மூன்று கேள்வித்தாள்களை எடுத்துக் கொடுத்து அந்தக் கிராமத்துப் பையன்கள் ஏழாம் வகுப்புக்குத் தகுதி உடையவர்கள்தானா என்பதைச் சோதித்துப் பார்க்கும்படி சொல்லி அனுப்பினார்.

ஓர் அறையில் நான்கு சிறுவர்களும் தனித்தனியே உட்கார வைக்கப்பட்டார்கள். கேள்வித்தாளில் உள்ள கேள்விகளை எழுதிக் கொள்ளும்படி சொல்லி உதவி ஆசிரியர் வாசித்தார். எல்லாம் ஆங்கிலக் கேள்விகள். பையன்கள் எழுதிக் கொண்டார்கள். ஒரு மணி நேரத்துள் பதில்களை எழுதிவிட வேண்டுமென்றும் சொன்னார் ஆசிரியர். பையன்களும் எழுதத் தொடங்கினார்கள்.

போர்ட்டரும் பெரியவரும் பள்ளியை விட்டு வெளியே வந்து, ஒரு புளியமரத்து நிழலில் உட்கார்ந்து ஊர்ச்சமாச்சாரங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பத்தரை மணிக்கெல்லாம் ஆங்கிலப் பரிக்ஷை முடிந்தது. அப்புறம் கணக்கு, தமிழ், பொதுஅறிவு ஆகியவை சம்பந்தப்பட்ட பரீஷைகள். எல்லாமே பன்னிரண்டு மணிக்குள் முடிந்துவிட்டன. பள்ளிக்கூடம் விட்டு எல்லாப் பையன்களும் மத்தியானச் சாப்பாட்டுக்காக வீடுகளுக்குப் போனார்கள். அவர்களை நான்கு சிறுவர்களும் மிரள மிரள விழித்துக் கொண்டு பார்த்தார்கள். உதவி ஆசிரியர் அவர்களை அந்த அறையிலேயே உட்கார வைத்துக் கொண்டு விடைத்தாள்களை வேகமாகத் திருத்தி மார்க்குப் போட்டார். பிறகு எழுந்து தலைமை ஆசிரியரின் அறைக்குப் போனார். அப்போது பெரியவரும் போர்ட்டரும் அங்கே வந்து சேர்ந்தார்கள்.

'பரீக்ஷை நல்லா எழுதியிருக்கீங்களா?' என்று கேட்டான் போர்ட்டர்.

கணக்குத்தான் கஷ்டமாக இருந்தது.'

'இங்கிலீஷ்?'

'ரொம்ப லேசு'

'ஊரிலே ஹெட் மாஸ்டர் எழுதிப் போட்ட கேள்விகள்தான். ஒரு நொடியில் பதில் எழுதி விட்டேன்' என்றான் ஒருவன். மற்றவர்களும் அப்படியே சொன்னார்கள்.

'இங்கிலீஷ் நல்லா எழுதினால் பாஸ்தான்' என்று போர்ட்டர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே பெரியவர், 'ஊர் வாத்தியார் வாத்தியார்தான்! எப்பேர்ப்பட்ட மனுசன்! இங்கே என்ன கேப்பாங்கன்னு அங்கேயே தெரிஞ்சி சொல்லிக் கொடுத்திருக்கிறாரே, அதில்லே மூளை!' என்று இடைசெவல் கிராமத்துத் தலைவை ஆசிரியரை வானளாவப் புகழத் தொடங்கினார.

'கெட்டிக்கார வாத்தியார் போலிருக்கு!'

'கெட்டிக்காரருன்னா அப்படி இப்படியா! அதுக்கு ஏத்தாப்பலே கொணமும் அமைஞ்சுதே தம்பி. அதைச் சொல்லு. இப்படி ஒரு வாத்தியார் நம்ம ஊருக்கு வந்ததே இல்லை. பிள்ளைகள்கிட்ட பெத்த தகப்பன்கூட அவ்வளவு பிரியமா இருக்கமாட்டான்னா, அப்புறம் பாத்துக்கோயேன்' என்றார் பெரியவர் பூரிப்புடன்.

எல்லோரும் வெற்றியை எதிர்நோக்கிக் கொண்டு கோலாகலமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்துக்குள்ளேயே, பரீக்ஷை வைத்த உதவி ஆசிரியர் வந்து, சிறுவர்களையும், பெரியவரையும் போர்ட்டரையும் தலைமை ஆசிரியரிடம் அழைத்துக் கொண்டு போனார். அப்போதுதான் அவர்களுடைய மனம் கோலாகலத்தை இழந்து, 'திக்திக்' என்று அடித்துக் கொள்ளத் தொடங்கியது.

'இப்படி வாருங்கள்' என்று அவர்களை ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றார் உதவி ஆசிரியர்.

எல்லோரும் உள்ளே போனார்கள். தலைமை ஆசிரியரைப் பார்த்ததும், போர்ட்டர் கும்பிட்டான். பெரியவருக்கோ கும்பிடப் போன கைகள் குவியாமல் நடுங்கின. பையன்கள் எதுவும் செய்யாமல், அப்படியே நின்று விட்டார்கள். ஆச்சரியத்தினால் அவர்களுடைய கண்கள் அகல விரிந்து விட்டன. மூடியிருந்த வாய்கள் தாமாகத் திறந்து கொண்டன. ஒவ்வொரு கையிலும் விரல்களை விரல்கள் பிசைந்து கொண்டிருந்தன.

குமாரபுரம் ஸ்டேஷனிலிருந்து டால்ஸ்டாய் புத்தகமும் கையுமாக அவர்களோடு பிரயாணம் செய்த அதே பிரமுகர்தான் இங்கே தலைமை ஆசிரியராக உட்கார்ந்து கொண்டிருந்தார்! இதைப் பையன்கள் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்?

'வாருங்கோ' என்று சிரித்துக்கொண்டே அவர் வரவேற்றார்.

'பெரிய வாத்தியாரைக் கும்பிடுங்க' என்று போர்ட்டர் சொன்ன பிறகுதான், பையன்களும் பெரியவரும் வணக்கம் செய்தார்கள்.

'கேள்விகளெல்லாம் கஷ்டமாக இருந்ததா?' என்று கேட்டுவிட்டு மறுமுறையும் சிரித்தார் சுப்பராமையர். அந்தச் சிரிப்பில் இருந்த அழகும், கவர்ச்சியும், அன்புப் பெருக்கும் ஒரு பையனுடைய கண்களில் கணணீரையே வரவழைத்து விட்டன.

அவருடைய கேள்விக்குப் பதில் சொல்லாமல் எல்லோரும் வாயடைத்துப் போய்த் திகைத்து நின்றார்கள்.

அடுத்தாற்போல், உங்கள் பெயர்களைச் சொல்லுங்கள்' என்றார்.

'நாராயணசாமி. 'ஸ்ரீனிவாசன்', 'சுப்பையா', 'திருப்பதி',

'எல்லோரும் பாஸ்!' என்றார் சுப்பராமையர். பையன்கள் நால்வருக்கும் ஆனந்தக் கண்ணீர் பொங்கிவிட்டது.

'எல்லோரும் ஏழாம் வகுப்பில் சேர்ந்து கொள்ளுங்கள். நன்றாகப் படியுங்கள். ஒவ்வொரு பரீஷையிலும் நல்ல மார்க் வாங்க வேண்டும்' என்று கூறிவிட்டு, 'உங்கள் ஊர்வாத்தியார் மட்டுமல்ல இந்த ஊர் வாத்தியாருமே தகப்பனாரைப் போன்றவர்தான். பெரியவரே! நான் சொல்லுவது சரிதானே?' என்று சிரிப்பும் பரவசமுமாகக் கேட்டார் தலைமை ஆசிரியர்.

'அதிலே சந்தேகம் வேறயா?' என்று கிராமியப் பாணியில் சத்தம் போட்டுச் சொல்லிவிட்டு ஒரு முறை கும்பிட்டார் பெரியவர்.

சுப்பராமையர் மூன்றாவது தடவையும் அழகாகச் சிரித்தார்.

'போய் வாருங்கள்' என்று விடை அளித்து அவர்களை அனுப்பியபின், குமாரபுரம் ஸ்டேஷன் தான் அவர் மனக்கண்ணில் காட்சியளித்தது.


வாய்க்குள்ளேயே, 'அது பெரிய பள்ளிக்கூடம்!' என்று ஒருமுறை சொல்லிக் கொண்டார் சுப்பராமையர்.

(முற்றும்)



நன்றி - நூலகத்திட்டம்






# பிரிவினையா? புரட்சிகர ஆட்சியா?

## இஸ்லாமியவாதம் சூடானில் எழுப்பியுள்ள வினா

பஞ்சம், பிணி, இறப்பு என்ற வரிசையான பட்டியலால் பெயர் பெற்ற ஆபிரிக்க நாடுகளில் எதியோப்பியாவுக்கு எவ்விதத்திலும் சளைக்காதது சூடான். சூடானில் இன்று நடைபெறும் போராட்டத்தின் தன்மை, காரணம் என்பன குறித்து அரசியல் ஆய்வாளர்களிடையே ஒருமித்த கருத்தில்லை. பிரித்தானியரின் வழக்கமான பிரித்தாளும் சூழ்ச்சியினால் ஒன்று வாழ, மற்றது தேய -அதிலிருந்து பிறந்த வாரிசுதான் இன்றைய போராட்டத்துக்கு அடிப்படைக்காரணம் என்பதை மறுக்க முடியாது. ஆனால் இன்றும் அதே காரணத்தைக் கூறிக்கொண்டிருத்தல் யதார்த்தத்தைச் சரியாக எடைபோட்டதாகாது என்ற முடிவுக்கே எம்மை வரச்செய்யும். சூடான் வடக்கு, தெற்கு என இரண்டாகப் பிரிந்து மோதிக் கொள்ள ஆரம்பித்த போது மோதலுக்குக் காரணம் . சுயநிர்ணய உரிமை மறுக்கப்படுதலே என்று சரியாக அடையாளங் காணப்பட்டது. ஆனால் நாளடைவில் போராட்டத்தின் பரிமாணங்கள் பலதிசைகளிலுமாகப் புதிய வடிவங்களைப் பெற வேண்டி ஏற்பட்டுவிட்டது.

ஆக, சுயாட்சிக்கும் அபிவிருத்திக்கும் என ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் பின்னர் தனிநாட்டுப் போராட்டமாக மாறி நாளடைவில் புதிய திசையில் செல்லத் தொடங்கி இன்று ஜனநாயகம், மதச்சார்பற்ற, சோசலிஸக் குடியரசை நாட்டல் என்ற பொதுவான இலக்குகளை நோக்கி மிகுந்த முதிர்ச்சியுடன் நடைபோட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாக கூடுதல் அதிகாரங் கேட்டுப் போராடப் புறப்பட்டு இன்று இஸ்லாமியப்படுத்தலை எதிர்த்து முறியடித்தல் என்பதில் சூடானின் போராட்டக் குழுக்கள் தமது முழுச்சக்தியையுச் செலுத்த வேண்டியுள்ளது. வடக்கிலும் பக்கத்து நாடுகளிலும் இருந்துவரும் நியாயமான அச்சுறுத்தல்களை விட 'அராபியப்படுத்தல்' என்பதன் மூலம் கொண்டு வரப்படும் ஒழுக்கநெறிகளே சூடானைப் பாடாய்ப்படுத்திவிட்டன. சூடான் இயன்றளவு ஒருமைப்பாட்டுடன் சோசலிஸக் கொள்கைகளுடனும் முன்னேற முயற்சித்த காலமொன்றிருக்கவே செய்தது. ஆனால் அம்முயற்சி அன்றும் இன்றும் பயனளித்ததாகத் தெரியவில்லை. சூடானில் வடக்கே வாழ்பவர்கள் பெருமளவில் இஸ்லாமியர்கள். தெற்கே வாழ்பவர்கள் கிறிஸ்தவத்தையும் ஏனைய புராதனக் கிளை மதப்பிரிவுகளையும் பின்பற்றுபவர்கள். இந்த அடிப்படையில் பிரிவினைவாதம் வளர்ந்ததாகக் கருதுதல் தவறு. 19ம் நூற்றாண்டு வரைக்கும் அப்படியொரு பிரிவு இருந்ததற்குச் சான்றேதும் கிடையாது. 1821-23 இல் துருக்கி, எகிப்தியப் படைகள் சூடானுக்குள் பிரவேசித்து தெற்கு நோக்கி நடைபோட்டதன் விளைவாக அந்நியக் கலாசாரம் உட்புகுந்து வடக்கு தெற்குப் பிரிவுக்கு முளையூன்றின. குறிப்பாக, அடிமை வியாபாரத்துக்குப் பொருத்தமான சந்தைக் காடாக அரபுலகும் பின்னர் பிரித்தானியாவும் தெற்குப் பிரதேசச் சூடானைப் பயன்படுத்தியிருந்தன.

தெற்கத்தியச் சூடானியரை ஈகுவற்றோரியன் என்றும் கதைப்பர். இதில் பல்வேறு இனக்குழுக்கள் உள்ளடக்கம். இந்த இனத்தவர்களுக்கான முகாம்கள் மத்திய, வட பிரதேச சூடானிலும் இருக்கவே செய்கின்றன. தெற்குச் சூடான் மக்களது தொகை ஏறக்குறைய ஆறு மில்லியன். நாட்டின் மொத்தச் சனத்தொகையில் இவர்கள் 28% மட்டுமே. சுதேச மொழிகளுடன் ஆங்கிலமும் இங்கு நீண்டகாலமாகப் பாவனையிலிருந்து வருகிறது. தெற்கத்தியர் என்று பொதுவர்கக் கூறுதல் ,இந்த இனக்குழுக்கள் யாவற்றையுச் சேர்த்தேதான். ஆபிரிக்கக் கண்டத்தின் மிகப்பெரிய நாடும் அதேவேளை இன்று மிக வறிய நாடாக விளங்குவதுஞ் சூடானேதான். அரசியல் வாழ்வில் தாக்கம் ஏற்படுத்திய நான்கு இனக்குழுக்களைத் தெற்குச் சூடானில் அதாவது நாட்டின் மிக வறிய பிரதேசத்திலேயே காணமுடிகின்றது.

வடக்கே அந்நிய ஆட்சியாளர் இஸ்லாத்தையும் அராபிய அடையாளத்தையும் தழுவிப் பெருமை பெற்றுக் கொண்டிருக்கத் தெற்கேயுள்ளவர்கள் கல்வி, பொதுவசதிகள் எதுவுமேயின்றி பழங்குடிகளின் தலைமைகளுக்கு விசுவாசங் காட்டுபவர்களாகக் கட்டுண்டு வாழ்ந்து வந்தனர். கடந்த இரு நூற்றாண்டு கால தெற்குச் சூடானின் வரலாற்றைப் பார்த்தால் அதற்கும் எமது நாட்டிற்கும் இடையில் நிறைந்த ஒற்றுமை காணப்படுவதாகக் கூறலாம். ஒரு காலத்தில் யாழ்ப்பாணக் குடிமகன் தானுண்டு, தனது வேலையுண்டு அல்லது படிப்புண்டு என் அடைபட்ட வாழ்க்கை வாழ்ந்தவனே தான். இன்று உலகளவில் பேசப்படும் போராட்டத்தின் விளைநிலமாக மாறி விட்டிருக்கின்றான். தெற்குச் சூடானும் இப்படித்தான் பழமை வாழ்வில் பழகிப் போனவர்கள்.

1960களின் பிற்பகுதியிலும் 1970களிலும் தெற்கத்திய சூடானியர் இராணுவ அமைப்புப்பற்றிக் கூடுதல் விருப்புக் காட்டியமைக்கான பொறுப்பையும் பிரித்தானியரே ஏற்க வேண்டும். முஸ்லீம் தலைவர்கள் தமது அதிகாரத்தைத் தெற்கு நோக்கி விஸ்தரிக்க முயல அதைத்தடுத்து நிறுத்தும் வல்லமை கொண்ட சங்கம் ஏதேனும் (Association) இருந்திருக்கவில்லை. வடக்கு சூடானிலுள்ள பலரும் தம்மை முஸ்லீமாகவே காட்டிக் கொள்வதிலும் அராபிய அடையாளத்தைப் பெறுவதை விரைவுப்படுத்தலிலும் அக்கறை காட்டி வந்தனர். ஆக, இந்த நூற்றாண்டில் சூடானின் வெடிப்பு அகலமானதற்கு உள்ளூர்ப் புகைச்சல், வெளிநாட்டுச் செல்வாக்குகள் என்பவற்றின் பங்களிப்புகளை விட சூடானிய அரசு கையாண்ட பாரபட்சமான அபிவிருத்திக் கொள்கையே (பிரித்தானிய குடியேற்றவாத கொள்கைப்படியான) மூல காரணம் என்பதை ஞாபகத்தில் வைத்தல் வேண்டும்.

1898 லிருந்து அறிமுகமான அதிகாரப் பரவலாக்கல் கொள்கையின் 'வெற்றியே' இன்று சூடானில் பிரிவினைக் கோஷம் மும்முரமடையக் காரணம். வடக்குச் சூடானில் 'சாரிய' முஸ்லீம் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட அதே வேளையில் தெற்கில் பழங்குடிகளது பாரம்பரிய விதிகள் பின்பற்றப்பட்டன. தெற்கிலே கல்வி வசதி இல்லை, வேலை வாய்ப்பு அரிது, வர்த்தக ஸ்தாபனங்கள் உருவாக முடியவில்லை. இத்தனைக்கும் வளமிக்க எண்ணெய்க் கிணறுகள் சில தெற்கிலேதான் இருந்தன. இருந்தும் வடக்கு வாழ்ந்திடத் தெற்குத் தேய்ந்தது. 1956 இல் சூடான் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற போது தெற்குத் சூடானியரின் உயர்கல்வி என்பது எழுதுவினைஞர் தரத்துக்கு மேல் செல்ல முடியாததாக இருந்தது. இந்த ஊழியர்கள் அரசியல் கட்சிகளை அமைத்து சுதந்திரத்தைப் பிற்போடுமாறு வாதிட்டு வந்தனர். இருந்தும் அக்கோரிக்கை பயனளிக்கவில்லை. சுதந்திரம் கிடைத்த இரு ஆண்டுக்களுக்குள்ளேயே இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி விட்டது. இதைத் தொடர்ந்தே தெற்கத்தியரின் கெரில்லாப் போராட்டமும் கால்கோளிடப்பட்டது.

1972இல் இலங்கை குடியரசாக முற்பட்டபோது தமிழ்க் கட்சிகள் சமர்ப்பித்த கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. 1947ஆம் ஆண்டு யாப்பின் கீழான பாதுகாப்பைத் தாம் இழப்பதாகத் தமிழ் மக்கள் நியாயமாகவே நம்பினர். ஆக, முதல் குடியரசின் இந்த உதாசீனம் தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்டம் பற்றிச் சிந்திக்க வைத்தது. இதே விடயம் சூடானில் 1960களில் நடைபெற்றது. இராணுவ ஆட்சி மக்களைத் திருப்திப்படுத்தும் நோக்குடன் வடக்குக்கு மேலுஞ் சலுகைகளை அளித்தது. குறிப்பாக வெளிச் செல்வாக்கைக் குறைத்தல் (1970-77 இல் இலங்கையிலும் இதேகோஷம்) தேசிய மொழிக்குக் கூடுதல் அந்தஸ்து என்பவற்றை சூடான் வலியுறுத்தியது. விளைவாக அரபி மொழி பாடசாலைகளிலும் அலுவலகங்களிலும் கட்டாயமாயிற்று. ஞாயிற்றுக் கிழமைக்குப் பதிலாக வெள்ளிக்கிழமை ஓய்வு நாளாயிற்று. இலங்கையில் 'போயா நாள்' வந்த விதத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

1964 இல் சூடானில் இராணுவ ஆட்சி முடிந்து பாராளுமன்றம் செயற்படத் தொடங்கியது. ஆனால் தெற்குப் பிரச்சினைக்கு தீர்வுகாணக் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு தோல்வியடைந்ததன் பின் வடக்கில் தீவிரவாதக் கட்சிகள் உருவாகின. இவை சூடானை இஸ்லாமிய அரசாகப்பிரகடனப்படுத்தும்படி கோரிக்கை விடுத்தன. 1968 இல் வந்த புதிய யாப்பு தீர்வுகளைத் தராததால் முழு அளவிலான உள்நாட்டு யுத்தம் வெடித்து. இதைப் பயன்படுத்து 1969 மே மாதத்தில் இராணுவச் சதிப்புரட்சி மூலம் கேணல் நிமெய்ரி ஆட்சியைக் கைப்பற்றி விட்டார். கட்சிகள் கலைக்கப்பட்டன. மதம் சார்பற்ற சோசலிஸ அரசாக சூடான் பிரகடனப்படுத்தப்பட்டது. தெற்குக்குப் பிரதேச சுயாட்சி வழங்குவதாக நிமெய்ரி கூறினார். தென் சூடான் விடுதலை இயக்கம் (SSLM) அரசாங்கத்துடன் 1971 இல் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தது.

### பாடங்கள் பல தரும் அடிஸ் அபாபா உடன்படிக்கை

எதியோப்பியத் தலைவரின் சமரச முயற்சியினால் அந்நாட்டுத் தலைநகரில் கையெழுத்தானது என்பதால் இது அடிஸ் அபாபா உடன்படிக்கை என்ற பெயரைப் பெற்றது. சிறபான்மையினரும் விடுதலை இயக்கங்களும் கவனத்தில் கொள்ள வேண்டியதான பல பாடங்கள் இந்த உடன்படிக்கையில் காணப்படுகின்றன. அத்துடன், இதற்கும் 1987யூலையில் கைச்சாத்தாகிய இலங்கை-இந்திய 'சமாதான' ஒப்பந்தத்துக்கும் இடையில் அதிசயிக்கத்தக்க ஒற்றுமை இருப்பதையும் கவனிக்கத் தவறக்கூடாது.

அடிஸ் அபாபா உடன்படிக்கையின் படி போராட்டம் 1972இல் முடிவடைந்தது. பிராந்திய அரசாங்கம் தெற்கே உருவாகியது. சட்டவாக்க நிதித்துறை அதிகாரங் கொண்ட பிரதேச ஆட்சிச் சபை உருவானது. இது தலைவரைத் தெரிவு செய்யும் High Executive Council என்பதே அமைச்சரவை. உள்ளூர் நிர்வாகம், பாதுகாப்பு என்பவற்றுக்கு இது பொறுப்பு. கெரில்லாப் போராளிகளை தேசிய பொலிஸ் படையில் சேர்த்துக் கொள்ளவும் உடன்படிக்கை வழிசெய்தது. இராணுவம், சிறைச்சாலை ஊழியர் எனவும் இவர்கள் உள்ளிழுக்கப்பட்டனர். ஆனாலும் இந்த உடன்படிக்கை தோல்வியடைந்தது. காரணம் என்ன?

இலங்கை- இந்திய ஒப்பந்தம் அரசியலமைப்புக்கான 13வது திருத்தம், மாகாண சபைகள் அமைப்பு எல்லாம் இருந்தும் இங்கே நடந்தது என்ன? சூடானில் 16 ஆண்டுகளுக்கு முன் நடந்த அதே விடயங்கள்தான் இலங்கையில் பின்னாளில் ஒன்றுபட்ட சம்பவங்களாகத் தெரிகின்றன. பேச்சுவார்த்தையில் ஈடுபடச் சென்ற நிமெய்ரி பொதுமக்களின் கருத்தை அறிந்திருக்கவில்லை. (ஜே.ஆர் மீதும் இதே குற்றச்சாட்டு) மறுபுறத்தில் SSLM இன் இராணுவ அமைப்பான SPLA யுடன் கலந்து பேசாமல் தெற்குப் பிரதிநிதிகள் அடிஸ் அபாபா சென்று விட்டனர்.

உடன்படிக்கை நடைமுறைக்கு விட

**சிசைரோ**

பட்டபோது பலவித வேடிக்கைகள் அரங்கேறின. மத்திய அரசாங்கம் மனம்போன போக்கில் செயற்படத் தொடங்கியது. மத்திய அரசின் வரையறை என்ன என்று தெற்கத்தியர் கேட்டபோதெல்லாம் ''இதுதான் உங்களது வரையறை' என்று பதில் தரப்பட்டது. அதாவது மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை வரையறுக்காமல் பிராந்திய அர்சாங்கத்தின் அதிகாரங்களை வரையறுத்தல் நடைபெற்றது. இது மத்திய அரசின் தொடர்ச்சியான தலையீட்டை நியாயப்படுத்தும் உத்தியாகும். இங்கும் 13வது திருத்தத்தின்படி மத்திய, மாகாண பொதுவான என்று மூன்று வகைப்பட்டியல் எமக்குத் தரப்பட்டதும் அதிகாரங்களை வரையறுத்தல் இன்றும் கூட நிச்சயமற்ற நிலையில் தொங்குவதையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். தென் சூடானில் கல்வி, பொருளாதாரத் திட்டமிடல் அதிகாரப் பரவலாக்கல் என்பவற்றில் நிதித்துறை முடக்கப்பட்டுவிட மோதல் முற்றியது.

இக்காலகட்டத்தில் (1978) தென் சூடானிய மக்களிடையே சகோதரக் குழுக்களிடையான மோதல்கள் தலைகாட்டின. பிராந்திய அரசாங்கத்தின் புதிய தலைவராக ஜோசப் லாகு தேர்த்தெடுக்கப்பட்டார். முன்னைய தலைவரை விட இவர் தீவிரமானவர். சிறந்த பேச்சாளர். ஆனால் நிர்வாகத் திறமையிருக்கவில்லை. இதனால் ஜனாதிபதி நிமெய்ரி பிராந்திய அரசாங்கத்தைக் கலைத்து விட்டார். 1980 இல் மீண்டும் பழைய தலைவர் ஆட்சிக்கு வந்தார்.

தெற்கிலுள்ள சிறுசிறு பிராந்தியங்களுடன் ஏற்பட்ட கருத்து மோதல்கள் காரணமாக தெற்கிலும் உள்நாட்டுக் கலவரங்கள் மூண்டன. தெற்கிலே எல்லைப் பிரச்சினையும் முக்கிய கலவரக் காரணியாக இருந்தது. உடன்படிக்கையின் படி கனிவளமிக்க காபியா என்ற பகுதி தெற்குக்குச் சேர வேண்டும். எல்லைகள் தொடர்பில் கருத்துக்கணிப்பு நடைபெறவதாக இருந்தது. (வடக்கு கிழக்கு சர்வசன வாக்கெடுப்பு ஞாபகம் வருகிறதா?) நாட்டின் முதலாவது எண்ணெய் வடிசாலை வடக்கிலே அமைக்கப்பட்டது. கிணறுகள் பல தெற்கிலே இருந்தன.

இராணுவத்தில் தொடர்ச்சியான கலகம். படைவீரர்கள் உகண்டாவுக்குத் தப்பியோடி அங்கு இராணுவத்தில் சேர்ந்தனர். சிலர் எதியோப்பியாவுக்குத் தப்பிச் சென்று அங்கு அமைப்புகளை ஏற்படுத்தி அடிஸ் அபாபா உடன்படிகையை அகற்றுவது என்று முடிவெடுத்தனர். எதியோப்பியாவின் உதவியுடன் இராணுவம் நிமெய்ரிக்கு எதிராகக் கிளர்ந்தது. தெற்கு நோக்கியும் முன்னேறியது. 1983 இல் புதிய போராட்டக்குழு உருவானது. சூடானிய மக்கள் விடுதலை இயக்கம் (SPLM) ஆட்சியை அகற்றச் சங்கற்பஞ் செய்தது.

இங்கேதான் திசைதிருப்பம் ஆரம்பமானது. வடக்கு -தெற்கு வேறுபாடு போய் -நிமெய்ரியை அகற்றி விட்டு சூடானை இஸ்லாமியப்படுத்தப் போவதாக SPLM அறைகூவல் விடுத்து அதிருப்தியாளர்ளைக் கவர்ந்திழுத்தது. 1983இல் 'சாரியா' சட்டமே முழுச்சூடானுக்கும் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. இதன் விளைவாக 1985 இல் நிமெய்ரின் ஆட்சி முடிவடைந்தது. தெற்கு மக்களுக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்த சுயாட்சி இனிச் சாத்தியப்படாது என்பது 1985 ல் நிச்சயமாயிற்று. ஏனெனில் அரசு மதச்சார்புடையதாக மாற வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியிருந்தது.

1986 இல் புதிய அரசு பதவிக்கு வந்த போது தெற்கின் மாகாணங்களை ஒன்றிணைத்து அதிகாரம் வழங்குவதாக உடன்பாடு காணப்பட்ட போதிலும் இஸ்லாமிய நெருக்கடியால் அது சாத்தியப்படவில்லை. தெற்கை பல அலகுகளாகக் கூறுபோட்டு வைத்திருத்தலே தெற்கு மக்களின் சுயநிர்ணய உரிமையை அமுக்கிவிடுவதற்கு மிக இலகுவான வழியென இஸ்லாமியத் தீவிரவாதிகள் வலியுறுத்தினர். இக்காலப்பகுதியில் தெற்கில் ஆயிரக்கணக்கில் இனக்குழுக்கள் படுகொலையிலீடுபட்டன. மூன்று லட்சம் அகதிகள் எதியோப்பியாவுக்குச் சென்றனர். இயற்கை அனர்த்தங்களும் ஏற்பட்டன. பட்டினிச்சாவு ஆயிரக்கணக்கில். இதன் பின்னர் சர்வதேச கவனம் திருப்பியது. அமெரிக்காவும் அழுத்தம் பிரயோகித்தது. தீவிரவாதிகளுடன் உடன்பாடு 1988 நவம்பரில் எட்டப்பட்டது. வடக்கேயிருந்து முஸ்லீம் அல்லாதவர்கள் தாக்கப்பட்டு தெற்குக்கு விரட்டப்பட்டனர். தெற்கில் யுத்தம் தொடர்ந்தது.

(மிகுதி அடுத்த இதழில்)

நன்றி - நூலகத்திட்டம்



# ஐரோப்பாவுக்கும் புலம் பெயர்ந்த படுகொலைக் கலாசாரம்

காட்சி 1

யாழ் சட்டநாதர் தெரு.
1988 ஜுலை 18 மாலை
இவன் சைக்கிளை இறுக்கி மிதித்துக் கொண்டிருந்தான்.
நண்பன் ஒருவனைச் சந்திக்க வருவதாகச் சொல்லியிருந்தான்.
நேரமாகி விட்டது.
அவன் இவனுக்காகக் காத்திருப்பான்.
றோட்டோரமாய் இந்தியப்படை முகாம். றோட்டில் தடை போட்டிருந்தார்கள்.
முகாமுக்கு முன்னால் இறங்கி உருட்ட வேண்டும்.
இவனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.
எரிந்த நெய் மணம் வேறு குமட்டியது.
சென்றிக்கு நின்றவனின் முகம் முயல் பிடிக்கிற நாயினுடையதைப் போலிருந்தது.
முகாமின் திறந்த கிணற்றடியில் ஒருவன் தனது நீண்ட கூந்தலைக் கழுவிக் கொண்டிருந்தான்.
இவன் தடையைத் தாண்டியதும் ஏறி மிதிக்கத் தொடங்கினான்.
சைக்கிள் ஓடச் சிரமப்பட்டது.
'ஒருக்கா கழுவிப் பூட்ட வேணும்' - எப்போதும் போல இப்போதும் நினைத்துக் கொண்டான்.
சந்தியால் சட்டநாதர் தெருவுக்குத் திரும்பினான்.
பின்னால் இரண்டு பேர் தொடர்வது போல ஒரு பிரமை.
திரும்பிப் பார்த்தான்.
இரண்டு இளைஞர்கள் வந்து கொண்டிருந்தனர்.
'அவர்களாயிருக்குமோ?
'சீ..அவங்களாயிருக்காது சும்மா பெடியளாயிருக்கும்.
இவ்வளவு நாளா ஒரு பிரச்சினையுமில்லைத் தானே.
இவன் இன்னும் இறுக்கி மிதித்தான்.
கொஞ்சத் தூரம் போகத் திரும்பிப் பார்த்தான்.



அவர்களும் அதேவேகத்தில் வந்து கொண்டிருந்தார்கள்.
'இவங்கள் அவங்கள் போலத்தான் இருக்க வேணும்'
இன்னும் இறுக்கி மிதித்தான்.
அவர்களும் அதே வேகத்தில் தொடர்ந்தார்கள்.
திடீரென்று குட்டிப் பூனையொன்று குறுக்கே பாய்ந்தது.
பூனைக்குட்டிக்காக பிரேக் அடித்து வெட்டித் திரும்பினான்.
திரும்பவும் தன் பலம் கொண்ட மட்டும் உன்னி மிதித்தான்.
இவனுக்கு வியக்கத் தொடங்கியது.
இப்போது எப்படியாவது தப்பியாக வேண்டும்.
சைக்கிளை சடாரெனத் திருப்பி நிறுத்தி விட்டு அருகிலிருந்த மதிலால் ஏறிப் பாய்வதற்குத் தயாரானான்.
மதிலை எட்டிப் பிடித்து தம்மடக்கி ஒற்றைக் காலைத் தூக்கிப் போடுகிற போது ஒரு வெடிச்சத்தம்.
முதுகில் ஏதோ தைத்தது போல.
என்னவென்று உணருவதற்குள் அது நடந்தது.
அவனால் மூச்சடக்கிப் பாய முடியவில்லை.
கீழே விழுந்தான் விமலேஸ்.
மதிலின் ஓரத்தே இரத்தம் மண்ணை நனைத்திருந்தது.
அவனது மூக்குக் கண்ணாடி தெருவோரத்தில் தனித்துக் கிடந்தது.
அவன் வாழ்ந்த போது தேசத்திற்கு வழிகாட்டியாயிருந்தான்.
வீழ்ந்த போதோ போராட்டத்தின் திசை விலகலுக்கு எச்சரிக்கை குறிகாட்டியாவான்.

காட்சி 2

யாழ்பாணப் பல்கலைககழகம்.
இருள் விழுங்கவாரம்பித்திருந்தது அந்தப் பொன்னிற மாலைப் பொழுதை.
பல்கலைக்கழகத்து வாகை மரங்கள் சொரிந்திருந்த பூக்கள் தம் பொன்னிறத்தை இழக்கவாரம்பித்த ஒரு பொழுது.
அருகிலிருந்த ஒழுங்கை நாய்கள் பேயைக் கண்டது போல் குரைக்கவாரம்பித்தன.
இருள் பச்சைநிற யூனிபோம், தோளில் கரிய ஆயுதம், முகத்தில் வன்மத்தோடு இந்தியப் பேய்கள் அணிவகுத்துப் போய்க் கொண்டிருந்தன.
மறுநாளைய விரிவுரைக்கான தயார்ப்படுத்தலில் மூழ்கியிருந்த அவர் தலையை நிமிர்த்தி ஜன்னலூடாக வெளியே பார்க்கிறார்.
பொழுது இருட்டுகிறது.
மீதியை வீட்டில் கொண்டு போய் செய்வதற்காக புத்தகங்களையும், பைல்களையும் தன்னுடைய பாக்கிற்குள் திணித்துக் கொண்டு அலுவலகத்திலிருந்து வெளியே வருகிறார்.
நாய்களின் குரைப்பு மெல்ல மெல்ல ஓய்ந்து வருகிறது.
பேய்கள் போய் முடிந்து விட்டது போலும்.
அவர் தனது சைக்கிளை எடுத்து உருட்டிக் கொண்டு பல்கலைக்கழக வாயிலுக்கு வருகிறார்.
நெற்றியில் சிறிய சுருக்கம் அவர் எதையோ கடுமையாக யோசித்துக் கொண்டு வருவதைப் புலப்படுத்துகிறது.
எதைப் பற்றியாயிருக்கக்கூடும்?
மருத்துவ பீடத்திற்குப் போதிய விரிவுரையாளர்கள் இல்லை. வெளிநாட்டில் இருக்கின்ற தன்னுடைய விரிவுரையாளர்கள், நண்பர்கள் எவருக்காவது " இன்றுள்ள நிலையில் யாழ்.பல்கலைக் கழகத்துக்கு அவர்களுடைய சேவையின் அவசியம் பற்றி எழுதிப்பார்க்கலாம் என்றோ, அல்லது பல்கலைக்கழக மாணவர்களைப் படையினர் அநியாயமாகக் கைது செய்வதை எப்படித்



தடுப்பது என்றோ,
அல்லது விடுதலைப் போராட்டத்துள் தலைதூக்கி வரும் அராஜகப் போக்குகள் பற்றியோ
இப்படித்தான் அவரது சிந்தனைகள் இருந்திருக்கும்.
வழியில் இரு மாணவிகள்.
சற்று நின்று அவர்களுடன் உரையாடுகிறார்.
பெண்கள் சம்பந்தமான கருத்தரங்கு ஏற்பாடு குறித்து அவர்கள் இவருடன் கதைக்கிறார்கள்.
இவர் சில ஆலோசனைகள் சொல்கிறார்.
அவர்கள் முகத்தில் திருப்தியுடன் விடை பெற்றுச் செல்கிறார்கள்.
இவர் பல்கலைக் கழக வாசலைத் தாண்டியதும் சைக்கிளில் ஏறி மிதிக்கிறார்.
எதிரே இரண்டு இளைஞர்கள் ஏசியா சைக்கிளில் வருகிறார்கள்.
இவரை நெருங்க அவர்களின் சைக்கிளின் வேகம் குறைகிறது.
திடீரென அவர்கள் மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியை உருவுகின்றனர்.
இவர் வாய் திறப்பதற்குள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து.
ஐந்து குண்டுகள்.
'நீ விழுந்த போது
சூரியனின் கடைசிக்கிரணங்கள்
சுவரில் விழுத்திய
உன் நிழல்
கைகளை வீசி மேலே ஓங்கிற்று.
முடிவிலி வரை'
ராஜினி.

காட்சி 3

பாரிஸில் நடந்த இச்சம்பவத்தை ஐலண்ட் பத்தி எழுத்தாளர் ஒருவர் இப்படி விபரிக்கிறார்
1994 மே முதலாம் திகதி.
மணி மூன்றாகிக் கொண்டிருக்கிறது.
மூன்றாவது மாடியிலுள்ள அவரது அப்பார்ட் மென்ட்.
வெளியில் வேலைகளை முடித்துக் கொண்டு அப்போது தான் வந்திருந்த அவர் மதிய உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்.
இன்ரகொம் அலறுகிறது.
அவரது மனைவி கோமதி பதிலளிக்கிறார்.
''நாங்கள் அண்ணனைப் பார்க்க வந்திருக்கிறோம்; ஒரு கேஸ் எழுதுவதற்காக' இன்ரகொம்மில் ஒலிக்கிறது ஓர் ஆண்குரல்.
கோமதி கதவைத் திறப்பதற்காகப் பட்டனை அழுத்துகிறார்.
அதே வேளை ''யாரோ உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள்'' என்று கணவரிடம் கூறுகிறார்.
சாப்பிட்டுக் கொண்டிருந்த பிளேட்டையும் எடுத்துக் கொண்டு குசினிக்குள் நுழைகிறார் அவர்.
கதவு தட்டப்படுகிறது.
மனைவி கதவைத் திறக்கிறார்.
ஏறத்தாழ 20 வயதுடைய இரண்டு இளைஞர்கள் கதவருகில் நிற்கிறார்கள்.
கோமதி அவர்களை உள்ளே வந்து இருக்கச் சொல்கிறார்.
அவசர அரசமாகச் சாப்பிட்டு முடித்த அவர் ''தம்பியவை இருங்கோ வாறன் '' என்று கூறியபடியே அவர்களது கேஸை எழுதுவதற்குத் தயாராகிறார்.
கோமதியும் மற்றவர்களும் உள்ளே செல்கிறார்கள்.
சற்று நேரத்தில் ஏதோ வெடித்தாற் போல் சத்தம்.
''என்ன சத்தம் இது கொம்பியூட்டரா? '' குசினிக்குள்ளிருந்து மனைவி வினவுகிறார்.
மீளவும் அதே சத்தம்.
கோமதி குசினிக்குள்ளிருந்து அவசர அவசரமாக வெளியே வருகிறார்.
அவர் நிலத்தில் சரிந்து கிடக்கிறார்.
இரத்தம் ஓடிக்கொண்டிருக்கிறது.
அவ்விரு இளைஞர்களில் ஒருவரது துப்பாக்கி இவர்களை நோக்கி குறிபார்க்க மற்றவர் ரெலிபோன் வயர்களை அறுக்கிறார்.
பின்னர் இருவரும் தப்பி ஓடுகிறார்கள்.
அவர் இறந்து கொண்டிருப்பதை மனைவியால் உணர முடிகிறது.
ஒரு குண்டு தலையையும் மற்றது மார்பையையும் துளைத்திருந்தது.
மனைவியிடமிருந்து ஓ...வென்று எழுந்த கதறல் தொண்டைக்குள்ளேயே அமுங்கிப் போய்விட்டு.
ஈழத்தின் படுகொலைக் கலாசாரம் கடல்தாண்டி ஐரோப்பாவில் எடுத்த வைத்த முதல் அடி.
அதற்குப் பலியானார் சபாலிங்கம் அவர்கள்.



சபாரட்ணம் சபாலிங்கம் அவர்கள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட ஆரம்ப கர்த்தாக்களுள் ஒருவர்.
தமிழ் மாணவர் பேரவையின் ஆரம்ப கால உறுப்பினராக இருந்தார். ஈழப் போராட்டத்தின் முதற்குரலாக வந்த 'காவலன்' பத்திரிகையின் ஆசிரியர்களுள் ஒருவர்.

1973 இல் அரசால் கைது செய்யப்பட்டு இலங்கையின் பல்வேறு இடங்களிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டவர். சிறையிலிருந்த போது தப்ப முயன்று நாரி எலும்பை உடைத்துக் கொண்டவர். பின்னர் விடுதலையாகி இங்கு வாழ்ந்திருந்த சபாலிங்கம் அவர்கள் அரசின் நெருக்குதல்கள் காரணமாகப் பிரான்ஸுக்குப் புலம் பெயர்ந்தவர்.

அவர் தவிர்க்க முடியாத காரணத்தால் பிரான்ஸுக்குப் புலம் பெயர்ந்தாரே தவிர அவரது நினைவுகளும், எண்ணங்களும், செயற்பாடுகளும் எப்போதும் தனது பற்றியதாகவே இருந்தன. "ஈழத்திற்கு தன்னுடைய பணி என்ன என்பது தான் எந்நேரமும் அவரது சிந்தனையாக இருந்தது.

அவர் எழுதிய ஒரு கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார். ''இங்கு நாங்கள் ஆசியா என்கிற அமைப்பின் பேரில் சில அரசியல் நடவடிக்கைகள், இலக்கிய முன்னெடுப்புகளைச் செய்கிறோம். பக்கம் சாராத எமது முன்னெடுப்புகள் இன்றுள்ள அரசையோ அல்லது விடுதலைப் புலிகளையோ சாராது. அவர்களின் நடவடிக்கைகளை நாங்கள் சம்பூரணமாக எதிர்க்கிறோம். எனி மிகுதியைப் புரிந்து கொள்ளுங்கள்.''இது போதும் அவரைப் புரிந்து கொள்ள என நினைக்கிறேன்.

அவர் எழுதியதோடு நிற்கவில்லை. எனக்கு எழுதியபடியே ஆசியா (Asseay -Arts and social Sciences of Eelam Acadamy) என்ற அமைப்பை உருவாக்கினார்.

சேரன், ஜெயபாலன், சோலைக்கிளி, செல்வம், அருந்ததி ஆகியோரது கவிதைத் தொகுதிகளை வெளியிட்டார். ஐலன்ட் பத்தி எழுத்தாளரான தராகியின் பத்திகளை Eluding Peace என்ற தலைப்பில் தொகுத்து வெளியிட்டார் புத்தளம் -முஸ்லீம் மக்கள் வரலாறு அவர் வெளியிட்ட மற்றமொரு புத்தகம். இலங்கையில் தடைசெய்யப்பட்ட 1958 கலவரத்தைப் பற்றிய தாச்சி வித்தாச்சி அவர்களின் Emergency 58 மற்றும் புதியதோர் உலகம், யாழ்ப்பாண வைபவமாலை போன்றவற்றை மீள்பிரசுரம் செய்தார். இலங்கையில் மனித உரிமை மீறல் பற்றிய யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின் அறிக்கைகளை பிரெஞ்சு மொழியில் வெளிக் கொணர்ந்தார்.

இது தவிர தமிழ் முஸ்லீம் மக்களின் வரலாற்று ஆவணங்கள் பேணப்பட வேண்டும் என்பதற்காக இம்மக்கள் சார்ந்த தொல்லியல் ஆவணங்களையும், வரலாற்று நூல்களையும், தகவல்களையும் திரட்டவும் மீள்பதிவு செய்யவும் ஏற்பாடு செய்திருந்தார். 1970 களிலிருந்து இன்று வரையான விடுதலைப் போராட்ட வரலாற்றை தகவல்கள், வாக்குமூலங்கள், புகைப்படங்கள் என்பவற்றோடு ஆவணப்படுத்தும் பெரும் முயற்சியில் இறுதிக் கட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

இவ்வாறான வரலாற்றுப் பின்னணிகளையும், தமிழ் முஸ்லீம் மக்களின் விடுதலை குறித்த அக்கறையுடனும் பிரக்ஞை பூர்வமாக உழைத்து வந்த சபாலிங்கம் அவர்கள் பட்டப்பகலில் இரண்டு கொலையாளிகளால் கொல்லப்பட்டிருக்கிறார். இக்கொலை திடீரென நடந்து முடிந்த ஒன்றல்ல. ஈழப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்தே அதனோடு கூட ஒட்டி வளர்ந்த ஜனநாயக மறுப்பு, மாற்றுக் கருத்துக்களுக்கெதிரான வன்முறை, எழுதுகிற பேசுகிற சுதந்திரத்தை மறுத்தல் என்கிற போக்குகளின் தொடர்ந்தேர்ச்சியான வளர்ச்சியே ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து ஐரோப்பாவில் சபாலிங்கம் படுகொலையாகியிருக்கிறது.

இதுவரை தமது படுகொலை அரசியலை ஈழத்திலும் இந்தியாவிலும் நடாத்தியவர்கள் அதற்கு வெளியே ஐரோப்பிய நாடொன்றில் முதன்முதலாக நடாத்திய படுகொலை இது. ஏற்கனவே மாற்றுக் கருத்துக்களை வெளியிடுகிற பத்திரிகைகள், நபர்கள் என்பவர்களுக்கெதிராக ஆரம்பித்திருந்த தாக்குதல்களும் மிரட்டல்களும் இப்போது படுகொலையில் முடிந்திருக்கிறது.

ஏற்கனவே வடக்கு கிழக்கில் மாற்றுக் கருத்துக்களுக்கான சூழலை இல்லாது ஒழித்தாயிற்று. மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவதற்கான சூழலை ஓரளவு வழங்கியிருந்த ஐரோப்பியச் சூழலை சபாலிங்கம் அவர்களது படுகொலை மூலமாக கொலையாளிகள் ஒழித்துக் கட்ட முயற்சிக்கிறார்கள் என்பது வெளிப்படையானது.

சபாலிங்கம் அவர்கள் தொகுத்த வரலாறு இதுவரை கட்டியெழுபப்பட்ட வரலாற்றின் புனிதத் தன்மையை சிதைத்துவிடும் என்று யார் கருதினார்களோ?

தங்களுடைய முகமூடிகளை அது கிழித்தெறிந்து விடும் என்று யார் அஞ்சினார்களோ?
தங்களுடைய கறைபடிந்த கரங்கள் அம்பலமாகி விடும் என்று யார் அச்சமுற்றிருந்தார்களோ அவர்கள் தான் இந்தப் படுகொலையின் சூத்திரதாரிகள். படுகொலையின் மூலம் தமது 'புனித' வரலாற்றைப் பாதுகாக்க முடியும் என்று கனவு காண்கிறார்கள் அவர்கள். துப்பாக்கிகளால் தமது இருப்பைத் தக்க வைத்து விடலாம் என்று எண்ணுகிறார்கள் .

சுழிபுரத்தில் ஆறு புலிகளை புளொட்டினர் கொன்று புதைத்த போது அவர்கள் வெளியிட்ட சுவரொட்டியின் வாசகம் 'உண்மைகள் ஒரு போதும் உறங்குவதில்லை.

இது புலிகளுக்கும் பொருந்தும்.

நன்றி - நூலகத்திட்டம்



## கடனாளி தான்

## காரணம் தான் வேறு

கடந்த பொதுச்சபையால் தெரிவு செய்யப்பட்ட இயக்குநர் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் திரு.மை.பத்மநாதன் அவர்களால் சங்கப் பணியாளர்கள் பல நன்மைகள் பெற்றனர். நீண்ட காலமாக இடைநிறுத்தி வைக்கப்பட்ட பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கியுள்ளார். மேலதிக நேரச் சம்பளம் கேட்டு நீண்டகாலம் போராடிய ஊழியருக்கு மேலதிக நேரச் சம்பளம் வழங்கியுள்ளார். வருடாந்த சம்பளப் படியேற்றம் நான்கு வருடமாக மறுக்கப்பட்டு வந்த ஊழியருக்கு நிலுவையுடன் படியேற்றம் வழங்கியுள்ளார்.

இதற்கு மேலாக 1994ம் ஆண்டு ஊழியருக்கு வழங்கப்படவிருந்த சீருடை தரம் அற்றது என மட்டக்களப்பில் ரூபா 195/=க்கு விற்கப்பட்ட துணி கொழும்பில் ரூபா 290/=க்கு பொதுமுகாமையாளர், கொள்வனவு உத்தியோகத்தர் இருவரும் கொள்வனவு செய்து பணியாளரின் தலையில் கட்டிவிடவிருந்த வேளையில் எமது பணியாளர் சங்கம் இத்துணி தரமற்றது. இதற்கு பதிலாக வேறு துணி தரும்படி அப்போதைய இயக்குநர் சபையிடமும், மண்முனை வடக்கு பிரதேச செயலாளரிடமும் முறையிட்டு செயலாளர் திரு. ஏ.கே.பத்மநாதன் அவர்கள் சீருடையை மாற்றும்படி பொதுமுகாமையாளருக்கு பணிப்புரை விடுத்தும் அவர் நடைமுறைப்படுத்தாததால் புதிதாக தெரிவு செய்யப்பட்டு வந்த இயக்குநர்சபைத் தலைவர் திரு.மை.பத்மநாதன் தமது முதல் நடவடிக்கையாக சங்க பணியாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றி வைத்தார்.

மட்டக்களப்பு ப.நோ.கூ:சங்கம் கடந்த சில வருடங்களாக பல லட்சம் ரூபா இலாபமடைந்துள்ளது என தாங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். அது உண்மையே! ஆனால் எவ்வாறு இலாபம் ஈட்டியது என்பதை தங்கள் கவனத்திற்கு அறியத்தருகிறோம். மட்டக்களப்பு ப.நோ.கூ.சங்கம் இலாபம் அடைய வேண்டுமானால் மட்டுநகர் வாழ் பொதுமக்கள் நிம்மதியற்ற ஏக்கம் நிறைந்த அவல வாழ்க்கையில் உழல வேண்டும். அதாவது சூறாவளி, பெருவெள்ளம், பயங்கரவாதம், இனக் கலவரம் போன்றவற்றால் பாதிப்படைய வேண்டும். அப்போதுதான் அரசாங்கம் வழங்கும் நிவாரணங்கள் மூலம் கிடைக்கும் வருமானத்திலேயே சங்கம் இயங்கி வந்தது. இவ்வளவு காலமும் உணவு முத்திரையாக ரூபா ஒன்பது இலட்சமும் மாணவர் முத்திரை மூலம் ரூபா ஒன்பது லட்சமும் அகதி நிவாரணமாக ரூபா இருபது இலட்சமும் வரும்படி வந்தது. இவற்றிற்கு 15 சதவீத இலாபம் வைத்து பொருட்களை வழங்கிய போதுதான் பல லட்சங்கள் இலாபம் ஏற்பட்டது. ஆனால் தற்போது அகதி நிவாரணம் நிறுத்தப்பட்டுவிட்டது. மாணவர் முத்திரையும் குறைக்கப்பட்டுவிட்டது. அதனால் இலாபம் குறைவதற்கு வாய்ப்புகள் அதிகம் உண்டு. ஆனால் இலாபத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் தலைவர் திரு.மை.பத்மநாதன் பல முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். ஏஜென்சி தபால் சேவை, பிரேதப் பெட்டியும் வாகன சேவையும் கூட்டுறவு அச்சகம் என்பன அவற்றுள் சிலவாகும்.

ஒரே தடவையில் கொள்வனவு செய்யப்பட்ட 10,000 கி.கி.கடலையில் ரூபா 25,000/=க்கு மேல் கழிவு ஏற்படுத்தியதை தடுக்கும் நோக்கமாகவே தலைவர் திரு.மை.பத்மநாதன் கொள்வனவு மேற்பார்வைக்குச் சென்றாரே தவிர கொள்வனவு செய்யவில்லை என்பதை தங்கள் கவனத்திற்கு அறியத் தருகின்றோம்.

சங்கத்தில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு முன்னைய நிருவாக சபை தமக்கு வேண்டப்பட்டவர்களுக்கு எதுவித நேர்முகப் பரீட்சையுமின்றி வேலை வழங்கி விட்டது எனப் பாதிப்புற்ற பணியாளரினால் வடக்கு-கிழக்கு கூட்டுறவு ஆணையாளருக்கு முறையிட்டதன் பேரில் கூட்டுறவு ஆணையாளரின் அறிவுறுத்தலின்படி நேர்முகப் பரீட்சை வைத்து தகுதியுள்ள திறமை வாய்ந்த பணியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். பழைய நிருவாக சபையின் தன்னிச்சைப் போக்கில் நியமிக்கப்பட்டவர்களே மீண்டும் பழைய பதவிக்கு மாற்றப்பட்டிருக்கிறார்களே தவிர, யாரும் பதவி குறைக்கப்படவில்லை; பழிவாங்கப்படவில்லை என்பதையும் அறியத்தருகின்றோம். அத்துடன் திரு.மை.பத்மநாதன் அவர்கள் தலைவராக பதவியேற்றபின், வேலை நீக்கம் பெற்றவர்கள் வேலை பெற்றிருக்கிறார்களே அன்றி யாரும் இடைநிறுத்தம் செய்யப்படவில்லை என்பதையும் ஈண்டு தங்கள் கவனத்திற்கு அறிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

**மட்டு.ப.நோ.கூ.ஊழியர் சங்கம்**

**மட்டக்களப்பு**

## உண்மையைச் சொல்லி

## என்னைக் காப்பாற்றுங்கள்

மட்டக்களப்பு ப.நோ.கூ.சங்கத்தின் தலைவரான திரு.மு.பத்மநாதனால் செய்யப்பட்ட கொள்வனவுகள் தொடர்பாக உங்கள் 4 மே, 1994 திகதிய பத்திரிகையில் வெளிவந்த செய்தி தொடர்பாக உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

தயவு செய்து இவ்விடயம் தொடர்பான உண்மையான தரவுகள் உங்களுக்கு எப்படிக் கிடைத்ததென்பதைத் தெளிவுபடுத்துங்கள். ஏனென்றால் இத்தகவல்களை நான் தான் கொடுத்திருக்க வேண்டும் என்று தப்பபிப்ராயம் கொண்டுள்ளதுடன் கூட்டத்தில் கலந்து கொண்ட சபை அங்கத்தவர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் முன்னிலையில் தரக்குறைவான முறையில் எதுவித ஆதாரமுமின்றி என்னைத் தாக்கிப் பேசியுள்ளார். அதேவேளை என்மீதான பழிவாங்கல் தொடர்வதுடன் ஒரு எதிரியுடன் பழகுவது போல பழகவும் தொடங்கியுள்ளார்.

அவர் ஒரு ஆளும் கட்சி அமைப்பாளரானதால் என்னை சிறைக்கம்பிகளின் பின்னால் அனுப்ப முயற்சி செய்யலாம். அதனால் தயவு செய்து இந்த எனது கடிதத்தையும், உங்கள் பதிலையும் பிரசுரிக்கத் தவறாதீர்கள்.

**எஸ்.அருளானந்தம்**

**வர்த்தகமுகாமையாளரும்,**

**கொள்வனவு உத்தியோகத்தரும்**

**ப.நோ.கூ.சங்கம்**

**மட்டக்களப்பு**

## சரிநிகரூடாக;

## அன்புடன் சிவசேகரம் அவர்களுக்கு

தாங்கள் ''சரிநிகர்'' ஆசிரியர்க்கு எழுதிய கடிதம் தொடர்பாக இதை எழுதுகிறேன். சற்றுக் கோபப்பட்டு எழுதியிருந்தீர்கள். எதற்கு இக் கோபம்?

சரிநிகர் ஆசிரியர்க்கு இதற்கு முன்னர் எழுதிய கடிதத்தை இதே பத்தியில் பிரசுரித்தமைக்கு 'மிகவும் ஆட்சேபம்' தெரிவித்திருந்தீர்கள். கடிதம் நான் எழுதிவரும் பத்தி பற்றியதாக இருந்ததால் ஆசிரியரிடம் அதைப் பெற்றுப் படித்தேன். அதில் உள்ள விடயங்களை பத்தி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது நல்லது என்பதால் அதைப் பத்தியில் சேர்த்தேன். இப்படிச் செய்ததற்கு வேறு உள்நோக்கம் கிடையாது. தாங்கள் உள்நோக்கம் கற்பித்தால் நானென்ன செய்ய முடியும்? இன்னும் சொல்லப்போனால் தங்கள் கருத்துக்களில் பல எனக்கும் உடன்பாடானவையாக இருந்தமையால் அதனைப் பிரசுரித்தேன். உதாரணம் சுந்தரராமசாமி முற்போக்கு எழுத்தாளரா, முன்னணி எழுத்தாளரா என்பது குறித்தது.

மொழி பெயர்ப்புக் கவிதை தொடர்பாக விடுபட்டுப் 'போன விஷயங்களை மட்டுமல்ல சில விஷயங்களைத் தவறாகத் தருகிறேன் என்பதுதான் தங்களது ஆட்சேபனை என்கிறீர்கள். விடுபட்டுப் போனமைக்கு விசேட காரணம் கிடையாது என முன்னர் குறிப்பிட்டு விட்டேன். நான் எழுதியதை மீண்டும் வாசித்துப் பார்த்தேன். தவறாக எதனைத் தந்திருக்கிறேன் என்பது எனக்குப் புரியவில்லை. மீண்டும் வாசிக்கிறேன். தங்கள் கடித வரிகள் இவைதாம். ''...கே.கணேஷ் தமிழாக்கிய ஹோசிமின் 'சிறைக்குறிப்புகள்' பற்றி அறிவேன். யொன்டோர் பெற்றோவியின் 'எத்தனை நாள் துயின்றிருப்பாய் எனதருமைத் தாய் நாடே' அவரது சமீப கால மொழி பெயர்ப்பு. மாஓ சேதுங் எழுதிய சில கவிதைகளை அவர் மொழி பெயர்த்தது பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். அவை நூல் வடிவம் பெற்றதாக எனக்குத் தெரியாது. உறுதிப்படுத்தின் உதவியாக இருக்கும். எஸ்.வி.ராஜதுரை 1981 வாக்கில் கவிதைகளைத் தமிழ்ப்படுத்தி நூலாக வெளியிட்டார்.''

நான் சில தகவல்களைத் தவறாகத் தந்தமை குறித்து தங்களது மேற்குறிப்பிட்ட கடிதவரிகளில் ஒன்றையும் காணவில்லை. தாங்கள் சூசகமாக யாதேனும் தெரிவித்திருந்தால் ''யானறியேன் சிவசேகரமே.''

''1970களுக்குள்ளும் முன்பும் இருந்த இலக்கியம் பற்றிய அதிக நாட்டமில்லாது எழுதுகிற ஒரு புதிய பரம்பரை நம்முன் உள்ளது என்பதும் தங்கள் ஆட்சேபம் போலுள்ளது. அதற்கு நான் என்ன செய்ய? தெரியாததை தெரியாது என்று சொல்வதுதானே உத்தமம். அறிந்து கொள்ள முயல்கிறேன்.

பாலஸ்தீனக் கவிதைகள் பற்றிய தங்களது குறிப்பு முற்றிலும் கவித்துவத்தின் சார்பானதே என்பது குறித்தும் எனக்கு உடன்பாடு கிடையாது. அக்கவிதைகளின் கவித்துவத்தில் என்னகுறை. பொதுவில் மொழி பெயர்ப்புக்கவிதைகளுடன் ஒப்பிடுகிற போது பாலஸ்தீனக் கவிதைகள் கவித்துவத்தில் எவ்வகையிலும் குறைவானதல்ல.


ஜெயபாலனை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் என்பதால் அவர் கவிதைகளை இன்னொரு பரிமாணத்தில் என்னால் பார்க்க முடியும் என்பதனையே குறித்திருந்தேன். தங்களால் அதனைப் புரிந்து கொள்வது கடினம் என்பதும் எனக்குத் தெரியும்.

சரிநிகரில் எழுதிய அருண் (கழுதைகளும் புல்லுக்கட்டும்) மாதவன் (சிவரமணியின் கவிதையும், சிவரமணியின் தற்கொலையும்) ஆகியோரிற்கும் ஆட்சேபம் தெரிவித்திருந்தீர்கள். நான் அதற்கு பதிலளிப்பது அநாவசியம். ஆனால் சிவரமணியின் தற்கொலைக்குரிய சூழல் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்றாலும் சிவரமணியின் தற்கொலை பொதுமைப்படுத்தக் கூடியதல்ல. அவ்வாறு பொதுமைப்படுத்துவதனால் பல இழப்புக்களையே நாம் சம்பாதிக்க நேரிடலாம். சூழல் விமர்சிக்கப்பட வேண்டியது உண்மை தான் எனினும், புறச்சூழலை மட்டும் குறை கூறி என்ன பயன்? நமது அகச்சூழலும் இவ்வாறான செயல்களுக்குப் பெரிதும் பங்காற்றுகின்றது என்பதும் உண்மைதான். அகச் சூழலில் மிகப் பலவீனமான நாங்கள் புறச்சூழலை கடுமையாகக் கண்டனம் செய்வதிலும் அர்த்தமில்லை. சிவரமணியின் தற்கொலைக்கு இது முற்றிலும் பொருந்தும்.

இது தொடர்பாக இன்னொரு குறிப்பும் உண்டு. யாழ்ப்பாணச் சூழலில் பெண்ணிலைவாதத்துடன் பெண்களின் விடுதலை தொடர்பாக பிரஞ்சை பூர்வமாக எழுதுகிற பெண்கள் ஒருசிலர் தான். அவர்களுள் சிவரமணியும் ஒருவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட மாணவராக இருந்த போது கூடப் பல மாணவர்கள் இவரது பெண்விடுதலை தொடர்பான நடத்தைகளை அவமதிப்புக்குள்ளாக்கினார்கள். அப்போது அம் மாணவர்களை எதிர்த்துப் போராடியவர் சிவரமணி. ஆனால் சிவரமணியின் தற்கொலையானது ஆணாதிக்கம் கொண்ட மாணவர்களுக்குச் சில சாத்தியங்களையும் பெண்விடுதலையில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு தற்காலிக பின்னடைவையும் கொடுத்திருக்கும் என்பதும் உண்மைதான்.

**சூர்யா**

**கொழும்பு**




## நேர்மைத் துணிவுண்டோ

வழமைபோலவே இம்முறையும் மே முதலாம் திகதி உதயமானது. மலையகம் எங்கும் மேதினம் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மலையகத்தில் முதல் படியில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனது கூட்டத்தை நுவரெலியாவிலும், இரண்டாம் நிலையில் உள்ள, திரு தொண்டாவுக்கு சவால் விடும் வகையில் வளர்ச்சி அடைந்து வரும் கட்சியான மலையக மக்கள் முன்னணி தனது கூட்டத்தை கொட்டகலையிலும் ஏற்பாடு செய்தது. இதற்கு காரணம் கொட்டகலை ஒரு கேந்திர நிலையமாக விளங்குவதனாலும் அது இ.தொ.காவின் கோட்டையாக விளங்குவதாலும் அதனை உடைக்கும் நோக்குடன் திரு சந்திரசேகரன் கொட்டகலையில் தமது கூட்டத்தை ஏற்பாடு செய்து இருந்தார். பெரும் திரளான மக்கள் காலை சுமார் பதினொரு மணி அளவில் வெள்ளம் போல் திரண்டார்கள். திரு சந்திரசேகரன் தனது பாதுகாப்பு சகிதம் வந்தார். அவர் வரும் போதே பழைய ராமாயணம் பாடத் தொடங்கி விட்டது ஒலிபெருக்கி. எங்கும் தலைவர் வாழ்க, தலைவர் வாழ்க என்ற கோசமும் தலைவரை வாழ்த்தும் வகையில் வர்ணனைகளும் காதைப் பிளந்தன. மறுபுறம் சுவரொட்டிகள் அனைத்தும் இரு தலைவர்களின் படங்களை சுமந்த வண்ணம் காணப்பட்டன. தொண்டா ஆதரவாளர்கள் தொண்டாவை வாழ்த்தி சென்றார்கள். இது மட்டுமா? இ.தொ.கா ஐம்பது வருடமாக ஏமாற்றி வரும் மக்கள் பணத்தை கொண்டு இந்தியாவில் இருந்து சுவரொட்டிகளை வரவழைத்திருந்தது. வளைவு கட்டியிருந்தது. மேடைகள் தோறும் அறுபது அடியில் தொண்டமானது படத்தை வரைந்து நிறுத்தியிருந்தது. அதே போன்று அதே பாணியில் முதல் தடவையாக சந்திரசேகரனின் உருவம் நாற்பது அடியில் சுமார் 60,000 ரூபா செலவில் வரையப்பட்டு மேடை முன்பு நிறுத்தப்பட்டிருந்தது. இது என்ன மேதினமா அல்லது தொழிற் சங்கத் தலைவர்களின் விளம்பர மேடையா? அல்லது இவர்களின் களியாட்ட மேடையா? இவ்வாறு வீணாகச் செலவு செய்யும் பணத்தைக் கொண்டு மலையக இளைஞர்களுக்கு படிக்க வாய்ப்பை ஏற்படுத்தலாம். தோட்டங்கள் தோறும் வாசிகசாலையை அமைக்கலாம். ஏன் மலையகத்தில் மாவீரர்களாக அன்று உயிர்நீத்தவர்களுக்கு ஒரு கல்லறை கட்டலாமே? அவர்களின் ஞாபகமாக கல்வி கற்கமுடியாதவர்களுக்கு கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தலாமே? இது தொழிலாளர்களின் மேதினம் எவ்வாறு தோன்றியது. அதன் கருத்து என்ன என்பனவற்றை விளக்கலாம் அல்லது தற்போது தொழிலாளர்களின் பிரச்சினை என்ன? அதனை எவ்வாறு தீர்க்கலாம் போன்ற எதிர்கால வேலைத்திட்டம் எதனையும் முன்வைக்காத நிலையில் மலையகத்தில் பல்வேறு கட்சிகள் இன்று போட்டி போட்டுக் கொண்டு வாக்கு தேடும் படலத்தில் இறங்குவதையே காணக்கூடியதாக உள்ளது.

இது இவ்வாறிருக்க நுவரெலியா ராகலையில் புதிய ஜனநாயகக் கட்சித் தோழர் தம்பையா தலைமையின் கீழ் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருந்தது. அது தம்மை தேர்தலுக்கு தயார்படுத்துவது போல் உள்ளது. இவரும் திரு சந்திரசேகரனை ஆரம்பத்தில் ஆதரித்தார். அவருக்காக தேர்தல் வேலையும் செய்தார். பின் கடந்த மாகாண சபை தேர்தலில் போட்டியிட இடம் கொடுக்காத நிலையில் அதில் இருந்து பிரிந்து விட்டார். இவை எல்லாமே மக்களை ஏமாற்றும் கூட்டம்தான். இதனால் அரசுக்குத்தான் இலாபம். இன்னும் நூறு கட்சி வேண்டும் என்றால் அதையும் அரசு அங்கீகரிக்கும். [illegible]ணம் வடக்கு கிழக்கில் இன்று பல [illegible]கங்களினால் அது அடையும் இல[illegible] ஆகும். அது போலவே மலைய[illegible]ழும் எதனை கட்சிகள் தோன்றுகின்றதோ அவை மக்களை சின்னா பின்னாமாக்க உதவியாகவே அமையும் என நினைக்கலாம். மலையக மக்கள் முன்னணி கூட்டத்தில் கட்சி வைக்காத சில கோசங்களை சில இளைஞர்கள் முன்வைத்து கோசமிட்

→ 15

நன்றி - நூலகத்திட்டம்



## புத்தளம் ...

காட்டி அவரை பகிஷ்கரித்தோம். அவர் இனவாதரீதியிலேயே இயங்கி வருகிறார். இன்று கூட அவர் நிவாரணப் பொருட்களோடு பாதிக்கப்பட்ட கரைதீவு மக்களை சந்திப்பதற்கு பதிலாக இச்சம்பவத்திற்குக் காரணமான சேரக்குளி சிங்கள மக்களுக்கு ஆறுதல் கூறி நிவாரணப் பொருட்களை அங்கு கொடுத்து விட்டு மிகுதியை எங்களுக்குக் கொண்டு வந்தார். அது எல்லோருக்கும் போதுமானதாக இருக்கவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் நிலைமை மோசமாக இருக்கும் போது இவ்வளவுக்கும் காரணமானவர்களுக்குப் பொருட்களையும் கொடுத்து ஊக்குவிக்கும் செயலே இது'' என்றார்.

புத்தளம் மாவட்ட விவசாய போதனா ஆசிரியர் எஸ்.எம்.ஏ அஸீஸ் கூறும் போது 'இன்று மட்டுமல்ல அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா பல தடவைகள் இவ்வாறு நடந்து கொண்டுள்ளார். கடந்த ஆண்டு யூலை மாதம் இலவங்குளத்தில் முஸ்லீம்களின் மீதான புலிகளின் தாக்குதலினால் அகதிகளாகக் குடிபெயர்ந்து இங்கு வந்த 150 குடும்பங்களுக்கான நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க முயற்சி செய்த போது பிரதேச செயலாளர் காரியாலயத்தில் ''அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா அதைக் கொடுக்க வேண்டாம் எனக் கூறியுள்ளார்'' என்றார்.

அதுமட்டுமல்ல இப்போது இங்கு நடந்ததைப் போன்ற சிங்கள-முஸ்லீம் பிரச்சினையொன்று கங்காவ்ாடி (ஆத்துமுகப்பு என்ற பெயர் தற்போது கங்காவாடியாகியுள்ளது) என்னும் இடத்தில் நடந்த போது பெஸ்டஸ் பெரேரா முஸ்லீம் மீனவர்களை குறிப்பிட்ட இடத்திற்குப் போய் மீன் பிடிக்காதீர்கள் என எச்சரித்தாரேயொழிய அவர் சிங்கள 'வர்களுக்கு எவ்வித எச்சரிக்கையும் கூறவில்லை. முஸ்லீம்களின் வயிற்றில் தான் அடித்தார். இவ்வளவுக்கும் அச்சிங்களவர்கள் அந்தப் பகுதியில் குடியேற்றப்பட்டவர்களே. முஸ்லீம்கள் பரம்பரையாக வாழ்ந்து வருபவர்கள். இவ்வளவு பக்கச்சார்பாக நடந்து கொண்ட ஒரு அமைச்சரை எப்படி நாங்கள் நம்புவது?

ஐந்து படகுகளை இழந்த எஸ்.எம்.அசனா லெப்பை என்பவர் கூறும் போது ''இது இறால் சீசன். இந்தக் காலத்தில் நாங்கள் சம்பாதித்தால்தான் வருடம் முழுதும் சமாளிக்கக்கூடியதாக இருக்கும். ஆனால் இன்றோ நாங்கள் படகுகளையும் இயந்திரங்களையும் இழந்து அரசின் நிவாரணத்தை எதிர்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இவ்வளவையும் செய்யக் காரணமாக இருந்த 'மார்க்கஸ்'க்கு பொலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இன்று எங்களுக்கு நடந்த இச்சம்பவங்களுக்குக் காரணமானவர்களுக்கு பாதுகாப்பும் நிவாரணமும் அரசு கொடுத்து வருகிறது. ஆனால் இதே சம்பவம் எங்களால் செய்யப்பட்டிருந்தால் இங்கிருந்து நாங்கள் எல்லோரும் அப்புறப்படுத்தப்பட்டிருப்போம். அல்லது கொலை செய்யப்பட்டிருப்போம்'' என்றார்.

இச்சம்பவம் நடந்த சேரக்குளி உண்மையில் முஸ்லீம் கிராமமாகவே இருந்தது. இலங்கை அரசாங்கத்தின் கடந்த கால திட்டமிட்ட குடியேற்றங்களால் முற்றுமுழுதான சிங்கள கிராமமாக அது இன்று மாற்றப்பட்டுவிட்டது. சிங்கள மக்கள் குடியேற்றப்பட்ட போதெல்லாம், முஸ்லீம் மீக்கள் ஆதரவாகவும் ஒத்துழைப்பவர்களாகவுமே இருந்துள்ளனர். ஆயினும் அரசியல் வாதிகளின் இனவாத விஷம் ஊட்டப்பட்ட நடவ'

→ 16

## விமர்சகன்...

திக் கொள்ளவும் எதிர்பார்த்த வண்ணமே உள்ளது. இதனாலேயே விமரிசகர் இக்குரலுடன் இணைந்து, தனது மனோதத்துவ வாசிப்பைச் செலுத்தி, ஆதிக்கவர்க்கத்தினரோடு உடன்படுகிறார்- துணை போகிறார். இவ்வாறு ஆதிக்க வரலாற்றில் ஏற்படுத்தியிருக்கும் சமச்சீரற்ற நிலையை எதிர்க்க மாற்றுப் பிரதிகளை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இங்கு பெண்ணியப் பார்வை பொதுவாக நம்மில் காணக்கிடக்கும், ஆணாதிக்கத்தை அடையாளப் படுத்துவது போல, தலித்தியப் பார்வை, தலித் அல்லாதவர்களிடம் உறைந்துள்ள ஆதிக்க சாதியின் கூறுகளை இனங்காணவும், அதிலிருந்து மீற எத்தனிக்கும் செயல்பாடாகவும் இருக்க முடியும்.

## சொத்தி....

டம் எஞ்சியுள்ள அதிகாரத்தையும் பிடுங்கி முற்றுமுழுதாக மேட்டுக் குடியினரின் கருவியாகக் கட்சியை உருமாற்றி விடுவதே ஆகும். இந்தப் போக்கில் வெற்றி பெறுவதற்கு தற்காலிகமாக வேனும் பிரேமதாசாவின் மனைவி மற்றும் மகனை கட்சிக்குள் இழுப்பது அவசியமாகவுள்ளதால் அதற்கான முயற்சிகளும் மேற் கொள்ளப்படுகின்றன.

ஆனால், பிரேமதாச அணியினரும் சரி, மேட்டுக்குடி அணியினரும் சரி ஒரு முக்கியமான விடயத்தை கவனிக்கவில்லை. கடந்த ஆண்டுகளில் மக்களிடையே ஐ.தே.க அரசியலின் போலித்தனங்களை விளங்கிக் கொள்ளும் போக்கு வேகமாக வளர்ந்து வந்திருக்கின்றது என்பதே அந்த விடயமாகும். சிங்கள வாரப்பத்திரிகைகளின் பெருக்கம் ஆளுங்கட்சியினருக்கு பலத்த நெருக்கடியை உண்டாக்கியிருக்கின்றது. புதிய சந்திரிகா அலை எழுச்சியின் வேகத்துடன் வாக்காளர்கள் அள்ளுப்பட்டுப் போவதற்கான வாய்ப்பை அவை தெரிந்தோ தெரியாமலோ உருவாக்கி வருகின்றன. இந்த நிலைமைக்குக் கீழேயே மாற்றம் ஏற்பட்டுவிட்டதான ஒரு நம்பிக்கையை அவர்கள் பெற்றுக் கொள்ள விரும்புகிறார்கள். அந்த மாற்றத்தை 'புனருத்தாரணம்' செய்யப்படும் ஐ.தே.கவினால் இவ்வளவு காலத்துக்குப் பிறகு எடுக்கப்படும் நடவடிக்கைகளின் மூலம் சாதித்துவிடலாம் என்பது கேள்விக் குறியே.

சொத்தி உப்பாலி மீதான நடவடிக்கைகளும், புதிய தேர்தல் கால அறிவிப்புகளும் இவ்வளவு கால ஏமாற்று நடவடிக்கைகளின் தொடர்ச்சிதான் என்ற எண்ணமே வலுப்பெற்று வருகிறது.

'ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு' என்பதை நிரூபிக்கும் விதத்தில் ஐ.தே.க எடுத்துவரும் நடவடிக்கைகளைப் பார்த்து இப்போது சிரிக்காதவர்களே இல்லை எனலாம்.

ஆனால், ஐ.தே.கவுக்கு மாற்றாக காட்டப்பட்டுவரும் சந்திரிகா கூட ஒரு மண் குதிர் தான் என்பதை இன்னொரு ஐந்து வருடங்களின் பின்தான் இந்நாட்டு மக்கள் புரிந்து கொள்ளப் போகிறார்களோ?

இந்த இரண்டுக்கும் மாற்றான ஒரு மூன்றாவது பற்றி எப்போது அவர்கள் சிந்திக்கப் போகிறார்கள்?

இன்றைய முக்கியமான கேள்வி அது!

## நேர்மை....

டார்கள். இது மக்கள் அனைவரையும் சிந்திக்க வைத்து விட்டது போல் இருந்தது. அவர்கள் எழுப்பிய கோசங்கள் நியாயமானதே. மலையக மக்கள் தற்போது எதிர் நோக்கும் பிரச்சினைக்கு அவர்களின் கோசங்கள் மருந்து கொடுத்தது போல் அமைந்து இருந்தது. அவர்களின் கோசங்கள் வருமாறு.

- இளைஞர்களை விடுதலை செய்!
- பத்தினை ஸ்ரீபாத கல்வியல் கல்லூரியை தமிழுக்கு மாற்று!
- கம்பனி நிருவாகத்தை மாற்று!
- வீட்டுரிமை எமக்கு கொடு!
- நாட்டுரிமை எமக்கு கொடு
- திட்டமிட்ட குடியேற்றத்தை நிறுத்து!
- கட்சிகளே மக்களை ஏமாற்றாதே!
- தோட்டங்களை மாகாண சபைக்கு உட்படுத்து!

என்பன போன்ற கோசங்களை முன் வைத்தார்கள். இது முழு மேதின கூட்டத்தையுமே பத்து நிமிடம் சிந்திக்க வைத்து விட்டது எனலாம். இனி மலையகத்தில் மக்களை ஏமாற்றும் எந்த கட்சிக்கும் இடம் இல்லை என்பதைத் தெட்ட தெளிவாக எடுத்து காட்டி விட்டார்கள். சரி தம்பையாவின் கட்சியோ அல்லது சந்திசேகரனின் கட்சியோ அல்லது தொண்டாவின் கட்சியோ முடிந்தால் ஸ்ரீபாத கல்வியல் கல்லூரிக்கு எதிராகவும் கம்பனி நிருவாகத்திற்கு எதிராகவும், வேலை நாளை குறைத்தமைக்கு எதிராகவும், ஒரு உண்ணாவிரத போராட்டத்தையோ அல்லது ஒரு சத்தியாகிரக போராட்டத்தையோ அல்லது ஒரு மறியல் போராட்டத்தையோ மேற் கொள்ளட்டும். அப்போதுதான் மலையக கட்சிகள் தமிழ் மக்களுக்கும் மலையக மக்களுக்கும் சேவை செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டவை என்பதை கொஞ்சமாவது நிருபித்ததாக இருக்கும். நெஞ்சில் உரத்துடனும் நேர்மைத் துணிவுடனும் அரசுக்கு எதிராக இப்போராட்டத்தைச் செய்யட்டும். செய்வார்களா?

புவிநாத்

## தவறுகள்

இதழ் 45இல் பக்கம் 9இல் வெளியான **''சுதந்திரம் கிடைக்கும் ஆனால், அது எப்போது?''** என்ற தலைப்பிலான கட்டுரையை எழுதியவர் HEIDI-RINKE. ஜேர்மன் மொழியிலிருந்து அதைத் தமிழாக்கம் செய்தவர் அழகு குணசீலன்.

கடந்த சரிநிகரில் (இதழ் 46) மணிவாசகம் பத்தியில் அச்சிடல் தவறு ஏற்பட்டுள்ளது. கவனக்குறைவினால் ஏற்பட்டு விட்ட இத்தவறுதலுக்காக வாசகர்களிடம் மன்னிப்புக் கோருகிறோம். எமது பத்திரிகையைத் தமிழ் அச்சக உரிமையாளர்கள் எவரும் அச்சிட முன்வராத நிலையில் தமிழ் தெரியாத சிங்கள நண்பர்களே அச்சிட்டுத் தருகின்றனர். அவர்களுக்குத் தமிழ் தெரியாததால் அவர்களால் கூட இத்தவறை நிவர்த்தி செய்ய முடியவில்லை. இதனால் வாசகர்களுக்கும் சீ.சாத்தனாருக்கும் ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக மன்னிப்புக் கோருகிறோம். அப்பத்தி இம்முறை மீளப் பிரசுரமாகிறது.

ஆ-ர்

# மணிவாசகம்

### தொண்டா ஆதரவு

''ஹேமா பிரேமதாசா மத்திய கொழும்புத் தேர்தற் தொகுதியில் போட்டியிட முன்வருவாரானால் நான் எனது முழு ஒத்துழைப்பையும் அவருக்கு வழங்குவேன்.''

**ஸ்ரீ லங்கா சுற்றுலாத்துறை கிராமிய கைத்தொழில் அமைச்சரும், இ.தொ.கா.தலைவருமான சௌ.தொண்டமான்-திவயினவில்** -19.04.1994

### சஜித்துக்காகத் தயார்

''சஜித் பிரேமதாசாவுக்கு ஐ.தே.க. பலப்பிட்டி அமைப்பாளர் பதவியை வழங்க விருப்பமானால் அவருக்குச் சந்தர்ப்பம் கொடுப்பதற்காக நான் எக்கணமும் அமைப்பாளர் பதவியை தியாகம் செய்யத் தயார்.''

**பலப்பிட்டி ஐ.தே.க பிரதான அமைப்பாளரும் அகில இலங்கை ஐ.தே.க. இளைஞர் முன்னணியின் பொதுச் செயலாளருமான அசோக தனவங்ச -திவயினவில்**- 19.04.1994

### தந்தை வழி

''எமது நாட்டு மக்கள் இரண்டாயிரம் வருடங்களாக இருந்த நிலப் பிரபுத்துவ முறையினால் கசக்கிப் பிழியப்பட்டு, அடக்கு முறைக்குட்பட்டு இருந்த போது நிலப்பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்து, அம்முறையை உதைத்துத் தள்ளிவிட்டு வந்த எனது தந்தையின் வழியில், தொம்பை, அத்தனகல்லை மக்களை மட்டுமன்றி, நாட்டின் முழு மக்களையுமே நிலப்பிரபுத்துவ முறையிலிருந்து விடுப்பேன்.''

**ஸ்ரீ லங்கா மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்க -திவயினவில்** -19.04.1994

### வேறேது வழி

''வடக்கின் சிக்கலுக்கு யுத்தமொன்றினால் தீர்வொன்றைக் காண முடியாது என்பது உண்மையே. ஆனாலும் ஆயுதந் தாங்கிய பயங்கரவாதம் நிலவும் வரை யுத்தத்தை விட வேறெதுவும் சாத்தியமில்லை''

**ஆசிரியர் தலையங்கத்திலிருந்து....-லங்காதீபவில்**- 19.04.1994

### நீக்கினால் மட்டுமே ஆதரவு

''இ.தொ.காவின் தீர்ப்புக்கு முரணாகச் செயற்பட்டதனால் கட்சியின் தேசிய சபையின் ஒருமித்த தீர்ப்பின்படி கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து தடை செய்யப்பட்ட மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் எட்டுப் பேரும் அவ் உறுப்பினர் பதவிகளிலிருந்து நீக்கப்படும் வரை இ.தொ.காவின் ஆதரவு, ஐ.தே.கவுக்குக் கிடைக்க மாட்டாது.''

**மத்திய மாகாண சபையின் முன்னாள் இந்து கலாசார, தமிழ்க் கல்வி அமைச்சரும், இ.தொ.கா.உப தலைவருமான எஸ்.சதாசிவம்- லங்காதீபவில்** -20.04.1994

### கடவுள் தான் என்னை அனுப்பினார்.

மலை நாட்டுச் சிங்கள மக்களுக்கு இல்லாது போன சலுகைகள் பல உள்ளன. அச் சலுகைகளை மீண்டும் பெற்றுக் கொடுக்கவே கடவுள் என்னைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பினார்.

**ஸ்ரீ லங்கா மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் டபிள்யூ பீ.பீ திசாநாயக்க -லங்காதீபவில்** -20.04.1994

### இ.தொ.கா தொண்டாவின் சொத்தல்ல

''இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொண்டமானின் தனிப்பட்ட சொத்தல்ல. அது அனைத்துத் தோட்ட மக்களுக்கும் உரியது. காங்கிரஸின் வளர்ச்சிக்குத் தொண்டமானைப் போலவே அண்ணாமலை, ஏ.அஸீஸ், வெள்ளையன், ராமனுஜம், சுப்பையா, ராசலிங்கம், வேலுப்பிள்ளை, ஜேசுதாசன் போன்றவர்களும் உயிர் உள்ளவரை உழைத்துள்ளனர்.''

**ஸ்ரீ லங்கா மத்திய மாகாண கைத்தொழில் கால் நடை வள அபிவிருத்தி வர்த்தக, வாணிபத்துறை, கல்வி(தமிழ்) அமைச்சர் அண்ணாமலை கதிரேசன் -லங்காதீபவில்** -21.04.1994

### பாடம் புகட்டுவோம்

''எங்களைத் தெரிவு செய்து அனுப்பியவர்கள் தோட்டப்புற மக்களாவார். அதனால் எம் எட்டுப் பேரையும் நீக்கக் கூடியவர்கள் அம் மக்கள் மட்டுமே. வேறெவராவது எம்மை விரட்டியடிக்க வந்தால் அவர்களுக்கு நல்ல பாடமொன்றைப் புகட்டுவும் தயார்.''

**ஸ்ரீ லங்கா மத்திய மாகாண சபையின் இ.தொ.கா உறுப்பினர் ஆர். தங்கவேலு- லங்காதீபவில்** -22.04.1994

### கூச்சல் போடாதீர்கள்

''வட-கிழக்கு யுத்தத்துக்கு வருடமொன்றுக்கு ரூபாய் 2500 கோடி மட்டில் செலவாகிறது. யுத்தமொன்று நடைபெறுகையில் அவசர காலச்சட்டம் தேவைப்படும்.

இவ்வாறான நிலைமையின் கீழும் ஜனநாயகத்தை மதிக்கும் நாம் கிழக்கு மாகாணத்தில், உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தினோம். அத் தேர்தல்கள் பெரு வெற்றியை இவ் அரசுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளன. அவ்வாறே இம்முடிவுகள் பிரபாகரனை அடி மட்டத்துக்குக் கீழ்த் தள்ளக் காரணமாயிருந்தது.

பொருட்களின் விலைவாசி உயர்கிறது என நீங்கள் கூச்சல் போடுகிறீர்கள். யுத்தமொன்று உள்ள போது பொருட்களின் விலைகள் உயர்வதைத் தவிர்க்க இயலாது.''

**களுத்துறை மாவட்ட ஐ.தே.க பா.உ. சரத் ரணாவக்க -திவயினவில்** -22.04.1994

**சீ. சாத்தனார்**

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

## படுவான்கரை

# ஏக்கருக்கு ஆயிரம் ரூபா

# கப்பம் வாங்கும் படையினர்

மட்டக்களப்பில் இருந்து கொழும்பிற்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் அனுப்பப்படும் நெல் முழுவதும் படுவான்கரைப் பிரதேசத்திலேயே விளைந்தவையாகும். 1985ற்கு முன்பு விவசாயரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்ட இப்பகுதி கடந்த பத்தாண்டு கால கோர யுத்தத்தினால் முற்றாகச் சீரழிந்துள்ளது.

இப்பகுதியைப் பார்க்கும் போது 50 வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியைத் தான் ஞாபகப்படுத்துகின்றது. போக்குவரத்து வசதிகள் எதுவுமற்ற இப்பகுதியில் துவிச்சக்கர வண்டிதான் பிரதான போக்குவரத்துச் சாதனம். வீதிகள் முழுவதும் மிகவும் மோசமான முறையில் காணப்படுகின்றன.

மருத்துவ வசதியோ எல்லாவற்றையும் விட மிகவும் மோசமாகக் காணப்படுகின்றது. முன்பு இயங்கிய அனைத்து வைத்தியசாலைகளிலும் தற்போது இராணுவம் முகாமிட்டுள்ளது. ஒரு வாரத்தில் ஓரிரு நாட்களுக்கு ஒரு அம்புலன்ஸ் வந்து மருந்து கொடுத்துச் செல்கின்றது. ஏனைய நாட்களில் வைத்திய வசதியைப் பெற வேண்டுமானால் இப்பிரதேச மக்கள் மட்டக்களப்பையோ ஆரையம்பதியையோ அல்லது களுவாஞ்சிக்குடியில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரியையோ தான் நாட வேண்டிய நிலை. இரவு வேளையில் என்றால் அதுவும் முடியாத காரியம். இப்படி இரவு நேரத்தில் சுகயீனம் ஏற்பட்டு உரியநேரத்தில் வைத்தியம் செய்யாதபடியால் இழக்கப்பட்ட உயிர்களும் ஏராளம்.

படுவான் கரை மக்கள் எழுவான் கரைக்கு வரவேண்டுமானால் ஆற்றைக் கடந்து தான் வரவேண்டும். மூட்டை முடிச்சுகளோடு இம்மக்கள் ஆற்றைக் கடந்து இராணுவத்தினர் சோதனை முகாம்களில் மிகவும் மோசமான முறையில் சோதிக்கப்பட்டு வருகின்ற போது இவர்களைப் பார்ப்பதற்கே பரிதாபகரமானதாக இருக்கும். மழைக் காலங்களில் ஆற்றில் வெள்ளம் அதிகரிக்கும் போது ஆற்றைக் கடக்கையில் ஆற்றுக்குப் பலியானவர்களும் உண்டு. கடந்த வருடத்தில் பட்டிப்பளை பிரதேச செயலாளர் உட்பட பலர் இவ்வாறு இறந்துள்ளனர். விவசாயப் பிரதேசமான இப்பகுதியில் விளைந்த நெல்லைக் கூட மட்டுநகருக்கு எடுத்து வந்து விற்பதற்குக் கூட இம் மக்களுக்குச் சுதந்திரம் இல்லை. இதன் காரணமாக கடன்பட்டு விவசாயம் செய்தும் நெல்லை விற்றுக் கடன் அடைக்க முடியாத நிலையில் இவர்கள் உள்ளனர்.

முன்னர் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த இப்பிரதேசம் தற்போது விசேட அதிரடிப்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. அதிரடிப்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பிறகு இப்பகுதி மக்கள் அனுபவிக்கும் துன்பம் சொல்லில் அடங்காது. எப்பொழுதும் சொகுசாகவே இருந்து பழக்கப்பட்ட அதிரடிப்படையினர் எவ்வித வசதிகளுமற்ற இப்பகுதிக்கு வந்தவுடனேயே சொகுசுகளைத் தேடிக் கொள்ளும் வேலையிலேயே ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் அம்பிளாந்துறை, கடுக்காமனை, பட்டிப்பளை, முனைக்காடு முதலைக்குடா, பண்டாரியாவெளி, படையாண்டவெளி, கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளைச் சுற்றிவளைத்த படையினர் அனைவரையும் பாடசாலை ஒன்றிற்கு அழைத்து வந்து நெல் வேளாண்மை செய்யும் எல்லோரையும் எழுந்து நிற்கும் படி கூறிய போது எவரும் எழுந்து நிற்கவில்லை. பின்னர் வேளாண்மை செய்பவர்களுக்கு ஏக்கர் ஒன்றிக்கு ஒரு அந்தர் வீதம் யூரியா விநியோகிப்பதற்காகத் தான் எழுந்து நிற்கச் சொல்கிறோம் என்றதும், அதிரடிப்படையினரை மக்கள் நன்றாகப் பாராட்டிக் கொண்டு ஒவ்வொருவரும் எழுந்து நின்று தான் 10 ஏக்கர் செய்வதாகவும் இன்னொருவர் 5 ஏக்கர், 'ஏக்கர் எனவும் அனைவரும் தாங்கள் செய்யும் வேளாண்மை விபரங்களை உண்மையாக ஒப்படைத்திருக்கின்றனர். (இப்பகுதியில் யூரியா பாவிக்கத் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனால் வேளாண்மை செய்யும் விவசாயிகள் உரத்தட்டுப்பாட்டினால் பெரி

**சத்தியேந்திரா**

தும் பாதிக்கப்பட்டுள்ளனர்) படையினரும் அனைவரின் விபரங்களையும் ஒன்றும் விடாமல் பதிந்து விட்டு அருகில் இருந்த கிராமசேவையாளரை அழைத்துப் பதிந்த பெயர்ப்பட்டியலை அவரிடம் ஒப்படைத்து இன்னும் 24 மணித்தியாலத்திற்குள் ஏக்கர் ஒன்றிற்கு ரூபா 1000/= வீதம் ஒவ்வொருவரிடமும் அறவிட்டு உடன் ஒப்படைக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளனர். விவசாயிகள் தங்களுடைய வறுமை நிலையை எடுத்துக் காட்டியும் விளைந்த நெல்லை விற்கமுடியாமல் உள்ளதாகவும் வெள்ளத்தினால் தங்களுடைய விவசாயம் பாழடைந்து விட்டது என்று கூறிக் கருணை காட்டும்படியும் கெஞ்சிய போது உயிருடன் இருக்கவேண்டுமானால் மறுபேச்சுப் பேசாமல் பணத்தைச் கொடுக்கும் படியும், பணம் இல்லாவிட்டால் உறவினரிடம் கடன் வாங்கியோ அல்லது நகைகளை ஈடுவைத்தோ பணம் தர வேண்டும் எனவும் பயமுறுத்தியதை அடுத்து உயிருக்குப் பயந்து கொண்டு அனைவரும் பணம் கொடுத்துள்ளனர்.

இது மாத்திரமல்லாமல் அதிரடிப்படையினர் தாங்கள் இருக்கும் இடங்களில் புதிய கட்டிடங்களைக் கட்டியே முகாமிட்டுள்ளனர். மக்களிடம் இருந்து பறித்த பணத்தில் சீமெந்து வாங்கியும் கல்வாடியில் இருந்து கற்களை பலவந்தமாக எடுத்தும், ஏழை தச்சன், மேசன்மார்களைக் கொண்டு கூலி கொடுக்காமல் வேலை வாங்கியும் கட்டிடத்தைக் கட்டிய பின்னர் பயத்தினால் மக்கள் இடம் பெயர்ந்த வீடுகளில் உள்ள ஓடுகள், மரங்கள், பூச்சாடிகள் என்பவற்றை எடுத்தே இவர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். தற்செயலாக ஒரு வாரத்திற்கு வீட்டில் எவரும் இல்லாவிட்டால், மறுவாரத்தில் அவ்வீட்டில் ஒரு பொருட்களுமே இருக்காது. அனைத்தையுமே அதிரடிப்படையினர் எடுத்துச் சென்று விடுகின்றனர். கடந்த 10 ஆண்டுகால யுத்தத்தின் போது இரண்டு தடவைகள் இடம் பெற்ற அரச படையின் கோரத்தாக்குதலினால் பல நூற்றக்கணக்கான உயிர்களைப் பறிகொடுத்து விட்டு, அதற்குரிய நட்ட ஈடுகள் எதுவும் கிடைக்காமல் தவிக்கும் இக்குடும்பங்கள் மீது மென்மேலும் இடிகள் விழுந்த வண்ணமே இருக்கின்றன. அதிரடிப்படையினரின் இந்நடவடிக்கைகளை எங்கே முறையிடுவது என்று தெரியாமல் மக்களும், ஸ்தாபனங்களும் தவிக்கின்றன.

அண்மையில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசசபைத் தலைவர்களும், உறுப்பினர்களும் அதிரடிப்படை முகாம்களுக்கு அருகில் பாதுகாப்பாக இருந்து கொண்டு அரசியல் நடாத்துகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் இணைப்பதிகாரி பிரிகேடியர் ரொசான் குணாவர்த்தனா அதிரடிப்படையினரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் தனக்கில்லை எனக் கூறுகின்றார். அதிகாரம் இல்லாத இணைப்பதிகாரி இருந்துமென்ன இல்லாவிட்டாலுமென்ன என்கிறார்கள் இப்பகுதி மக்கள். மாட்டிற்கு அனுதாபம் காட்டிய இணைப்பதிகாரிக்கு படுவான்கரை மக்கள் மாட்டிலும் கேவலமாக வாழ்கிறது தெரியவில்லை போலும், ஐயா மோனகுருசாமி அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்கு ஆள் சேர்க்கின்ற வேலையில் திரிகின்றார். அரசாங்கமோ படுவான்கரை மக்களை புலிகளாகவே பார்க்கின்றது. அரசசார்பற்ற நிறுவனங்களும் படுவான்கரையைப் பாவித்தே பணம் எடுத்து சொகுசு வாழ்க்கை நடாத்துகின்றன. அரசாங்கத்தின் பிரதிநிதியாகிய பிரதேச செயலாளர் அதிரடிப் படையின் உத்தரவுப்படியே கடமை செய்கின்றார். இந்நிலையில் இம்மக்களைக் காப்பாற்றவது யார்? மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை போல் இம்மக்கள் தங்களுக்கு விடிவு கிடைக்காதா என அங்கலாய்க்கின்றனர்.

## புத்தளம் ...

டிக்கைகளாலும் பாரபட்சமான கண்காணிப்பாலும் முஸ்லீம்கள் இரண்டாம் பட்சமாக்கப்பட்டுள்ளனர். போத்தாதற்கு புலிகளின் ஊடுருவல் என்று கூறி குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரும் முஸ்லீம்கள் மீதான குரோதத்தை வளர்த்து வருகின்றனர்.

இதன் பிரதிபலனாகவே அடிக்கடி இப்பிரதேசத்தில் சிங்கள முஸ்லீம் மோதல் நடைபெற்று வந்துள்ளன. அத்துடன் சிங்கள மயமாக்கலும் நடைபெற்று வருகின்றன. ஊர் பெயர்கள் கூட சிங்கள பெயர்களாக்கப்பட்டு வருகின்றன. 'இலவங்குளம' எனும் பெயர் இன்று 'எழுவங்குளம்' என்றும் 'வண்ணாத்தி வில்லு' எனும் பெயர் 'வணாத விலுவ' என்றும் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டுள்ளன. ●

# வானமே எல்லை

சரிநிகர் 50வது இதழ் வெளிவருவதையொட்டி உலகளாவிய அளவில் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடக எழுத்துரு என்பனவற்றிற்கான போட்டியொன்றை சரிநிகர் நடாத்தவுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழில் எழுதுகின்ற உலகில் எந்த மூலையிலும் வாழ்கின்ற எவரும் இப்போட்டியில் பங்கு கொள்ளலாம். போட்டியில் பங்கு பற்றுவதற்கு வயதெல்லை கிடையாது.

போட்டி விதிகள்:

1. ஆக்கங்களுக்கான கருப்பொருட்கள் தொடர்பாக எந்தக் கட்டுப்பாடும் இல்லை. -வானமே எல்லை.
2. ஆக்கங்கள் படைப்பாளியின் சொந்தப் படைப்பாகவும், இதற்கு முன் பிரசுரமாகாமலும் ஒலி/ஒளி பரப்பாகாமலும் இருக்க வேண்டும்.
3. மொழி பெயர்ப்புகள், தழுவல்கள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.
4. எல்லா ஆக்கங்களும் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டும்/தட்டச்சில் பொறிக்கப்பட்டும் பத்துப் பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
5. ஆக்கப்பிரதியில் எழுதியவர் பெயர், முகவரி என்பன இடம் பெறக் கூடாது. அவை தனியாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. ஒருவர் எத்தனை போட்டியிலும் பங்கு பற்றலாம்.
7. ஆக்கங்கள் 1994 ஜுன் 15ம் திகதிக்கு முன்னர் கீழுள்ள முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கவிதை/ கட்டுரை/ சிறுகதை/ நாடக எழுத்துரு எனக் குறிப்பிடல் வேண்டும்.
8. ஆக்கங்கள் திருப்பியனுப்பப்பட மாட்டா என்பதால், ஆக்கதாரர் பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது உகந்தது.
9. சரிநிகர்- மேர்ஜ் நிறுவனத்தில் வேலை செய்பவர்களும், அவர்களது உறவினர்களும் இப்போட்டிகளில் பங்கு பற்ற முடியாது.
10. நடுவர் குழுவின் முடிவே இறுதியானது.

## மாணவர்களுக்கு:

இதே தலைப்புகளில் பாடசாலை மாணவர்களிடையிலான போட்டிகளும் நடாத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்கள் தமது ஆக்கங்களை அனுப்பும் போது அப்பாடசாலையின் அதிபரால் உறுதிப்படுத்தப்படும் கடிதமொன்றையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

ஏனைய மேற்கூறிய விதிகள் இவர்களுக்கும் பொருந்தும்.

பரிசு விபரம்:

முதல் பரிசு ரூபா 1000/=ம் சான்றிதழும்
இரண்டாம் பரிசு ரூபா 750/=ம் சான்றிதழும்
மூன்றாம் பரிசு ரூபா 500/=ம் சான்றிதழும்

முகவரி:

நடுவர்குழு,
'வானமே எல்லை,
4,ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்ஸாய
கொழும்பு -05

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன். 1994.05.19
அச்சுப்பதிவு: 334காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்.